விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 27 வெள்ளிக்கிழமை (13.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

## பொதுமக்கள் பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்

### ஐ.நா பிரதிநிதி அறிக்கை



(ஜெனிவா)

பொதுமக்களின் இடங்களில் இருந்து இராணுவம் முற்றாக வெளியேறவேண்டும் என ஐ.நாவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள் குறித்த சிறப்பு பிரதிநிதி சாலோகா பெயானி கூறியுள்ளார்.

தனது இலங்கை விஜயம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டு உள்ளார்.

இலங்கைப் போரினால் இடம் பெயர்ந்தவர்களின் பிரச்சினைக்கு ஒரு காத்திரமான தீர்வைக் காண்பதற்கு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட யுக்தி தேவை என்று ஐ.நாவின் உள்நாட்டில் இடம்பெயூர்ந்தவர்களின் மனித உரிமைகள் குறித்த சிறப்புப் பிரதிநிதி சாலோகா பெயானி கூறியுள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயமசெய்த அவர், அது குறித்த அறிக்கை ஒன்றை ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழு

20-ம் பக்கம் பார்க்க

## நேற்றும் ஒரு பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் நேற்றைய தினமும் மேலுமொரு பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட வாசிப்பின் இறுதி நாளான நேற்றைய தினமே இப பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. தகவல் முகாமைத்துவ

20-ம் பக்கம் பார்க்க

## உணவுப் பொருட்களுக்கு புதிய தரச் சான்றிதழ்

(கொழும்பு)

உணவுப் பொருட்களின் தன்மை குறித்து புதிய தரச் சான்றிதழ் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தர நிர்ணய சபையினால் எஸ்.எல்.எஸ் 1460 என்ற இந்த புதிய தரச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

3 வகையான உணவுப் பொருட்களுக்கு இந்த தரச் சான்றிதழ் இலட்சினை வழங்கப்படும்.

தாவர உண்வுப் பொருட்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சிற்றுண்டி

20-ம் பக்கம் பார்க்க

## பிரதமரை கைது செய்ய ஹெலஉறுமய கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை பிரதமர் டி.எம்.ஜயரட்னவை ஊழல் விவகாரத்திற்கு உடந்தையானமை தொடர்பில் கைது செய்யுமாறு ஜாதிக ஹெல உறுமய, பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. .

அந்த கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த தினமொன்றில் சுங்க திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட பாரிய தொகையான ஹெரோயின் போதைப் பொருளுக்கும் பிரதமர் தரப்புக்கும் தொடர்பு இருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அந்த விடயம் பற்றி தகவல் அறிந்திருந்தால் பிரதமர் பொலிஸாரிடம் முறை

20-ம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் இந்திய துணைத் தூதுவர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபை உறுப்பனர்கள் 7 பேர் இந்தியத் துணைத் தூதுவர் மகாலிங்கத்தைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் இந்திய அரசின் அழுத்தத்தால் 13ஆம் திருத்தச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையின் தற்போதைய நிலை கொணடு செல்வதில் எதிர்நோக்கப்படும் நெருககடிகள் தொடர்பில் கலந்துரையாடியதோடு, 13ஆம் திருத்தச்சட்டத்தினை அமுல்படுத்த இந்தியா உறுதுணையாக இருக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய துணைத்தூதுவர, கலந்து கொண்ட பிரதிநிதிகளின் மாவட்டத்தின் நிலைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.


இச்சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர்களான அன்ரனி ஜெகநாதன், மேரிகமலா குணசீலன, துரைராசா ரவிகரன் மற்றும் மன்னார் மாவட்டப்பிரதிநிதி சிராய்வா வவுனியா மாவட்டப் பிரதிநிதி எஸ்லிங்கநாதன் உள்ளிட்ட 07 பேர் கலந்து கொண்டதாகத் தெரிய வருகிறது.

மேற்படி சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலத்

20-ம் பக்கம் பார்க்க

## மக்கள் நலனில் அக்கறையுள்ள ஆளுநரையே நியமிக்க வேண்டும்

### முதலமைச்சர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

பனையின் கீழ் இருந்து பால் குடித்தாலும் அதனை கள் என்றே பார்வையாளர்கள் கணக்கெடுப்பார்கள்.

இராணுவ அதிகாரி ஒருவர் சிவில் பதவி வகித்தால் மக்களின் பாாவை அதுபோல் தான் இருக்கும்.

ஆகவே மக்கள் நலனைமனதில்கொண்ட

20-ம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபையின் பட்ஜெட் அரசியல் அமைப்புக்கு எதிரானது

### ஆளுநர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு மாகாண சபை தமது முதலாவது வரவு செலவுத்திட்டத்தில், சில புதிய திணைக்களங்களை உருவாக்க முயன்றுள்ளதாகவும், இது அரசியலமைப்புக்கு விரோதமானது என்றும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றிடம் கருத்து வெளியிட்டுள்ள அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும், நாட்டின் அரசியலமைப்பையும், தேசிய கொள்கையையும் மதித்து செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாணசபை தமது முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் புதிய திணைக்களங்களை உருவாக்கும் திட்டங்களை முன்மொழிந்துள்ளது

20-ம் பக்கம் பார்க்க

## எதிர்ப்பின்றி நிறைவேறியது வடக்கு மாகாண பட்ஜெட்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்டம் தொடர்பான இறுதி விவாதம் நேற்றையதினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

மூன்று நாட்களாக இடம்பெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கடந்த 10ஆம் திகதி வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பும், 11 ஆம் திகதி கல்வி, சுகாதார அமைசசர்களிற்கான நிதி யொதுக

20-ம் பக்கம் பார்க்க

சுந்தர்சன் நிறுவனத்தின்
வருடாந்த மாபெரும் மலிவு விற்பனை
14.12.2013 முதல் 22.12.2013 வரை




10,000/- இற்கு மேல் கொள்வனவு செய் ... 50 பேருக்கு 175,000/- பெறுமதியான பரிசில்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாடுகளில் பால்கறக்கும் படையினர்; அதனை கொழும்புக்கு அனுப்புகின்றனர்



(யாழ்ப்பாணம்)

"வன்னியில் நிலங்களை மட்டுமல்லாது மாடுகளையும் அபகரித்து வைத்திருக்கும் படையினர் அந்த மாடுகளிலிருந்து பால் கறந்து கொழும்பிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு ஏற்றுமதி செய்கின்றனர்" என வட மாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வட மாகாண சபையின் வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "யுத்தம் முடிவடைந்த பின்னர் வட பகுதியிலுள்ள இராணுவத்தினருக்கு என்ன வேலை கொடுப்பது என்று தெரியாமல் அரசாங்கம் அவர்களை விவசாயம் செய்வதற்கும் கடை நடத்துவதற்கும் பால் கறப்பதற்கும் ஈடுபடுத்தி வருகின்றது.

வட மாகாணத்தில் கிணற்றிலிருந்து அதிகளவான குடிநீர் எடுக்கின்றமையால் நிலத்தடிநீர் மாசடைகின்றது. அத்துடன் இலங்கையிலுள்ள புற்றுநோயாளர்களில் அதிகமானவர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இதற்கான காரணம் அவர்களின் உணவுகளில் இரசாயனப் பதார்த்தங்கள் கலக்கப்பட்டிருப்பதாகும்.

விவசாயிகள் தங்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை தாங்களாகவே சென்று சந்தையில் விற்பனை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் தங்களின் விவசாய நடவடிக்கையில் புதிய நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை தரமுயர்த்த வேண்டுமென்றும" கூறினார்.

"2014ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை சந்தையில் விற்பனை செய்கின்ற போது 10 வீதத்திற்குள் கொடுக்கும் கழிவு அமைய வேண்டும்.

அத்துடன் வெளி மாவட்டங்களிலிருந்து இங்கு பரீட்சார்த்தமாக நடப்படும் மரங்களான சந்தன மரம், இறப்பர் மரம் போன்ற மரங்கன்று மூலம் புதிய தொற்றுக் கிருமிகள் இங்கு வருகின்றன.

வட பகுதிக்குரிய மரங்களாக கறுத்தக்கொழும்பான் மா மரம், அம்பலவி மா மரம் போன்றன காணப்படுகின்றன. ஆனால் தற்போது இம்மா மரங்கள் குறைவாகவே காய்க்கின்றன.

ஏனெனில் ஆரம்பத்தில் நாங்கள் இலிங்க முறையில் மா மரத்தை நட்டோம். ஆனால் தற்போது மரங்களை செயற்கை முறை மூலம் ஒட்டி இனப்பெருக்கம் செய்கின்றோம். இதனால் ஒரே மரபுரிமை காணப்படாமல் மா மரங்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படுகின்றன" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-4,11)

## விடுதலையான நபர் மீண்டும் கைது கேள்வி எழுப்புகிறது உச்சநீதிமன்றம்!

(யாழ்ப்பாணம்)

போரின் பின்னர் முன்னாள் போராளி என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட ஒருவரை மீண்டும் கைது செய்து தடுத்து வைத்திருப்பதற்கான காரணத்தை கூறுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்ட மா அதிபரிடமே உயர் நீதி மன்றம் மேற்கண்டவாறு உத்தர விட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த ஜோசப் அமலதாஸ் என்னும் கைதியின் மனுவை விசாரித்த போதே உச்சநீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் பொலிஸார் தன்னைக் கடந்த 2010ஆம் ஆண்டு கைது செய்ததாக மனுதாரர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் ஒரு வருடகால புனர்வாழ்வு நடவடிக்கையின் பின்னர் 2012ஆம் ஆண்டு தான் விடுதலை செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட தன்னை பொலிஸார் மீண்டும் கைது செய்து வழக்கு விசாரணை எதுவும் இன்றி தடுத்து வைத்திருப்பதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் புனர்வாழ்வு வழங்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட ஒருவர் ஏன் மீண்டும் கைது செய்யப்பட்டார் என்று அரச தரப்பு சட்டத்தரணியிடம் கேள்வி எழுப்பியது.

அதேவேளை இந்தச் சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் குறித்த தகவல் தன்னிடம் இல்லை என்று இன்னுமொரு கேள்விக்கு பதிலளித்த அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

வழக்கை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம்,இந்த மனுதாரர் மீண்டும் கைது செய்யப்பட்டமைக்கான காரணத்தை அன்றைய தினம் முன்வைக்குமாறு அரச சட்டத்தரணிக்கு நீதிமன்றம் உத்தர விட்டது. (எ-11)


### உடனடியான தொழில் வாய்ப்பு

வருமான பிரச்சினையா ??? தொழில் தேடுகிறீர்களா ??? கவலையை விடுங்கள் ...... 18-55 ஆண், பெண்

சம்மிடம் கொழும்பை அண்மித்த பகுதிகளின் பிரபல்யமான தொழிற்சாலைகளான டொபி/ ஜாம்/ கோடியல்/ பிஸ்கட்/ PVC/ பிளாஸ்டிக்பை/ கோழி இறைச்சி போன்ற தொழிற்சாலைகளில். உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18,000/-, 25,000/-, 38,000/- சம்பளங்களுடன் உற்பத்தி / லேபல் / பொதியிடல் / களஞ்சியப்படுத்தல் பிரிவுகளில் நிரந்தர உடனடி வேலைவாய்ப்பு.

0777 117 661, 0775561883

(C-5738)


## கைதான இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்


அனலைதீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 30 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் என். தம்பிமுத்தன் நேற்று உத்தரவிட்டார்.

இந்திய புதுக்கோட்டை ஜனதாப் பட்டினம் மற்றும் கோட்டைப் பட்டினம் பகுதிகளிலிருந்து 8 படகுகளில் 30 மீனவர்கள் யாழ். அனலைதீவுக்கு அண்மித்த கடற் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட வேளையில், காங்கேசன்துறை கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்

கைது செய்யப்பட்ட 30 மீனவர்களும் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக் கப்பட்டனர். யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரி மேற்படி 30 மீனவர்களையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது அவர்களை எதிர் வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறுநீதவான் உத்தர விட்டார்.

அத்துடன், குறித்த மீனவர்களின் 8 படகுகளையும் காங்கேசன்துறை கடற்படையினரின் பாதுகாப்பில் வைத்துக்கொள்ளுமாறும், மீனவர்களினால் பிடிக்கப்பட்ட மீன்களை அழிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (எ-11)


### காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் 5-ம் நாள் விழா



ஐம்புலனும் மெய் மறக்க ஐயா
உம்மை நாம் நோக்கி உண்மை
அன்போடு உள்ளம் உருகி
உருகி உலகங்கள் யாவையும்
உம்மிடத்தில் கண்டு நீர்
ஊற்றுப் போல எம் மனதில்
நின்று உறையும் இறைவா!
இன்பமான வாழ்வு தந்த
இயற்கைப் பரம்பொருளே!
இயன்றவரை நாங்கள்
இன்றுவரை உம்மோடு
இப்போதும் எப்போதும்
முப்போதும் உம் நினைவே.
காரை.S.கெங்காதரன்

அனுசரணை : super நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


### மனைவியைக் காணவில்லை
## மீட்டுத்தருமாறு கோரி கணவன் உண்ணாவிரதம்

(திருகோணமலை)

வெளிநாட்டில் பணிப்பெண்ணாகச் சென்றுள்ள தனது மனைவியை மீட்டுத்தருமாறு கோரி திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர், மூன்று பிள்ளைகளுடன் நேற்று வியாழக்கிழமை காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

திருகோணமலை, புல்மோட்டை அரபாத் நகர் -01 ஐச் சேர்ந்த அபூபக்கர்- முகமட் ரபீக் என்பவரே, பாத்திமா முபிசா (வயது-10) தரம்-5, முகம்மது வசீம் (வயது-8) தரம்- 4, முகம்மது ரொசான் (வயது-3 ) ஆகிய தனது மூன்று பிள்ளைகளுடன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

வெளிநாட்டுக்கு சென்றிருந்த தான் கடந்த செப்ரெம்பர் மாதம் நாட்டுக்கு திரும்பியபோது மனைவி வீட்டில் இருக்கவில்லை. அலியார் மைமூனாஸ் என்ற பெயரை கொண்ட தனது மனைவியை அலியார் அஸீமா என பெயரை மாற்றி போலியான அடையாள அட்டையை பயன்படுத்தி 2013. 06.13 ஆம் திகதி வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது மனைவியை உள்ளூரிலுள்ள முகவர் ஒருவரே கொழும்புக்கு அழைத்துசென்று போலியான ஆவணங்களை தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனது மனைவி 1970.10.05 ஆம் திகதியன்றே பிறந்திருக்கின்றார். எனினும் 857414915V என்ற இலக்கத்திலேயே அடையாள அட்டை தயாரிக்கப்பட்டுள்ளது. கடவுச்சீட்டு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அடையாள அட்டையும் போலியானது. எனது மனைவியுடைய பிறந்த திகதி உள்ளிட்ட ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள பல பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்வதற்கு சென்றபோதிலும் பல நிலையங்களில் பொலிஸார் தன்னுடைய முறைப்பாட்டை பதிவுசெய்து கொள்ளவில்லை என்றும் சில பொலிஸ் நிலையங்களில் முறைப்பாட்டை எடுத்த போதிலும் எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே தனது மனைவியை உடனடியாக மீட்டுத்தருமாறு உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளதாகவும் உரிய தரப்பினரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காவிடின் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார். (எ-11)

## பரிசில் வழங்கல்

பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிகிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி பொது நூலகத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தி னர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-9,64)

## அடுத்த அமர்வு ஜனவரி 9இல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வு 2014-ம் ஆண்டு ஜனவரி 9-ம் திகதியன்று இடம் பெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 2014-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நேற்றைய தினம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்தே அவைத்தலைவரினால் அடுத்த சபை அமர்வு தொடர்பில் கூறப்பட்டது.

நேற்று பி.ப 3.30 மணிளயவில் வரவு செலவுத்திட்ட விவாதங்கள் நிறைவுற்று ஏகமனதாக நிறைவேற்றப்படுவதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அடுத்த மாகாண சபை அமர்வு 2014-ம் ஆண்டு ஜனவரி 9-ம் திகதியன்று மு.ப 9 மணியளவில் இடம் பெறும் என அவைத்தலைவர் அறிவித்ததனையடுத்து சபையின் நேற்றைய அமர்வு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (எ-4)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி யோககுமாரி மகேந்திரன் அவர்களது தாயார்

## இராஜரட்ணம் சரஸ்வதி

அவர்கள் மரணமடைந்ததையிட்டு அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வதிரி கரவெட்டி.

(சி-5763)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆசைக்கோர் அளவில்லை!

ஒரு ஊரிலே கடவுள் பக்தர் ஒருவர் இருந்தார். அவர் தினமும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வந்தார்.

ஒருநாள் அவர் கோவிலுக்குச் சென்று கடவுளிடம் "எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் நீ கொடுத்தால் நான் உன் சந்நிதியில் ஒரு தேங்காய் உடைக்கிறேன்" என்று வேண்டினார்.

கடவுள் உடனே அவர் கண் முன்னாடி தோன்றி " நீ கேட்ட ஒரு இலட்சம் ரூபாய்"என்று அவன் கையிலே பணத்தைக் கொடுத்து விட்டு மறைந்தார்.

இவனால் நம்ப முடியவில்லை. இவ்வளவு சுலபமாகக் கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் அநாவசியமாக ஒரு தேங்காய் உடைக்கிறேன் என்று வேண்டியிருக்கமாட்டேன். இருந்தாலும் வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியது கடமையாகும் என்று நினைத்தார்.

உடனே பக்கத்தில் உள்ள கடையொன்றிற்குச் சென்றான். ஒரு தேங்காயைக் கையில் எடுத்தான். "இது என்ன விலை" என்று முதலாளியிடம் கேட்டான்.

"ஐந்து ரூபாய்" என்றார் கடையில் இருந்தவர்.

"விலை அதிகமாக இருக்கிறதே" என்றான். "அப்படியென் றால் ஒன்று செய்யுங்கள்... அடுத்த ஊருக்குப்போய் அங்கே யுள்ள தென்னந்தோப்பில் இதைவிட குறைந்த விலைக்கு தேங்காய் வாங்கலாம்" என்றான்.

"சரி" என்று கூறிவிட்டு அடுத்த ஊருக்குக் புறப்பட்டான்.

அங்கே போய் விசாரித்தான்."ஒரு தேங்காய் மூன்று ரூபாய் விலை" என்றார்கள். "இதுவும் அதிகமாகத் தெரிகிறது" என்றார்.

"அப்படியென்றால் அதோ பார்... அந்த ஆற்றோரமாக ஒரு தென்னை மரம் இருக்கிறது. அதிலே நீயே ஏறி பறித்துக்கொள். ஒரு தேங்காய் ஒரு ரூபாய்" என்று தோப்பிற்குச் சொந்தக்காரன் கூறினான்.

இவனுக்கு மரம் ஏறத்தெரியாது. இருந்தாலும் ஆசை யாரை விட்டது? விலையும் அதிகமாக இருந்தது. ஆற்றோரமாகச் சென்றார். தட்டுத்தடுமாறி அந்த மரத்தில் ஏறினார். அந்தத் தென்னை மரம் வளைந்து ஆற்றுப் பக்கமாகப் போய் மறுபடியும் நிமிர்ந்தது. அதாவது மரத்தின் உச்சி சரியாக ஆற்றுக்கு நடு வில் இருந்தது.

இவர் கடவுள் கொடுத்த ஒரு இலட்சம் ரூபாவை மடியிலே இறுக்கிக் கட்டினார். உச்சிக்குப் போய் தேங்காய் பறிக்கிற சமயத்தில் காற்றும் மழையும் பலமாக கலந்து அடிக்க ஆரம்பி த்தது.

இவனது கால் வழுக்கி விட்டது. சட்டென்று ஒரு மட்டையைப் பிடித்துக்கொண்டு தொங்கினான். கீழே பயங்கர வெள்ளம். மடியில் ஒரு இலட்சம் ரூபாய் பணம். இவனது மனம் பதற ஆரம்பித்தது. இந்தச் சமயம் கரையிலே ஒரு யானைப் பாகன் யானையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

"ஐயா"ஒரு உதவி என்று கத்தினான். அவன் "என்ன வேண்டுமென்று" கேட்டான். "உன் யானையை மெதுவாக அழைத்து வந்து எனக்கு நேராக நிறுத்தி என் காலைப்பிடித்து கீழே இறக்கி விடு என் மடியில் இருக்கும் 10 ஆயிரம் ரூபாவைத் தருகிறேன்" என்றான்.

அவன் பார்த்தான் இந்தக்காலத்தில் கால், கை என்பவற்றை பிடித்துவிட்டால் கூட 10 ஆயிரம் ரூபாவை எவருமே தரமாட்டார்கள். இவன் காலைப் பிடித்தால் 10 ஆயிரம் ரூபா தருகி றேன் என்று கூறுகிறான்.

சிறிது நேரம் யோசித்தான். உடனே யானையை அவன் அருகில் கொண்டு சென்று நிறுத்தினான். அவன் காலைப் பிடித்தான். அவ்வளவுதான் அவ்வேளையில் யானை மெது வாக நடந்து அப்பாலே சென்று விட்டது. இப்போது யானைப் பாகன் இவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தொங் கினான்.

இப்போது யானைப் பாகன் சொன்னான், தம்பி!...மட்டையை விடாதே!... கெட்டியாகப் பிடித்துக்கொள்! நான் உனக்கு 10 ஆயிரம் ரூபா பணம் தருகிறேன்... இதோ மடியில்தான் வைத் திருக்கிறேன் என்றான்.

மேலே தொங்கிறவனுக்கு இந்த நிலைமையிலும் ஒரு பெரிய சந்தோசம். மேற்கொண்டு ஒரு 10 ஆயிரம் ரூபா பணம் தனக்கு கிடைக்கும் போல் இருக்கிறதே என்று நினைத்து தனது மனதை தேற்றிக் கொண்டான். இந்த சமயத்தில் ஒருவன் ஒட்டகத்தை குளிப்பாட்டிக் கொண்டு இருப்பதை இந்த யானைப்பாகன் கண்டுவிட்டான். ஐயா ஒட்டகக் காரரே அதை இங்கே கொண்டு வாருங்கள். எங்கள் காலை பிடித்து இறக்கி விடுங்கள் . நாங்கள் பணம் தருகின்றோம். அவனும் பணத்திற்கு ஆசைப்பட்டு வந்து அவனது காலைப் பிடித்த சமயம் ஒட்டகமும் நழுவிப்போய் விட்டது. இப்போது மூன்று பேரும் வரிசையாகத் தொங்கிக் கொண்டிருந்தார்கள். தம்பி மட்டையை விட்டுவிடாதே. கெட்டியர்கப் பிடித்துக் கொள். நான் என் மடியிலே இருக்கிற 5 ஆயிரம் ரூபாவை உனக்குத் தருகிறேன் என்றான். மேலே தொங்குகிறவனுக்கு இன்னும் சந்தோசம். இவனும் பணம் தருகிறேன் என்று கூறுகிறான். அப்படியென்றால் இன்றைக்கு நமக்கு மொத்த வரவு எவ்வளவு என்று ஒவ்வொன்றாகக் கூட்டிப் பார்த்தான். மனக்கணக்கு சரியாக வரவில்லை. உடனே விரலைவிட்டு எண்ண ஆரம்பித்தான். அவ்வளவுதான். மட்டையை விட்டு கை நழுவி வந்துவிட்டது.

மூன்று பேரும் பொத்தென ஆற்றிலே விழுந்தார்கள்.

படாதபாடுபட்டு தட்டுத் தடுமாறி கரைக்கு வந்து சேர்ந்தார்கள். மூன்று பேரின் மடியில் வைத்திருந்த பணமும் ஆற்றோடு அள்ளுண்டு சென்றுவிட்டது.

"பேராசை பெரும் நட்டம்" அப்படியென்று ஒரு பழமொழி உள்ளது. அதை விளக்குவதற்காகத்தான் இக்கதை கூறப்பட்டது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரச ஆதரவுடன் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது

## த.தே.ம.முன்னணி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனிதவுரிமைகள் தினத்தன்று திருகோணமலை பேருந்து நிலையத்திற்கு அருகில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமற் போனவர்களது உறவுகளை பொலிஸார் முன்னிலையில் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் கடந்த பின்னரும் சர்வதேச மனிதவுரிமைகள் தினத்திலும் கூட தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்க முடியாதளவிற்கு மோசமான அடக்கு முறையே இங்கு காணப்படுகின்றது.

இத்தாக்குதல் சம்பவத்தையும் அதனை வேடிக்கை பார்த்த பொலிஸாரது நடவடிக்கைகளையும் தமிழ்த் தேசியக் மக்கள் முன் னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கண்டனச் செய்தியில் குறிப்பிட்டுள்ளவை வருவமாறு;

காணாமற் போனவர்களை தேடியறியும் குழுவினால் இப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் காணாமற் போனவர்களது உறவினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் மற்றும் ஆதரவாளர்களுமாக பெருமளவானோர் அதில் கலந்துகொண்டிருந்தனர்.

போராட்டம் திருகோணமலை பேருந்து நிலையத்திற்கு அருகில் காலை 11 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நோக்கி சிவிலுடையில் சென்ற சிலர் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியுள்ளனர்.

தாக்குதலாளிகள் சிங்களத்திலும் அரைகுறைத் தமிழிலும் கீழ்த்தரமான வார்த்தைகளால் அச்சுறுத்தி தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் ஏற்பாட்டாளர் சுதந்தரம் மகேந்திரன், மூதூர் பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் திருச் செல்வம் மற்றும் பெண்கள், முதியவர்களென பெருமளவானர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் மகேந்திரன் உட்பட இருவர் மட்டுமே சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான பெண்களும் ஏனையவர்களும் அச்சுறுத்தல் காரணமாக வைத்தியசாலைக்கு செல்லாது வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

முகங்களை மறைத்துக் கட்டியவாறு உளவுத் துறையினருடன் இணைந்து சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்ட சிலருமாக சுமார் 50 பேர் கொண்ட குழுவினரே மேற்படி தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற போது பொதுமக்களைப் பாதுகாக்கவோ, தாக்குதலாளிகளை தடுக்கவோ, கைது செய்யவோ பொலிஸார் முற்படாது கைகட்டி வேடிக்கை பார்த்துள்ளனர்.

தாக்குதலின் பின்னர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்வதற்கு மகேந்திரன் முயன்ற போது பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரியின் நடவடிக்கை தன்னை அச்சுறுத்தும் வகையிலும் முறைப்பாடு செய்யாமல் திரும்பிச் செல்லவைக்கும்நோக்கிலும் அமைந்திருந்ததாகவும் அவர் எம்மிடம் தெரிவித்தார்.

பொலிஸாருடைய நடவடிக்கைகளை நோக்கும் போது மேற்படி பொது மக்கள் மீதான தாக்குதலின் பின்னணியில் அரசாங்கம் இருந்துள்ளது என்பதையேவெளிப்படுத்து கின்றது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சுயதொழில் கடன் திட்ட பயிற்சி

(குனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரால் செதி சுயதொழில் கடன்திட்ட வருமான வேலைத்திட்டப் பயிற்சி நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை யாழ்.கச்சேரி நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தில் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

கடன் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் இக் கருத்தமர்வில் தவறாது கலந்து கொள்ளவேண்டுமென தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்டக் காரியாலயம் அறிவித்துள்ளது.

சுயதொழில் ஊக்குவிப்பிற்காகவே மேற்படி கடன் திட்டம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-37)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | | 40 |
| உருளைக்கிழங்கு | 70-100 | 100 | | 100 |
| பச்சைமிளகாய் | 50-90 | 80 | | 80 |
| தக்காளி | 30 | 40 | 35 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | | 40 |
| கோவா | 20 | 20 | | 40 |
| கரட் | 30 | 40 | | 80 |
| பூசணி | 30 | 30 | | 40 |
| புடோல் | 20 | 40 | | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | | 60 |
| சின்ன வெங்காயம் | 120-220 | 170 | 200-240 | 200 |
| பெரிய வெங்காயம் | 60-100 | 120 | | 120 |
| பாகற்காய் | 100 | 80 | | 100 |
| வெண்டிக்காய் | 40 | 30 | | 80 |
| கருணைக் கிழங்கு | 25 | 30 | | 60 |
| பயற்றங்காய் | 110 | 80 | | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | | 80 |
| பீற்றூட் | - | 40 | | 80 |
| கறிமிளகாய் | - | 150 | | 140 |
| முருங்கைக்காய் | 320 | 80 | | 200 |
| போஞ்சி | 140 | 140 | | 140 |
| கீரை - 1 பிடி | 10-20 | 40 | | 35 |
| தேசிக்காய் | 80-110 | 80 | | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 30 | 35-45 |
| இராசவள்ளி | 200 | 160 | | 240 |
| கத்தரி தம்புள்ளை | 30 | - | - | - |

# இராசி பலன்

13.12.2013
(கார்த்திகை 27, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 11.19 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 7.04 மணிவரை
இராகுகாலம் 10.50-1.20 மணிவரை
சுபநேரம் 6.20-7.50 மணிவரை
ஏகாதசி விரதம்,அமிர்தசித்தம்

**மேடம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், போசனசுகமுண்டு, அதிகாரிகளுடன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது.

**இடபம்** பிறரது ஏமாற்றங்களுக்கு உட்படலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில தகவல்கள் ஏற்படலாம், போசன சுகக்குறைவுகள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும்.

**மிதுனம்** வருமானம் திருப்தி தரும், பிறர் உதவியுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,உற்சாகமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** இஷ்ட சித்தியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**சிங்கம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட முற்படுவீர்கள் தெய்வீக சிந்தனை மேலோங்கும் தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** மனச்சஞ்சலங்கள் கூடும், போசன சுகமுண்டு, பிரயாண பயமுண்டு, தேகநலன் பாதிக்கப்படலாம், சிலர் கௌரவக்குறைவாக நடந்து கொள்ளலாம்.

**துலாம்** மனோ தைரியம் கூடும், கௌரவமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், களஸ்திர நன்மையுண்டு.

**விருச்சிகம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, சந்தோசமான சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், போசன நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பிள்ளைகளால் பெருமையடைவீர்கள்.

**மகரம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், தனவிரயம் கூடும், செய்தொழில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** மாதர் நட்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், உடன் பிறந்தவர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்ட முற்படுவர், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** வாக்கு மேன்மையுண்டு போசன சுகக்குறைவுண்டு பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும் எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள் போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்


(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின், யாழ்.மாவட்ட பயிற்சி நிலையத்தினால் கணனி வன்பொருள் தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறியில் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்குறித்த பயிற்சி நெறிக்கு விண்ணப் பிக்கவுள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த.(சா/த) வரை கற்றிருப்பதுடன், விண்ணப்பமுடிவுத் திகதியன்று 16-35 வயதிற்கு மேற்படாத வராக இருத்தல் அவசியம்.

விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பன உள்ளடங்கலாக சுயமாக தயாரிக்கப்பட்ட சுய விபரக் கோவையை மாவட்ட முகாமையாளர், NAITA இல.44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

அத்தோடு, அனுப்பப்படுகின்ற காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் கணனி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-9)




# வியாவில் சைவ வித்தியில் ஆன்மீக வதிவிடமுகாம்

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் சின்மய பாலவிஹறார் ஆன்மீக வதிவிட முகாம் இன்று வெள்ளிக்கிழமை காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான மாண வர்களுக்கு நம்மால் முடியும் எனும் கருப் பொருளில் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா தலைமையில் நடத்தப்படும். இம்முகாமானது யோகாசனம், தியானம், ஆன்மீக உரை பயிற்சிப்பட்டறைகள், விளையாட்டுக்கள், பஜனை, சத்சங்கம் கலை நிகழ்வுகள், முகாம்தீ, குருபாதுஹா பூஜை மற்றும் பல அம்சங்களை கொண்டுள்ளன. இதில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இம்முகாமானது சிறுவர்களின் ஆளுமை மற்றும் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்ய உதவுவதுடன் அவர்களின் தனித்துவ திறமைகளை வெளிக்கொணரக் களமாக அமைவதோடு இன்றைய சிறார்களை நல்லொழுக்கமுள்ள தலைவர்களாக உருவாக்கும் தூரநோக்கின் ஒரு படிக்கல்லாக நடத்தப் படுகின்றது. (அ)

# கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆசிரிய சேவை முன் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)



இவ்வாண்டு புதிதாக நியமனம் பெற்ற உடற்கல்வி, தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா ஆசிரியர்களுக்கு 14 நாட்கள் வதிவிட ஆசிரியசேவைமுன் பயிற்சிகள் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ள இப்பயிற்சி நெறி எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இதில் 120 உடற்கல்வி ஆசிரியர்களும் 40 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரியர் களும் பங்கு பற்றுகின்றனர்.

இப்பயிற்சி நெறியின் போது கற்றல், கற்பித்தல், முறையியல், பாடத்திட்டம் தயாரித்தல், கல்விக் கொள்கைகள், விளையாட்டு, தகவல் தொழில்நுட்ப அறிவு, அழகியற் செயற்பாடுகள், ஆன்மீக தியானம், கல்வி உளவியல், ஆசிரியர் சுய விபரக் கோவை, ஆசிரியர் தரங் கணிப்பு, பாடசாலைகளின் கணக்கு நடைமுறைகள், தர உள்ளீடு நிதிவிடயங்கள் என்பன வழங்கப்பட்டு, முழுமையாக பயிற்சியை பூர்த்தி செய்பவர்களுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் தெரிவித்துள்ளார். (அ-9)

# கரவெட்டி பிரதேச செயலகம் ஊடாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது

(கரணவாய்)

வடமாகாண சமூக சேவை திணைக்களம் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் கரவெட்டி பிரதேச செயலகம் ஊடாக தேவையுடையவர்களுக்கு நிதியுதவி வழங்கி வருகின்றது.

இதற்கமைய நேற்று முன்தினம் கரவெட்டி பிரதேச செயலகத்தின் சமூக சேவைப் பிரிவினூடாக மாதாந்தம் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக செல்பவர்கள் மூன்று பேருக்கு போக்குவரத்துச் செலவாக தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வர்களென தெரிவு செய்யப்பட்ட 19 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவாக தலா 15 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. இக் கொடுப்பனவுகள் பிரதேச செயலர் எஸ்.சிவசிறியினால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகளாக கரவெட்டி கிழக்கு, மேற்கு, உடுப்பிட்டி, கரணவாய் மத்தி, கோயிற்சந்தை, துன்னாலை, நெல்லியடி, நவிண்டில் போன்ற கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேச மக்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஆடு, மாடு வளர்ப்பு, தையல் வேலை, கடை முதலீடு, கைவேலைகள் போன்ற சுய தொழில்களுக்கே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. (அ-9-60)

# நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் என்.சண்முகலிங்கம் எழுதிய அறிவின் சமூகவியல் சிந்தனைகள் எனும் நூல் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வு சமூகவியல் துறையைச் சேர்ந்த திருமதி பகீரதிரசனன் ஜீவேஸ்வரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வரவேற்புரையை சமூகவியல் சமூகத் தலைவர் செல்வி ரா.வக்சலா நிகழ்த்தவுள்ளார். நூலின் வெளியீட்டுரையை சமூகவியல்துறை இ.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்த, நூலின் முதல் பிரதியை கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவன சி.ராஜ்குமார் பெற்றுக் கொள்ளவுள்ளார். அத்தோடு மதிப்பீட்டுரையை பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் ஏற்புரையை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆற்றவுள்ளனர். (அ-9)

# யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள் நாளை


(யாழ்ப்பாணம்)

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை நிறுவனத்தினால் சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள் நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.


இதற்கமைய நாளை சனிக்கிழமை தொடக்கம் 18 ஆம் திகதி புதன்கிழமை வரை மாலை 4 மணிக்கு இணுவில் அறிவாலயத்திலும் 19 ஆம் திகதி வியாழக்கிழமையிலிருந்து 23 ஆம் திகதி திங்கட்கிழமை வரை மாலை 4 மணிக்கு சுன்னாகம் பெரியபுலம் மகாமாரி அம்மன் கோயில் கல்யாண மண்டபத்திலும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அத்தோடு தற்சோதனைப் பயிற்சிகள் வண்ணார் பண்ணை தவமையத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளன. இதில் அகத்தாய்வு -IV ஆம் நிலை நாளை சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களும், அகத்தாய்வு -I ஆம் நிலைப் பயிற்சிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சிகளை மனவாளக் கலைப்பேராசிரியர் எஸ். இந்திரா வழங்கவுள்ளார். (அ-9)





யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தினரால் பாரதி விழா யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணா அடகு சேவை

இல. 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்,
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
பதிவு இல:- J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2012 ஆம் ஆண்டு (31.11.2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2014) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 15.01.2014 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல. 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 4900311

உரிமையாளர்

இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046



உ
குருவே துணை



## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும் வருடாந்த திருவாசக விழா-2013




இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:- 14.12.2013 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில்

❖ ஆசியுரை:- நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

❖ சிறப்புச் சொற்பொழிவு:-
விடயம்:- இமைப் பொழுதும் என்நெஞ்சில்
வழங்குபவர் செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன்

❖ திருவாசக இன்னிசை வழங்குபவர்:- செல்வி தனசொரூபி நவரெட்ணம் (பக்கவாத்திய சகிதம்)

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக ஆச்சிரம மண்டபத்திற்கு திருவாசக பாராயணத்துடன் எடுத்து வரப்படும்.

குறிப்பு:- 08.12.2013 திருவாசகப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் திருவாசக விழாவின் போதே அறிவிக்கப்பட்டு அவர்களுக்குரிய பரிசில்கள் வழங்கப்படும். பங்கு பற்றிய அனைத்து மாணவர்களும் தவறாது சமூகம் தரவும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(4819) சந்நிதியான் ஆச்சிரமம் செல்வச்சந்நிதி. பேரவையினர்.



## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

### காணி கட்டடம் மற்றும் பாரவூர்திகள் விற்பனை செய்வதற்கான மீண்டும் மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான மின் தறியாலைக் கட்டடத்துக்கு மேற்குப்பக்க பட்டின சபை வீதிக்கும் தெற்குப் பக்க ஒழுங்கையிலுமுள்ள நிலப்பரப்பு 05 விஸ்தீரணமுடைய காணி கட்டடத்துக்கும் மற்றும் பென்ஸ் 24/2533, லேடன்ட் NPGJ-0031 இலக்க பாரவூர்திகளுக்கான மீண்டும் மூடிய கூறுவிலை கோரி விற்பனை செய்யப்படவுள்ளது.

நிபந்தனைகள்

01. மேற்படி ஆதனம் மற்றும் பாரவூர்திகளைக் கொள்வனவு செய்ய விரும்பு பவர்கள் தமது கூறுவிலைகளைச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்து கடித உறைலிட்டு சீல் செய்து 26.12.2013 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக பொதுமுகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

02. கேள்விகளை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

03. கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

04. மேற்படி ஆதனம் மற்றும் வாகனங்களைப் பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.
021 2250126


# அரச பொது ஊழியர் சங்கத்தால் பல தீர்மானங்கள் நிறைவேற்றம்

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தினால் கடந்த செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற மாதாந்த நிறைவேற்று முகாமைத்துவ சபைக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்தீர்மானங்கள் வடமாகாண முதலமைச்சர் உட்பட வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடமாகாண அவைத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்துள்ளார். அத்தீர்மானங்களாக,

வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களில் (மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை) காணப்படுகின்ற அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்குரிய பதவி வெற்றிடங்களை நிரப்புதல், பலவருடங்களாக நாட் சம்பள அடிப்படையில் கடமைபுரியும் சுகாதாரப் பணியாளர்கள், வேலைத் தொழிலாளர்கள், சாரதிகள், காவலாளிகள், நூலகப் பணியாளர்கள் உட்பட பல தொழிலாளர் பதவிப் பெயர்களில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவ வேண்டும்.

அத்தோடு வடமாகாண உள்ளூராட்சி மன்ற அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களின் பதவித்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட சேவைப்பிரமாணத்திற்கு அமைவாக சில சபைகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதை எம்மால் அறியக்கூடியதாக உள்ளது. இச்சபைகளில் பல வருடங்களாக எவ்வித பதவி உயர்வுமின்றி ஊழியர்கள் கடமைபுரிவதையும் அறியக்கூடியதாகவுள்ளது. சுற்றறிக்கை, சேவைப்பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக வகுப்பு II, வகுப்பு I வழங்க ஆக்கபூர்வமான பணிப்புரையை வழங்கவேண்டும்.

அ.நி.சுற்றறிக்கை 20/2009 அமைவாக நிரந்தர் நியமனம் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய ஊழியர்கள் பலர் இன்று வரை நிரந்தர நியமனமின்றி இருப்பதையும் அறியக் கூடியதாகவுள்ளது. இவர்களுக்கு உடன் நிரந்தர நியமனம் வழங்க தாங்கள் உதவவேண்டும்.(குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2009.10.31 இற்கு முன்னர் 180 நாட்கள் பணியாற்றிய ஊழியர்கள்) ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-9)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



## பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (பூஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை
- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:- இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829 (சு/5541)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி 3 கி.பா: 29<br>தகைமை/தொழில்: A/L / Finance Section<br>தொ.இ: B/2607 | பிறப்பு: 1970 கிறிஸ்தவம் (RC V)<br>நட்சத்திரம்: ரோகினி உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L / அரச திணைக்களம்<br>எதிர்பார்ப்பு: இனம் கலந்தும் செய்யலாம்<br>தொ.இ: G/2613 |
| பிறப்பு: 1980 கிறிஸ்தவம் (V)<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, Plan Resource Technology / சிரேஷ்ட நிர்வாக இணைப்பாளர்<br>எதிர்பார்ப்பு: மதம் மாறினாலும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/2608 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 20 செவ். 12 இல்<br>தகைமை/தொழில்: BBA / அரச வங்கியாளர்<br>தொ.இ: G/2614 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 53.75 செவ். 2இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, MSc, PHd Maths /ஆசிரியர் (UK Citizen)<br>தொ.இ: B/2609 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 56 சூரி. செவ். 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2615 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 32.5 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / Project Officer<br>தொ.இ: B/2610 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 28.5 சூரி., செவ். 2இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA / பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: G/2619 |

சகல தொடர்புகளுக்கும்:-
# கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## கர்நாடக சங்கீதம் பகுதி II

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக் களுக்கு விடை தருக.**

01. i. மேலைத்தேய வாத்தியங்கள் இரண்டின் பெயரைத் தருக.
ii. மயில் வாகனா என்ற கீர்த்தனையின் இராகம், இயற்றியவர் பெயரைக் குறிப்பிடுக.
iii. சதுர்தண்டிப் பிரகாசிகை என்ற நூலை இயற்றியவர் யார்?
iv. 12 ஸ்வரஸ் தானங்களில் பேதமடையாத ஸ்வரங்கள் யாது?
v. சங்கராபரண இராகத்தின் பிரதிமத்திம இராகம் யாது?
vi. தியாகராஜ சுவாமிகளின் உருப்படிகளின் இரசம் யாது?
vii. ஸரிமபநிஸ், ஸ்நிபமரிஸ் என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம் யாது?
viii. ஜண்டை வரிசைகள் அமைந்துள்ள இராகம் யாது?
ix. சர்வசமய சமரசக் கீர்த்தனை மூலம் அறநெறிக் கருத்துக்களைப் பரப்பிய வாக்கேயகாரர் யார்?
x. திருத்தாண்டகம் பாடப்படும் இராகம் யாது?

**02. பின்வரும் உருப்படிகளில் ஒன்றிற்கு இலட்சணம் எழுதுக.**
1. வர்ணம் 2. இராக மாலிகை 3. தில்லானா

**03. பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு இலட்ணம் எழுதுக.**
1. பந்துவராளி 2. பண் - பழந்தக்கராகம் 3. சிம்ஹேந்ரமத்திமம்

**04. சியாமா சாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றைப் பின்வரும் விடயங்களில் எழுதுக.**
1. வாழ்க்கைக் காலம்
2. பிறந்த இடம்
3. இளமைக் கல்வி
4. வாழ்க்கைச் சம்பவங்கள்
5. இசைப்பணியும் இயற்றிய உருப்படிகளும்
6. சிஷ்யர்கள்
7. உருப்படிகளின் இரசம்
8. முத்திரை

05. 1. சப்தஸ்வரங்களையும் அவற்றின் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களையும் எழுதுக.
2. சப்தஸ்வரங்களும் 12 ஸ்வரஸ்தானங்கள் ஆகும் முறையை விளக்குக.
3. இரட்டைப் பெயர்களுடன் விளங்கும் ஸ்வரஸ் தானங்களை எழுதுக.


06. 1. இசைக் கச்சேரியில் பிரதான பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் தந்தி வாத்தியம் யாது?
2. இவ்வாத்தியத்தில் தேர்ச்சி பெற்ற இரண்டு வித்துவான்களின் பெயர்களை எழுதுக.
3. இவ்வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
4. இதன் அமைப்பு, சுருதி சேர்க்கும் முறையை விளக்கி எழுதுக.

07. 1. 72 மேளகர்த்தா சக்கரத்தில் 5 ஆவது சக்கரத்தின் பெயர் யாது?
2. இச்சக்கரத்தில் இடம்பெறும் மேள எண்களையும் இராகங்களையும், ஸ்வரஸ் தானங்களையும் எழுதுக.

## சித்திரக்கலை பகுதி I

**அனைத்து வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை தருக.**

**கீழ் காணும் புகைப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு 01 தொடக்கம் 05 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை இடைவெளிகளின் மீது எழுதுக.**



மேலே தரப்பட்டுள்ள புகைப்படத்தில் காணப்படுவது 01. .................... காலத்திற்குரியது. 02. ................. இல் வைக்கப்பட்டுள்ள 03. .................. புத்தர் சிலையாகும். இப் புத்தர் சிலையின் ஆசன முறை 04. ..................... உடன், கையின் 05. .................. முத்திரை ஆகும்.

**06 முதல் 10 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**

06. பிரசித்தி பெற்ற அவுக்கண புத்தர் சிலை இந்தியாவின் எக்கலை மரபின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. ............................................
07. எதென்சில் உள்ள குருகுலக்கல்விப் பாடசாலை (THE SCHOOL OF ATHENS) எனப்படும் மறுமலர்ச்சிக் காலத்திற்குரிய ஓவியத்தை வரைந்த ஓவியர் யார்? ..........................................
08. சிந்து வெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட பூசகர் உரு என்ற சிறிய சிற்பம் எவ்வூடகத்தைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது? ................................................
09. கண்டி தலதாமாளிகையின் பத்திருப்பு மண்டபத்தை நிர்மாணித்த கௌரவத்திற்குரிய சிற்பி யார்? ..............................................................
10. இலங்கையின் தேசியக் கொடியினை நிர்மாணித்த கலைஞர் திரு.எஸ்.பீ.சார்ல்ஸ் அவர்களாவார். அதில் அமைந்துள்ள நான்கு அரச இலைகளினால் கருதப்படுபவை எவை?..............................................

**வினா இலக்கம் 11 முதல் 15 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. சிகிரியா ஓவியம் தொடர்பாக பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்களின் கருத்தாவது.
அப்சரா என்பதாகும்.
விஜ்ஜூலதா மேகலதா என்பதாகும்.
அரசரின் அந்தப்புர அரசிகளும் அவர் தம் தோழிகளும் என்பதாகும்.
அக்கால ஓவியர்களின் கற்பனை ஆக்கங்களாகும்.

12. கதை விளக்கச் சித்திரம் (ILLUSTRATION) என்பதற்கு மிகவும் பொருத்தமான விளக்கம்.
மக்களுக்கு மிக விரைவில் செய்தியை பெற்றுத் தருகின்ற ஓவியம் என்பது.
எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட தரைக் காட்சி ஒன்றிற்கு சமமான ஓவியம் என்பது.
கவிதைக்கு, கதைக்கு பொருத்தமான ரேகைகளையும், வர்ணங்களையும் பயன்படுத்தி அல்லது பயன்படுத்தாது வரையப்படும் எளிமையான ஓவியம் என்பது.
நிறுவனமொன்றிற்கு பொருத்தமான இலட்சினை ஒன்றை நிர்மாணிக்கும் முன் வரையப்படுகின்ற மாதிரிப்படம் ஆகும்.

13. பொலனறுவை கல்விகாரை சிலைகளுக்கிடையே காணக்கூடிய விசேட அம்சமாவது.
நான்கு சிலைகளுக்கும் கருங்கல் போன்றே சுண்ணக்கல்லையும் பயன்படுத்தியிருத்தல்.
அங்கவஸ்த்திரம் இரு சமாந்தர மடிப்புக்களாக காட்டியிருத்தல்.
அனைத்துச் சிலைகளிலும் தீச்சுடர் அமைப்பு பயன்படுத்தியிருத்தல்.
வித்தியாதர குகையில் உள்ளது போலவே வெளியிலுள்ள சிலைகளிலும் தியான முத்திரை காணப்படுதல்.


14. இந்தியக்கலையின் சிறப்புமிக்க சாஞ்சி தோரணச் செதுக்கலில் காணப்படுகின்ற சிறந்த ஆக்கமாவது.
புத்தபெருமான் சங்கஸ்ஸபுரத்திற்கு வருகை தருதல்.
தாய் தெய்வத்துடன் கூடிய சிறுபுடைப்புச் செதுக்கலாகும்.
சாலபஞ்சிகா எனும் இயக்கர் உருகொண்ட ஆக்கம்.
சைத்திய புவருவ எனும் அலங்கார தூபத்துடன் கூடிய செதுக்கல் ஆகும்.


15. இந்து மதத்துடன் தொடர்புபட்ட விசேட கட்டட நிர்மாண நுட்பமுறை திராவிடர்களிடம் காணப்படுகின்றது. அக்கட்டடக் கலை.
மினார் எனும் பெயரால் அழைக்கப்படும்
கெடிஹே எனும் பெயரால் அழைக்கப்படும்
நீண்ட வீடு எனும் பெயரால் அழைக்கப்படும்
கோபுரம் எனும் பெயரால் அழைக்கப்படும்

**வினா இலக்கம் 16 முதல் 20 வரை தரப்பட்டுள்ள படங்களுக்கு பொருத்தமான படங்களை A,B,C,D,E ஆகிய படங்களில் இருந்து தெரிந்து பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**



(................) A




(................) B



(................) C



(................) D



(................) E


**வினா இலக்கம் 21 முதல் 25 வரை கொடுக்கப்பட்டுள்ள வசனங்களுக்குப் பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளிநிரப்புக.**

21. இஸ்லாமிய பள்ளிகளில் போலவே உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹாலில் காணப்படும் எழுத்துக்கள் ................. என கருதப்படுகின்றது.
22. கிரேக்க சிற்பக்கலையின் உன்னத காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மயிரன் எனும் சிற்பியின் ........ .............. எனும் சிற்பத்தினூடாக வெளிப்படுத்தப்படுவது விளையாட்டு வீரனின் மெய்நிலையாகும்.
23. இலங்கையின் விசேடமான கட்டிட முறைக்கமைய அமைக்கப்பட்ட தூபியில் சதுரக்கோட்டத்திற்கு பதிலாக இந்தியாவில் உள்ள சாஞ்சி தூபியில் காணப்படுவது ..................... என அழைக்கப்படும் கல்வேலியாகும்.
24. லியனாடோ டாவின்சி எனும் கலைஞரினால் மிலானில் உள்ள சாந்தமரியா டெலா, டெசி எனப்படும் துறவிகள் மடத்தில் உணவருந்தும் மண்டபத்தின் சுவரில் வரையப்பட்டுள்ள ....................... எனும் சிறந்த ஓவியம்டெம்பரா ஓடகத்தினால் தீட்டப்பட்டது.
25. கம்பளை யுகத்திற்கு உரியதெனக் கருதப்படும் கடலாதெனிய விகாரையின் புத்தர் சிலையின் விழிகள் ......................... நிலையில் ஆக்கப்பட்டுள்ளது.

**வினா 26 தொடக்கம் 30 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் போது F,G,H,I,J எனும் உருவப் படங்களைப் பயன்படுத்துக.**

F

G

H

I

J


26. F எழுத்தினால் காட்டப்படும் செதுக்கல் எங்கு காணப்படுகிறது?.........................................
27. G எழுத்தினால் காட்டப்படுவது இத்தாலிய மறுமலர்ச்சிக் கால சிறந்த சிற்பியினால் நிர்மாணிக்கப்பட்ட பியற்றா எனப்படும் சிலையாகும். இதனை நிர்மாணித்த கலைஞர் யார்?.........................................
28. H எழுத்தினால் காட்டப்படும் 43 ஆவது குழு எனப்படும் சித்திரத்தை வரைந்த கொழும்பு காலத்து காட்டூன் கலைஞர் யார்?................................................
29. I எழுத்தினால் காட்டப்படுவது இந்திய சிற்பகலைக்குரிய சாரானாத் புத்தர் சிலையாகும். இதில் காணப்புடுகின்ற முத்திரை யாது?....................................
30. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பூங்கா சிற்பத்தை நிர்மாணித்த கலைஞர் பிரித்தானிய ஹென்றி மூர். அச்சிலையினை குறிக்கும் பெயர் யாது?............................................

**வினா 31 தொடக்கம் 35 வரை காணப்படுகின்ற சொல்லின் பொருளுக்கேற்ப சித்திரக் கலைக்குரிய வசனத்தின் மூலம் விளக்குக.**

31. குவர்ணிக்கா சித்திரம் ..................................................................
32. பன்னாங்கலால் ..................................................................
33. தூரதரிசனம் ..................................................................
34. மடோல் குறுபாவ ..................................................................
35. பிரஸ்கோ புவனோ ..................................................................

**36 தொடக்கம் 40 வரை வினாக்களுக்கு விடையளிக்கும் போது கீழ்க்காணும் உருவப்படத்தைப் இனங்கண்டு ஐந்து வாக்கியம் எழுதுக. இங்கு ஆக்கம் தொடர்பாக கலை மதிப்பீடு எதிர்பாக்கப்படுகிறது.**



36. இனங்காணல் ...... ...... ..........................................
37. கலைஞர் ...... ...... ..........................................
38. ஒழுங்கமைப்பு ...... ...... ..........................................
39. [illegible] ...... ...... ..........................................
40. [illegible] ...... ...... ..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி ஆட்சிமுறைமையை ஒழிக்க சட்டமூலம்-ஐ.தே.க.

(கொழும்பு)

ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழித்து புதிய அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றை கொண்டுவரும் வாக்குறுதியை முன்வைத்து எதிர்வரும் ஜனாதிபதித் தேரதலில் போட்டியிடுவது என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான யோசனை எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் 55 ஆவது வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்படவுள்ளது.

மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ள யோசனைகளுக்கு அந்த கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பது, புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றுவது, வாழ்க்கை செலவை குறைக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது, தலைமைத்துவச் சபை உட்பட பல யோசனைகள் இதில் அடங்கியுள்ளன.

இந்த யோசனைகளை மாநாட்டில் நிறைவேற்ற எண்ணியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (அ-2)

# தெரிவுக்குழு பக்கச்சார்பானது; பிரச்சினையை பேசித் தீருங்கள்

### திருகோணமலை மாவட்ட ஆயர் வலியுறுத்து

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு பக்கச்சார்பானது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வைக்காண துரித நடவடிக்கை எடுக்கவேண்டு என்று அதி வணக்கத்துக்குரிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்துள்ளார்.**



எமது பிரச்சினையை எம்மால் தீர்த்துக்கொள்ள முடியும். எமது பிரச்சினையில் தலையிட்டு குழப்பம் ஏற்படும் என்றால் இந்தியாவின் தலையீட்டைக் கூட ஏற்க முடியாது. ஆனால் உதவிகளை வழங்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நாட்டு நிலைமை தொடர்பாக கத்தோலிக்க ஆயர் பேரவை நேற்றுமுன்தினம் விடுத்துள்ள சுற்றுநிருப ஆவணத்தை கொழும்பில் வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். வடக்கில் புதிய சூழல் ஏற்பட்டுள்ளது.

எனவே ஒற்றுமையுடன் வாழ வேண்டும். தனிநாடு என்பதனை நாங்கள் ஏற்கவில்லை. ஒன்றிணைந்து நாட்டுக்குள் பிரச்சினைகள் இன்றி உரிமையுடன் வாழ வேண்டும்.

அரசியல் தீர்வைக் காண்பதில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இதயசுத்தியுடன் அமைய வேண்டியது அவசியமாகும். அது சிறந்த மருந்தாக அமையவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டிக்கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழு பக்கச்சார்பானது.


அங்கு அனைத்து பிரதிநிதித்துவங்களும் இல்லை.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வைக்காண துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

எமது பிரச்சினையை எம்மால் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். வெளியார் எவரும் எமது பிரச்சினையில் தலையிட்டு குழப்பம் ஏற்படும் வகையில் செயற்படக் கூடாது.

அவ்வாறான நிலைமை என்றால் இந்தியாவின் தலையீட்டைக் கூட ஏற்கமுடியாது. ஆனால் சர்வதேசம் எமக்கு உதவிகளை வழங்கலாம் என்றார். (அ-2)







புகழ் வெளியீட்டகத்தின் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா உள்ளிட்ட ஏனைய விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் விருந்தினர்கள் மற்றும் பொது மக்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

## பாக். கடற்படை தளபதி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் ஆசிவ் சண்டிலா இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கை கடற்படைத் தளபதியின் அழைப்பின் பேரில், இருதரப்பு பயணத்தை மேற்கொண்டு மூன்று பேர் கொண்ட குழுவுடன் இவர் கொழும்பிற்கு வருகைதரவுள்ளார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை இங்கு தங்கியிருக்கும் பாகிஸ்தான் கடற்படைத் தளபதி, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகேயுடன் இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

அத்துடன், பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டுப்படைத் தளபதி, இராணுவத் தளபதி மற்றும் விமானப்படைத் தளபதிகளுடனும் அவர் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

தற்போதைய இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து மீளாய்வு செய்வதற்கும், இருநாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் ஆழமாக்குவது குறித்து கலந்துரையாடுவதற்கும் இந்தப் பயணம் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் கடற்படை தமது இளநிலை அதிகாரிகளை இலங்கையில் சமச்சீரற்ற போர்முறை குறித்த பயிற்சிக்காக அனுப்பி வருகிறது.

அண்மையில் பாகிஸ்தான் கடற்படை நடத்திய அமான் 13 போர்ப்பயிற்சியில் இலங்கை கடற்படைக் கப்பல் ஒன்று முதல்முறையாக பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(கரவெட்டி)

தொண்டைமானாறு எல்லை வீதியிலுள்ள கிணற்றில் இருந்து குடும்பப் பெண் ஒருவரின் சடலத்தை வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்றுமுன் தினம் மீட்டுள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தாயாரான இராஜேந்திரன் ரஞ்சினி (வயது 53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலமானது ஊரணி பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரதேச பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குறித்த பெண்ணின் கணவன் மூன்று நாட்களுக்கு முன்புதான் வெளிநாட்டில் இருந்து வந்ததாகவும் அப் பெண் கடன் தொல்லை தாங்கமுடியாமல் தற்கொலை செய்ததாகவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-11-24)

## ஐ.தே.கட்சிக்காக உயிரையும் தியாகம் செய்வேன்-சஜித் எம்.பி.

(கொழும்பு)

தனது தந்தையான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவை போன்று ஐக்கிய தேசியக் கட்சிக்காக உயிரை தியாகம் செய்ய தயாராக இருப்பதாக அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பெலியத்த பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் பொழுதே அவர் மேற்கண்டாவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியில் இருந்து நபர்களை நீக்க வேண்டும் என்பதை பற்றியே சிலர் பேசுகின்றனர்.

கட்சிக்கு ஆட்களை சேர்க்க வேணடும் என்பது பற்றி பேசுவதில்லை.

ஒருபுறம் என்னை கட்சியின் தலைமைத்துவச் சபைக்கு வருமாறு கூறுகின்றனர். மறுபுறம் வராவிட்டால் வெட்டி எறிந்து விடுவோம் என்று கூறுகின்றனர்.

நான் இந்த மிரட்டல்களுக்கும் கர்ஜனைகளுக்கும் செவி கொடுப்பவன் அல்ல. கட்சியின் வெற்றிப் பாதை பற்றியே நான் எப்போதும் சிந்திப்பேன்.

தோல்வியடைந்து பதவிகளை தக்க வைத்து கொள்ளும் அரசியல் நாடகம் நடத்துபவர்களுக்கு நான் ஒத்துழைப்பு வழங்க மாட்டேன்.

என் தந்தை கூறியது போன்று உண்மை ஒரு நாள் வெல்லும். என் தந்தை ஐக்கிய தேசியக் கட்சிக்காக உயிரையும் தியாகம் செயதார். அவர் உயிரை தியாகம் செய்தது போன்று கட்சிக்காக நானும் உயிரை தியாகம் செய்வேன். இதனை மிகவும் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# பிரம்ம ராட்சகன்!



முதல் கேள்வியாக உலகில் எது பெரியது?" என்று கேட்கும்.

"சரி! அதற்கு அவர்கள் என்ன பதில் சொல்வார்களாம் பாட்டி!"

"இமயமலை என்பார்களாம்!"

"அது சரியான பதில் இல்லையா?"

"ஆம்... பிரம்மராட்சஷன் அடுத்ததாக இரண்டாவது கேள்வியான நல்லதை விட தீமையே அதிகம் செய்யும் சிறிய வஸ்து எது?" என்று கேட்கும்.

"பாம்பின் விஷம் சிறிதாக மருந்துக்கு பயன்படுகிறது. ஆனால், மரணம் விளை விக்கவே அதிகமாக பயன்படுகிறது!" என்பர்.

"அந்த பதிலும் சரியில்லை என்று சொல்லிவிடுமா?"

"ஆமாம்... மூன்றாவது கேள்வியாக உருண்டு வேகமாக ஓடுவது எது?" என்று கேட்கும்.

"அதற்கு என்ன பதில் சொல்வார்கள்?"

"வண்டிச்சக்கரம், பணம் என்று சொல் வர். இந்த பதில்கள் பிரம்ம ராட்சஷனுக்கு திருப்தியை அளிக்காது. உடனே அவர்கள் தலையை கிள்ளி எடுத்து மரத்தில் தொங்க விட்டு விடும். சுடலை... நாம் இங்கிருப்பது ஆபத்தை விளைவிக்கும். வா... போய் விடலாம்," என்று அவனது கையை பிடித் தாள் பாட்டி ராமாயி.

ஆலமரம் அருகில் சென்றான் பேரன். கால்களை அகல விரிந்து பலமாக ஊன்றி இடுப்பின் இருபுறமும் கைகளை பதித்து பெருங்குரலில், "ஏ... பிரம்மராட்சஷா... உன் கேள்விகளுக்கு பதில் சொல்ல வந்திருக் கிறேன். வா... வெளியே... கேள் உன் கேள்விகளை!" என்று கூறினான்.

"யாரடா சிறுவன் என் கேள்விகளுக்கு பதில் சொல்ல தோள்தட்டி வந்திருப்பது?" என்றபடி ஆலமரத்தில் இருந்து வெளி வந்த பிரம்மராட்சஷன், சிறுவன் பயப்படட்டும் என்று தலைகள் தொங்கும் ஆலமரக் கிளைகளை உக்கிரமாக ஆட்டிற்று. அது புயல் வீசு வது போல பயங்கரமாக இருந்தது.

அதைக் கண்டு அஞ்சவில்லை. "ஏ... பிரம்மராட்சகா... உன் உருவம் கண்டு எள்ளி நகை யாடாதே... கேள் உன் கேள்விகளை?" என்றான்.

"சாவதென்று வந்துவிட் டாய உன் விதியை யாரால் மாற்ற முடியும்? என் முதல் கேள்வி இதுதான. உலகி லேயே பெரியது எது?" என்று ஆலமரத்து கிளை களை பயங்கரமாக ஆட்டிய படி கேட்டது.

"உலகில் பெரியது அன்பு," என்றான்.

அதைக் கேட்டதும் பிரம் மராட்சஷனின் கண்கள் கலங்கின. "சரியான பதிலை சொல்லிவிட்டாயே?" என்பதுபோல சுடலையை பார்த்தது.

"அடுத்த கேள்வியைக் கேள்!" என்றான் சுடலை.

"நன்மையை விட தீமையே செய்கிற சிறிய வஸ்து எது?"

"மனிதனின் நாவு!" என்றான்.

தான் நினைத்திருந்த பதிலையே தங்கு தடையின்றி சொன்னதும் பிரம்மராட்சஷன் அசந்து போயிற்று. மூன்றாவதாக தான் கேட்கப் போகிற கேள்விக்கு அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்றெண்ணி, "உருண்டு வேகமாக ஓடுவது எது?" என்று கேட்டது.

"காலம்!" என்றான்.

அடுத்த கணம், "சிறுவனே! என் கேள்வி களுக்கு சரியான பதிலை சொல்லிவிட்ட நீ சிறந்த அறிவாளி தான். நான் தாயன்பை புரிந்து கொள்ளாமல் என் அன்னையை சிறிய வஸ்துவான என் நாவால் திட்டி வதைத் தேன். அவளை கொடுமைப்படுத்தினேன்.

"என்னை பத்து மாதம் சுமந்து பெற்ற அவள் மணி வயிற்றை எட்டி உதைத்தேன். பெற்ற மனம் துடித்தது. நான் என் தாய்க் கிழைத்த கொடுமைகளை பார்த்த ஒரு முனிவர் "நீ பிரம்மராட்சனாகக் கடவாய்" என்று சபித்துவிட்டார். அது போலாகிவிட்டது. நான் தவறுகளை உணர்ந்து" எனக்கு எப்போது சாபவிமோசனம்?" என்று கேட்டேன. காலம் வரும் பொழுது என்று சொல்லி விட்டு போய்விட்டார் அம்முனிவர். அதற்குத் தான் நான் இவ்வளவு நாட்களாக காத்திருந்தேன்.

"உருண்டு வேகமாக ஓடும் காலம் உன் வடிவில் வந்து என்னை சாபத்தில் இருந்து விமோசனமடைய செய்து விட்டது..." என்று சொல்லி சுடலையை வணங்கி எழுந்த போது பிரம்மராட்சஷன் மறைந்து அழகான ஒரு இளைஞன் அங்கிருந்தான்.

அந்த இளைஞன் ஆலமரத்தில் தொங்கிய தலைகளை எல்லாம் எடுத்து மண் தோண்டி புதைத்தான். ஆலமரத்தடியில் இருந்த மேடையையும் பிற பகுதிகளையும் சுத்தப் படுத்தினான். குளக்கரையை சுற்றி வளர் ந்து புதிராக மண்டிக் கிடந்த செடி, கொடி களை நீக்கி குளக்கரையை அழகாக்கி னான்.

பிரம்மராட்சஷனின் கொடிய மூச்சுப்பட்டு வாடியும் கருகியும் போய் இருந்த ஆலமரம் இப்போது பச்சை பசேலென்ற இலைகளோடு காணப்பட்டது. மரத்தை விட்டுச் சென்ற பறவைகள் எல்லாம் திரும்பி ஆலமரத்தில் தங்கின.

அவைகளில் விதவிதமான குரலொலி கள் இனிமையாக கேட்டன. வழிப் போக் கர்களும், யாத்ரீகர்களும் ஆலமரத்தடியில் உள்ள மேடையில் தங்கி ஓய்வெடுத்து குளத்து நீரை பருகி மகிழ்ந்தனர். இவ் வளவுக்கும் காரணமான சுடலையை எல்லாரும் பாராட்டினர். **(முற்றும்)**




- 1577-சேர் பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்தின் பிளைமவுத்தில் இருந்து தனது உலகத்தைச் சுற்றி வரும் பயணத்தை ஆரம்பித்தார்.
- 1642-ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தை அடைந்தார்.
- 1888- யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சூறாவளியில் பலத்த சேதம் ஏற்பட்டது.
- 1937-சீனாவின் நான்ஜிங் நகரம் ஜப்பானியரிடம் வீழ்ந்ததை அடுத்து அங்கு பல பொதுமக்கள் கொல்லப்பட்டும் பாலியல் வதைக்கும் உள்ளாக்கப்பட்டனர்.
- 1941-இரண்டாம் உலகப்போர்: ஹங்கேரி ருமேனியா ஆகியன ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தன.
- 1943-இரண்டாம் உலகப்போர்: ஐக்கிய அமெரிக்காவின் 710 போர் விமானங்கள் ஜேர்மனியின் கீல் நகர் மீது தாக்குதலை நடத்தின.
- 1949-இஸ்ரேலின் சட்டசபை நாட்டின் தலைநகரை ஜெருசலேம் நகருக்கு மாற்ற முடிவெடுத்தது.
- 1959-மக்காரியோஸ் சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதியானார்.
- 1972-அப்பல்லோ 17 விண்வெளி வீரர்கள் யூஜீன் செர்னன் ஹறிசன் ஸ்மித் ஆகியோர் சந்திரனில் இறங்கினர். 20 ஆம் நூற்றாண்டில் சந்திரனில் இறங்கிய கடைசி மனிதர்கள் இவர்களே.
- 1974-மோல்ட்டா குடியரசானது.
- 1981-போலந்தில்இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.
- 1996-ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக கோஃபி அனான் தெரிவுசெய்யப்பட்டார்.
- 2001- இந்திய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலில் தீவிரவாதிகள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003-முன்னாள் ஈராக் அரசுத் தலைவர் சதாம் உசேன் அவரது சொந்த ஊரான திக்ரித்துக்கு அருகே அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டார்.
- 2004-முன்னாள் சிலி சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினோச்சே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- 2006-பாய்ஜீ என்ற சீன ஆற்று டால்ஃபின் அருகிய இனமாக அறிவிக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1926-செ.குப்புசாமி தொழிற்சங்கத் தலைவர் (இ.2013)

**இறப்புக்கள்**

- 1557-டார்ட்டாக்ளியா இத்தாலியக் கணிதவியலாளர் (பி.1499)
- 1944-வசிலி கண்டினஸ்கி ரஷ்ய ஓவியர் (பி.1499)
- 1987-நா.பார்த்தசாரதி எழுத்தாளர் (பி.1932)
- 2010-[illegible] எழுத்தாளர் (பி.1938)
- 2010-ரிச்சர்ட் ஆல்புரூக் அமெரிக்கத் தூதுவர்

### நா.பார்த்தசாரதி



இவர் தமிழ்நாடு விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டத்தில் உள்ள நரிக்குடி என்னும் சிற்றூரில் 1932 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி பிறந்தார்.

புகழ்பெற்ற தமிழ் நெடுங்கதை எழுத்தாளரான, இவருடைய கதைகள் பெரும்பாலும் சமகாலப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போராடும் கொள்கைப் பிடிப்புள்ள கதைமாந்தர்களைப் பற்றியதாய் அமைந்துள்ளது.

இவருடைய புகழ்பெற்ற நெடுங்கதைகளான குறிஞ்சி மலர் மற்றும் பொன் விலங்கு என்பன தொலைக்காட்சித் தொடர்களாகவும் வந்துள்ளன. இவர், சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளார். இவர் எழுதிய சாயங்கால மேகங்கள் என்னும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் 1983 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் நாவல் வகைப்பாட்டில் முதல் பரிசு பெற்றிருக்கிறது. 93 நூல்களையும் எழுதியிருக்கிறார்.

பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும் என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்தார்.

ஆனால், அப்பட்டத்தை வாங்காமலேயே மறைந்துவிட்டார்.

இதய நோய்க்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டு 13 ஆம் திகதி மரணமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலம்



ஆன்மீகம் 66

கருவறை ஓர் அற்புதமான இடம். ஆனால், அது இருட்டாக இருக்கிறது. உங்கள் கண்களும் மூடி உள்ளன. உங்களால் எதையும் பார்க்க முடியாது. இதுதான் பிரச்சனை.

உங்கள் கண்களைத் திறந்து ஒரு விளக்கை ஏற்றிப் பார்த்தால், எப்படி உயிர்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை உங்களால் தெரிந்து கொள்ள முடியும்.

எது உயிரின் மூலமோ, அதை நீங்கள் கண்டறிந்திருக்க முடியும்.

ஆனால், அதில் என்ன பிரச்சனை என்றால், அந்த இடம் இருட்டாக இருக்கிறது.

அது போதாதென்று, உங்கள் கண்கள் வேறு மூடியிருக்கின்றன.

இரண்டுபேர் ஒரு கிணற்றுக்குள் விழுந்துவிட்டார்கள்.


ஒருவர் இன்னொருவரிடம், இங்கு மிகவும் இருட்டாக இருக்கிறது. இல்லையா? என்று கேட்டார். அதற்கு மற்றொருவர், எனக்குத் தெரியவில்லை. என்னால் எதையுமே பார்க்க முடியவில்லை என்றார்.

எனவே, எதிர்காலதம் என்பது- நீங்கள் எத்தனை முறை உங்கள் கைரேகைகளைப் பார்த்திருந்தாலும் எத்தனை முறை நீங்கள் கிரகங்களின் அமைப்புக்களைப் பார்த்திருந்தாலும் எத்தனை எத்தனை முறை உங்கள் ஜாதகத்தைப் பார்த்திருந்தாலும்- எத்தனையோ ஜோசியர்களை கலந்து ஆலோசித்திருந்தாலும்- உங்களுக்கு இன்னும் எதுவும் தெரியவில்லை.

இன்னமும் நீங்கள் இருட்டுக் கிணற்றில்தான் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

அந்தக் காரணத்தினால்தான் அந்த ஒரே ஒரு காரணத்தினால்தான், வாழ்க்கை வாழ்வதில் அர்த்தம் இருக்கிறது.

அடுத்த கணம் என்ன நடக்கப் போகிறதென்று உங்களுக்குத் தெரியாமல் இருப்பதுதான் வாழக்கைக்கு அர்த்தம் கொடுக்கிறது.



இருள் எதிர்மறையான குணமுடையது என்று நான் சொல்லவில்லை.

ஒளி என்பது மிகச் சிறிய விடயம். அது தனக்கு தானே எரிந்து காணாமல் போய் விடும்.

இருள் சிறிய விடயமல்ல. அது அளவிட முடியாதது, எண்ணிலடங்கா சாத்தியங்களை உடையது.

ஏனென்றால், இருள் ஒளியைப் போல ஓர் இருப்பை உடையது அல்ல.

இருள் என்பது இல்லாமல் இருப்பது- இப்படி அது இருக்கும் பட்சத்தில் உங்கள் விருப்பத்திற்கேற்ப எதைவேண்டுமானாலும் நீங்கள் உருவாக்கிக்கொள்ளும் சுதந்திரம் இருக்கிறது.

ஏதோ ஒன்று ஒரு இருப்பாக இருந்தால் அங்கு குறைவாகத்தான் உங்களால் செயற்பட முடியும்.

ஆனால், எதுவுமே இல்லை என்றால், நீங்கள் விரும்பியதெல்லாம் செய்ய முடியும்.

ஆனால், எதை வேண்டுமானாலும் செய்ய வேண்டும் என்றால், அதற்குத் தேவையான திடநிலையும் சமநிலையும் உங்களிடம் இருக்க வேண்டும்.

(தொடரும்)


சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஜெயலலிதாவின் பிரதமர் வியூகம்!



2003 தேர்தலில் 50 எம்.எல்.ஏ.க்கள் பெற்றார். 2008இல் 50 எம்.எல்.ஏ.க்களைப் பெற்றார். இந்த தேர்தலில் அவர் அதே 49 எம்.எல்.ஏ.க்களைப் பெற்றார். நரேந்திரமோடி சென்றதால் சட்டிஷ்கரில் உள்ள 90 தொகுதிகளில், பா.ஜ.க. ஏற்கனவே வெற்றி பெற்ற இடங்களுக்கு மேல் அதிகமாக வெற்றி பெற்றுவிட முடியவில்லை. காங்கிரஸிற்குள் உள்குத்து சண்டையும், ராமன்சிங்கின் நல்ல நிர்வாகமும் இந்த வெற்றியை பா.ஜ.க.விற்கு பெற்றுக் கொடுத்தது. "பா.ஜ.க. அரசின் வளர்ச்சிப் பணிகளின் மீது மக்கள் வைத்த நம்பிக்கைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்று டாக்டர் ராமன்சிங் பேட்டி அளித்திருப்பதில் இருந்தே இது தெரிகிறது.

இந்தியாவின் தலைநகரான டெல்லி சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தமட்டில் பா.ஜ.க.விற்காக கடுமையான பிரசாரத்தை மேற்கொண்டார் நரேந்திரமோடி. இனனும் சொல்லப் போனால் இளைஞர்களின் நாயகன் நரேந்திரமோடி என்றே பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால் டெல்லியில் உள்ள 70 சட்டமன்ற தொகுதிகளில் பா.ஜ.க. 31 எம்.எல்.ஏ.க்களை மட்டுமே பெற்று ஆட்சி அமைக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. அங்கே ஆம் ஆத்மி கட்சி சார்பில் நின்று அரவிந்த் கெஜ்ரிவாலை ஏற்றுக் கொண்ட இளைஞர்கள், நரேந்திரமோடியின் பிரசாரத்தை நம்பி பா.ஜ.க.விடம் ஆட்சியைக் கொடுக்கத் தயாராக இல்லை. 28 இடங்களில் ஜெயித்து இரண்டாவது இடத்திற்கு வந்து விட்டார் அரவிந்த் கெஜ்ரிவால். காங்கிரஸின் ஊழலை எதிர்த்து பிரசாரம் செய்த மோடியின் பிரசாரத்திற்கு டெல்லி கை கொடுக்கவில்லை. ஆனால் அதே பிரசாரத்தைச் செய்த அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு கை கொடுத்திருக்கிறது. இந்த தேர்தல் முடிவுகள் நரேந்திரமோடிக்கு தனிப்பட்ட செல்வாக்கு ஏதுமில்லை. வெறும் இமேஜ் மட்டுமே இருக்கிறது. அந்த இமேஜை வைத்து பா.ஜ.க செல்வாக்குள்ள இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடியும் என்பதை டெல்லி சட்டமன்ற தேர்தல் மட்டுமல்ல- மற்ற ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சட்டிஷ்கர் போன்ற மாநில சட்டமன்றத் தேர்தல்களும் எடுத்துக் காட்டுகின்றன. ஆகவே பிரதமர் வேட்பாளர் என்[illegible] நரேந்திர மோடியை விட [illegible] வரல்ல என்பதை நிரூபிக்க இந்த நான்கு சட்டமன்ற தேர்தலின் முடிவுகள் உதவியிருக்கிறது என்றே தமிழக முதல்வர் ஜெயலலிதா நினைப்பார். அதனால்தான் "இது நரேந்திரமோடியின் பிரசாரத்திற்கு கிடைத்த வெற்றி" என்றோ, "பா.ஜ.க. வெற்று முகாம்" என்றோ எந்தக் கருத்தையும் அ.தி.மு.க.வின் சார்பில் இதுவரை தெரிவிக்கவில்லை.



அ.தி.மு.க.வின் சென்ற பொதுக்குழுவிலேயே "தனித்துப் போட்டி" என்பதை அறிவித்தார் ஜெயலலிதா. அதை இந்தப் பொதுக்குழுவிலும் அறிவிப்பார் என்பதற்கான சாத்தியக் கூறுகளே அதிகம் இருக்கின்றன. இதில் இன்னொரு சிறப்பம்சம் ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சட்டிஷ்கர் போன்ற மாநிலங்களில் டெல்லியைப் போன்று மூன்றாவது பலமான கட்சி ஒன்று நிற்கவில்லை. அங்கு பா.ஜ.க.விற்கு போட்டியாக காங்கிரஸ் மட்டுமே களத்தில் நின்றது. ஆனால் டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி நின்றது. மற்ற மூன்று மாநிலங்களில் காங்கிரசுக்கு போட்டியாக பா.ஜ.க.வை தேர்வு செய்த வாக்காளர்கள், டெல்லியில் காங்கிரசுக்குப் போட்டியாக ஆம் ஆத்மி கட்சியை தேர்வு செய்து விட்டார்கள். இது மூன்றாவது அணிக்கு இந்திய அரசியலில் ஓர் இடம் எதிர்வரும் தேர்தலில் இருக்கிறது என்பதும், அந்த இடத்தில் மாநிலக் கட்சிகள் குறிப்பாக அ.தி.மு.க. போன்ற மாநிலக் கட்சிகளின் [illegible] என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா நினைக்கிறார். இதுவும் அவரை இடது சாரிக் கட்சிகளுடன் மட்டும் கூட்டணி வைத்துக் கொண்டு தனியாக தமிழக தேர்தல் களத்தை சந்திக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குகிறது. ஏனென்றால் அகில இந்திய அளவில் மூன்றாவது அணிக்கு பாசிட்டிவான களம் அமைவது தனது பிரதமர் பதவி விருப்பத்திற்கு ஊக்கம் கொடுக்கும் விதத்தில் அமையும் என்று கருதுகிறார் ஜெயலலிதா.

இப்படியொரு பரபரப்பான பின்னணியில்தான் அ.தி.மு.க.வின் பொதுக்குழு கூடுகிறது. அந்தக் கூட்டத்தில் "ஏற்காடு வெற்றி" பெற்றி அதிரடிப் பேச்சுகள் இடம் பெறும். நாடாளுமன்ற தேர்தல் வியூகங்கள் பற்றி முடிவு செய்யும் அதிகாரம் பொதுச் செயலாளர் என்ற முறையில் ஜெயலலிதாவிடம் கொடுக்கப்படும். ஆட்சியின் சாதனைகள் பட்டியலிடப்படும். ஏனென்றால் பொதுக்குழு முடிந்த கையோடு நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரத்தில் முழு வீச்சில் ஈடுபடப் போகிறது அ.தி.மு.க. ஏற்கனவே நாடாளுமன்றத் தொகுதி வாரியாக குழுக்களை நிர்வகித்து கட்சி நிர்வாகிகளை முடுக்கி விட்டுள்ள அ.தி.மு.க. இனி அ.தி.மு.க.வின் பிரசார வியூகம் என்ன என்பதை தமிழகம் முழுவதுமிருந்து வரும் அ.தி.மு.க. பேச்சாளர்களுக்கு சொல்லித் தரும் அரங்கமாக 19ஆம் திகதி நடக்கப் போகும் பொதுக்குழு அரங்கம் திகழும். அதனால்தான் "இதயதெய்வம் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆரின் வழிகாட்டுதலில் இந்த அரசு செயல்படுகிறது" என்று ஏற்காடு வெற்றிக்கு வாழ்த்துச் சொல்லி, அதே பாணியில் நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்க வியூகம் வகுத்துள்ளார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா.

எம்.காசிநாதன் (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மனித ஆரோக்கியத்திற்கு உதவும் கைக்கடிகாரங்கள்




மனிதர்களின் உடல் ஆரோக்கியத்திற்கு உதவும் வகையில் Garmin நிறுவனம் கைக் கடிகாரம் இரண்டை அறிமுகம் செய்துள்ளது.

Forerunner 220 மற்றும் 620 என்ற அடையாளத்துடன் வெளியாகியுள்ள இவை இரண்டும், இதயத்துடிப்பு மற்றும் உடல் சூட்டை கருத்தில் கொண்டு, ஒருவர் பயணித்த தூரம், விரயமான கலோரி அளவு என்பவற்றை கணிப்பதுடன் உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப மேற்கொள்ளவேண்டிய பயிற்சி, சிகிச்சைகளையும் முன்மொழிகிறது. Bluetooth, wifi இல் இயங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதால் எமது உடல் ஆரோக்கியம் சிறிய வரலாற்று பதிவாக பெற்றுக்கொள்ள முடியும்.

# கணனியை பாதுகாக்க சிறந்த மென்பொருள்




இம் மென்பொருள் பல கணனி பாதுகாப்பு மென்பொருட்களின் ஒரு தொகுப்பாக இயங்குகிறது. உங்கள் கணனியின் வேகத்தை அதிகரிக்கவும் பாதுகாத்துக் கொள்ளவும் அளவில் சிறிய தரமான ஒரு மென்பொருள் என இதைக்கொள்ளலாம்.

**சிறப்புக்கள்:** உங்கள் கணனியில் அழிக்கப்பட்டும் தேங்கி இருக்கும் கோப்புக்கள் அனைத்தையும் அழிக்கிறது. (தேவைப்பட்டால், recovers disk space இல் இருந்தும் அழித்துவிடுகிறது,

இதனால் உங்கள் தரவுகளை எவரும் எப்போதும் மீள பெறமுடியாது!) கணனியில் அழிக்கப்பட்டும் Registry அழிக்கப்படாத கோப்புக்களை தானாகவே இனங்கண்டு அழித்து விடுவதனால், கணனியின் வேகத்தை அதிகரிக்கிறது. தேவையற்ற Shortcuts களை அழித்துவிடுகிறது. கணனி பாவனைக்கு ஏற்ப தேவையான அளவுகளில் நினைவ கங்களை (RAM) ஐ பிரித்துக் கொள்ள உதவும். மேலும் பல செயற்பாடுகள் உண்டு.

இதனை இலவசமாக பதிவிறக்கம் செய்ய கீழே உள்ள முகவரிக்கு செல்லவும்:

http://uploaded.net/file/8l1x901y அல்லது http://rapidgator.net/file/a6308b0592402bb13ae6feb74501f30c/Glary_Utilities.rar.html

# உங்கள் ஸ்மாட்போன் தண்ணீரில் விழுந்தால்?

## சில உதவிக் குறிப்புகள்



அதிக விலைகொடுத்து வாங்கிய உங்களுடைய ஆண்ட்ராய்ட், ஐபோன் தவறுதலாக தண்ணீரில் விழுந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான தீர்வை இப்பதிவில் பார்ப்போம்.

உங்களுடைய விலைமதிப்புடைய iPhone அல்லது ஆண்ட்ராய் வகை போன்கள் (Costly smartphones) தண்ணீரில் விழுந்துவிட்டால் செய்ய வேண்டியவை:

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைவில் உங்களுடைய ஐபோனை தண்ணீரிலிருந்து உடனடியாக எடுத்து விடுங்கள். உடனடியாக உங்களுடைய போனை ஸ்விட்ஸ் ஆப் (Switch Off) செய்யவும்.

அதற்கு உறைகள் (Phone cover) ஏதேனும் இருப்பின் அவற்றை முதலில் நீக்கி விடுங்கள்.

பிறகு நல்ல சுத்தமான கொட்டன் துணியைக் (cotton cloth) கொண்டு உங்கள் Smartphone -I நன்றாக துடைக்கவும்.

தண்ணீரை போக்க உங்களுடைய ஸமார்ட் போனை உதற வேண்டாம். அவ்வாறு போனை உதறுவதாலோ, அல்லது குலுக்குவதாலோ போனில் உள்ளிருக்கும் பகுதிகளுக்கு தண்ணீரானது பரவக்கூடிய அபாயம் இருக்கிறது.

காது துடைப்பான் கொண்டு ஆடியோ ஜாக்கில் (Audio Jack port) உள்ள நீரை அகற்றுங்கள். அல்லது ஒரு துணியை நன்றாக கூர்மையாக முறுக்கி அந்த துளைகளில் விட்டு ஈரத்தை வெளியேற்றுங்கள். மேலும் ஐபோனின் ஹோம் பட்டன், வால்யூம் பட்டன், மியூட் பட்டன், ஸ்பீக்கர், மைக்ரோ போன் உள்ளிட்ட பகுதிகளை நன்றாக துடைத்து ஈரத்தை முடிந்தவரை துடைத்து எடுத்துவிடுங்கள்.

இவையெல்லாம் உங்கள் ஐபோனிற்கு நீங்கள் செய்யும் முதலுதவி மட்டுமே.

பிறகு அருகே இருக்கும் உங்கள் ஐபோன் மாடல் சர்வீஸ் சென்டரில் கொடுத்து அதை சரிசெய்ய முற்படுவதே மிகச் சிறந்த வழிமுறை.

**ஐபோன் தண்ணீரில் விழுவதால் ஏற்படும் பாதிப்புகள்:**

01,iPhone Sensor பாதிக்கப்படும். சென்சார் பாதிக்கப்பட்டதை ஐபோனில் சிவப்பு நிறத்தில் லைட் எரிவதை வைத்து உறுதிப்படுத்தலாம்.

02,home button வேலை செய்யாமல் போகலாம். அதற்கு Onscreen home Button என்ற அப்ளிகேஷனை பயன்படுத்தலாம்.

03,ஆடியோ அவுட்புட் (Audio Out Put) வேலை செய்யாது. அதாவது ஐபோனிலிருந்து சத்தம் எதுவும் வராமல் போகலாம்.

04,ஐபோனில் இருக்கும் ஏனைய முக்கிய பட்டன்கள் அதாவது ஹோம் பட்டன், மியூட் பட்டன், பவர் ஸ்விச் ஆகியவை இயங்காமல் இருக்கும்.

05,இவற்றில் பவர் பட்டனுக்கு மட்டுமே மாற்றீடாக (Alternative Application) எந்த ஒரு அப்ளிகேஷனும் இல்லை. ஏனைய பட்டன்கள் வேலை செய்ய ஆல்டர் நேட் அப்ளிகேஷன் உண்டு.

06,தொடுதிரை (Touch Screen) இயக்கமற்று செயலிழந்து போக வாய்ப்பு உண்டு. அதற்கு புதியதாக Touch Screen மாற்றி அமைத்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர முடியும்.


07,வாட்டர் புரூப் உறைகளைப் (Water Proof Smartphone cases) பயன்படுத்தலாம். அது கூடிய வரையில் உங்களுடைய விலையுயர்ந்த சாதனங்களில் தண்ணீர் உள்ளே புகாமல் பாதுகாக்கும்.

இறுதியாக இந்த வழிமுறையைப் பின்பற்றினால் மேற்கண்ட அனைத்துப் பிரச்சினைகளையும் நிச்சயமாக எளிதாக கையாள முடியும். என்ன வழிமுறை என்கிறீர்களா? கவனமாக இருப்பது ஒன்று உங்கள் ஆண்ட்ராய்ட் போன் முதல் ஐபோன் வரை அனைத்து விலையுயர்ந்த சாதனங்களையும் பாதுகாப்பாக வைத்திட உதவும் (Only careful is the best way to protect Android, iPhone).

அதாவது குறிப்பிட்ட அச்சாதனங்களை எந்தெந்த இடங்களில் வைக்க வேண்டுமோ, எந்தெந்த நேரங்களில் பயன்படுத்த வேண்டும் அந்தந்த இடங்களில், அந்தந்த நேரங்களில் பயன்படுத்தினால் போதும்.

ஏனைய அசௌகரியமான இடங்களில் (unnecessary place) பயன்படுத்துவதை தவிர்த்தாலே இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல், விலையுயர்ந்த உங்கள் தொலைத்தொடர்பு சாதனங்களை பாதுகாத்திட முடியும்.

# இரண்டு ஸ்கைப் கணக்கை ஒரு கணனியில் உபயோகிப்பது எப்படி





ஒரு கணனியில் இரண்டு Skype கணக்குகளை எப்படி இயக்குவது என்பதை இன்று பார்க்கலாம். (இதே முறையில் ஏனைய "தொடர்பு"மென்பொருட்களையும் இயக்க முடியும்.

**முறை 01 :**

உங்கள் கணனியில் Start இற்கு சென்று தேடல் பகுதி (search programs and files) இல் Run என தேடவும். (வின்டோஸ் vista மற்றும்பின் வந்தவை.) பொதுவாக வின்டோஸ உடன் R ஐ அழுத்தினால் Run திறக்கும்.

Run பகுதியில் "C:\Program Files\Skype\Phone\Skype.exe" /secondary இங்கு இருப்பதை அப்படியே copy paste செய்யவும். (" அடியாலம் உள்ளடங்கலாக) (படத்தை பார்க்க)




இப்போது உங்கள் கணினியில் இரண்டு Skype கணக்குகளை இயக்கமுடியும்


மேலுள்ள முறை வேலை செய்யா விட்டால்

**முறை 02 :**


, கணனியில் பதியப்பட்ட Skype இற்கான செயற்படுத்தல் கோப்பை (executable / exe file) ஐ அறியவேண்டும். பொதுவாக C:\Program Files\Skype\Phone என்ற பகுதியில் இருக்கும்.

அங்கு இருக்கும் Skype இலட்சனையுடனான கோப்பில் வலது சொடுகல் செய்து Send to> Desktop (create shortcut) ஐ சொடுகவும். ( படத்தை பார்க்க.)

தற்போது deskவழி இல் இருக்கும் Skype



shortcut ஐ வலது சொடுகல் செய்து Properties ஐ தெரிவு செய்யவும். அங்கு இருக்கும் Target field பகுதியில் ஏற்கனவே இருக்கும் "C:\Program Files\Skype\Phone\Skype.exe" இற்கு அடுத்து /secondary என்பதை இணைத்து ok செய்யவும்.




இனி நீங்கள் ஒவ்வொரு தடவையும் அந்த Shortcut சொடுகும் போதும் இரண்டாவது Skype பயன்பாட்டிற்கு தயாராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஆயிரம் சிறுவர்கள் கல்வியை தொடரமுடியாத நிலையில் உள்ளனர்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

(குருமன்காடு)

**வடமாகாணத்தில் யுத்தம் காரணமாக பாதிப்படைந்து கல்வியைத் தொடர வசதி இல்லாத நிலையில் 12 ஆயிரம் சிறுவர்கள் உள்ளனர் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா அருணோதயா முன்பள்ளியின் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முத்தையா மண்டபத்தில் இடம்பெற்ற போதே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஒரு மனிதனுடைய எதிர்காலத்தை தீர்மானிப்பதில் முன்பள்ளியே அத்திவாரம் இடுகின்றது. நாட்டில் பல முன்பள்ளிகள் இருக்கின்ற போதும் அர்ப்பணிப்புடனும் சிறப்பாகவும் அடித்தளம் இடுகின்ற முன்பள்ளிகள் ஒரு சிலவே. அந்த வகையில் வவுனியாவில் இருக்கின்ற சிறந்த முன்பள்ளிகளில் ஒன்றாக அருணோதய முன்பள்ளி விளங்குகின்றது. சிறப்பான நிர்வாக கட்டமைப்புடன் பாலர் வகுப்பு மாணவர்கள் விரும்பி கற்கும் நிலையமாக அது இருக்கின்றமை பாராட்டப்பட வேண்டியது. எமது சமூகத்தை கட்டியெழுப்புவதில் அக்கறையுடன் செயற்படுவது சிறப்புக்குரியது.

இன்று எமது நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக தாய் தந்தையரை இழந்த ஆயிரக்கணக்கான சிறார்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாது கஷ்டப்படுகின்றார்கள்.

வடமாகாணத்திலே தாய், தந்தை ஆகியோரை இழந்த, காணாமல் போன குடும்பங்களின் மற்றும் நீண்டகால அரசியல் கைதிகளின் பிள்ளைகள் என 12 ஆயிரம் பேர் இருக்கின்றனர். இச் சிறார்களின் எதிர்காலம் இன்று மக்களுடைய கைகளிலேயே தங்கியுள்ளது.

இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு புலம் பெயர் மக்கள், நகரப் பாடசாலைகள், தனவந்தர்கள், தனியார் நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் என்பன உதவி செய்ய முன்வர வேண்டும். உங்களால் செய்யப்படுகின்ற ஒரு சிறு உதவி கூட அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பெரும் உதவியாக அது அமையும்.

இவ்வாறு கல்வியைத் தொட்ர முடியாத பல சிறார்கள் தமது உறவுகளுடன் தினமும் எம்மிடம் வருகிறார்கள். நாங்கள் அவர்களுக்கு முடிந்தளவு உதவி செய்து வருகின்றோம். இது நாம் தனிய செய்து விட முடியாது. அவ்வாறு செய்தும் அவர்களது தேவையை பூர்த்தி செய்ய முடியாது.

இதனை எல்லோரும் சேர்ந்து தான் செய்ய வேண்டும். பாடசாலைகள் தமது பாடசாலைகளில் மற்றவர்களுக்கு உதவி செய்யும் பண்பைத் தூண்ட வேண்டும். அவ்வாறு மாணவர்களுக்கு தூண்டுகின்ற போது அவர்கள் வீடுகளுக்கு போய் சொல்லி பலர் மனித நேயத்துடன் உதவி செய்ய முன்வருவார்கள். தனிய அவ்வாறு உதவி செய்ய முடியாதவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் நாங்கள் அனைவரும் இணைந்து பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உதவி செய்யலாம்.

இவ்வாறான சில சிறார்களுக்கு ரிரிஆர் வானொலி புலம் நாட்டில் இருந்து உதவி செய்து வருகிறது. அதனைப் போன்று ஏனையவர்களும் முன்வரவேண்டும். ஏனெனில் பாதிக்கப்பட்ட எமது சிறார்கள் சொந்தக் காலில நிற்கும்வரை நாம் உதவி செய்ய வேண்டியுள்ளது. அதன் மூலமே அவர்களையும் எமது சமூகத்தில நற்பிரஜைகளாக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

எஸ்.தயாளன் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.எஸ்.ரம்ஸீன், தமிழ் மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் என்.எஸ்.செல்வ ரட்ணம், தெற்கு வலய உதவி கல்விப்பணிப்பாளர் வாகீசன், சிறுவர நனடத்தை உத்தியோகத்தர் தி.மனோகரராஜா, பல நோக்கு கூட்டுறவு சங்க தலைவர் வி.சுப்பிரமணியம் உட்பட பெருமளவானோர கலந்து கொண்டனர். (ம-250)

# சர்வதேச மனித உரிமைகள் தினம்



(கிளிநொச்சி)

கியூடெக்-கரித்தாஸ் வன்னி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஒத்துழைப்போடு சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு சிறுவர் பெண்களை காப்போம் சமுதாயத்தில் விழிப்பாய் இருப்போம் எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு கடந்த 9 ஆம் திகதியன்று கொண் டாப்பட்டது.

அதன் ஓர் அங்கமாக அமைதி பேரணி ஒன்றும் இடம் பெற்றது. இதில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டார்கள். இவ் அமைதிப் பேரணியானது கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு ஏ-9 வீதி யூடாக புனித திரேசாள் மறைக்கல்வி நிலையம் வரை இடம்பெற்றது.

இதில் பங்குபற்றியோர் சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களை தடுப்போம், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம் போன்ற சுலோகங்களை தாங்கியிருந்தார்கள்.

அதன் பின் புனித திரேசாள் மறைக்கல்வி நடுநிலையத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றது. காவேரி கலா மன்றத்தின் சமூக விழிப்புணர்வு நாடகம் இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து வளவளராக பங்குபற்றிய எஸ்.றஞ்சினி, திட்ட உத்தியோகத்தர், சட்ட உதவி ஆணைக்குழு, ஙெண்கள் சிறுவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது அத்னை தீர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும் அதற்கு சட்ட உதவி ஆணைக் குழு எவ்வாறு உதவி செய்யும் என்பதை யும் தெளிவுபடுத்தினார்.

இந் நிகழ்வில் கியூடெக்-கரித்தாஸ் வன்னி நிறுவன இயக்குநர் அருட்தந்தை ஏ.ஜே.யாவீஸ், கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் அதிகாரி ஏ.கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட உள வள துணையாளர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச சிறுவர் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ம-254)

# சமுர்த்தி பயனாளிகளாக உள்வாங்க கோரிக்கை

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்கள் அதிகமாக காணப்படுவதனால் சமுர்த்தி பயனாளிகளாக உள்வாங்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர்.

ஒவ்வொரு கிராமங்களிலும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்கள் சமுர்த்தி கொடுப்பனவை பெறுகின்ற போதிலும் பல மக்கள் சமுர்த்தி பெறாது வறுமை நிலையில் காணப் படுவதனால் ஒவ்வொரு கிராமங்களிலும் சமுர்த்தி பயனாளிகளை உள்வாங்குமாறும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த உரிய தரப்பினர் முன்வர வேண்டுமெனவும் பாதிக்கப் பட்ட மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (ம-263)

# மீன் விற்பனை இடம் துர்நாற்றம் வீசுகிறது



(கண்டாவளை)


விஸ்வமடு பொதுச் சந்தையில் மீன் விற்பனை நிலையம் துர்நாற்றம் வீசுவதாக வர்த்தகர்களும் பொதுமக்களும் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட விஸ்வமடு பொதுச் சந்தையில் உள்ள மீன் விற்பனை நிலையம் புனரமைப்பு செய்யப்படாமல் ஓலைக் கொட்டகையில் காணப் படுவதாலும் கீழே சீமெந்து இடப்பட்டும் கழிவு நீர் வாய்க்கால்கள் அமைக்கப்படாமையினாலும் மழை நீரினாலும் மீனில் இருந்து வடிகின்ற கழிவு நீரினாலும் நிலம் சகதியாக்கப்பட்டு துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன் தொற்று நோய் ஏற்படக்கூடிய அவல நிலையும் உள்ளது.

எனவே உடனடியாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்களும் வர்த்தகர்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)



வவுனியா தோணிக்கல் சரஸ்வதி முன்பள்ளியின் இறுதியாண்டு மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வில் இயக்குநர் அ.முரளிதரன் உரையாற்றுவதனையும் பிரியா விடை பெறும் மாணவர்களையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.


(படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதேச்சதிகார மறுப்புக்களால் புதிதாய் பிறக்கும் சவால்கள்...





பொதுநலவாய மாநாட்டுக்கு மன்மோகன் சிங் செல்லாததால் மனமுடைந்து போயிருக்கும் இலங்கை அரசு அதனைத் தாம் பெரிதுபடுத்தாதது போல நடித்துக்கொண்டிருக்கும் வேளையில், அமைச்சர் சிதம்பரத்தின் இனப்படுகொலைக் கூற்று அதற்குப் பரம ஆத்திரத்தை உண்டுபண்ணியுள்ளது.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் என்ன நடந்தது என்று கேட்டால், எல்லாம் இந்தியாவுக்குத் தெரியும் என்பதே இலங்கை அரசின் பொதுவான பதிலாக அமைந்து வந்துள்ளது.

அதுமட்டுமன்றி, இந்தியாவுக்காகவே இந்தப் போரைத் தாம் நடத்தியதாகவும் இலங்கையின் ஆட்சிப் பீட சகோதரர்கள் அடிக்கடி கூறி வந்துள்னர்.


இலங்கையில் நடைபெற்றது பயங்கரவாதத்திலிருந்து மக்களை மீட்பதற்கான நடவடிக்கை என்றே இலங்கை அரசு இதற்குப் பெயரும் சூட்டியிருந்தது.

இறுதிக்கட்டப் போரின்போது இந்தியப் படையினரின் பிரசன்னம் வன்னியில் தாராளமாக இருந்ததற்குச் சாட்சியங்கள் உண்டு.

காயப்பட்ட பொதுமக்களுக்குச் சிகிச்சை அளிக்கவென புல்மோட்டையில் அமைக்கப்பட்ட இந்தியாவின் வைத்தியசாலையில் பணியாற்றியவர்கள் இந்திய இராணுவத்தையும் அதன் புலனாய்வுத்துறையையும் சார்ந்தவர்கள் என்பதற்கும் நிறைய ஆதாரமுண்டு.

இருப்பினும், இலங்கையில் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு இதுவரை இந்தியா அதிகாரபூர்வமாக எதனையும் சொன்னதாக இல்லை.

இந்த மௌனத்தைக் கலைத்திருக்



கிறார் இந்திய மத்திய அமைச்சரான ப.சிதம்பரம். "இறுதிக்கட்டப் போரின்போது இலங்கையில் இனப்படுகொலை நடந்ததை நான் மறுக்கவில்லை" என்று அமைச்சர் சிதம்பரம் ஒப்புக்கொண்டுள்ளது இப்போதைய பரபரப்பான செய்தி.

இலங்கை நாடாளுமன்றத்தில் விடுதலைப் புலிகளையும் அதன் தலைவரையும் பெருமைப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நவம்பர் 26ஆம் திகதி உரையாற்றியதை, கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், "இந்தக் கருத்து சிறிதரனின் சொந்தக் கருத்து. இதற்கும் கூட்டமைப்புக்கும் சம்பந்தமில்லை" என்று அறிவித்தது ஞாபகமிருக்கலாம்.

இதுபோல, அமைச்சர் சிதம்பரம் கூறியதை, "இது சிதம்பரத்தின் கருத்து. இதற்கும் இந்திய அரசுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்று பிரதமர் மன்மோகன் சிங்கோ அல்லது காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியோ சொல்லவில்லை.

அப்படியென்றால், சிதம்பரம் சொன்னதை இந்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அல்லது இந்திய ஆட்சிப் பீடத்தின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் சிதம்பரம் இதனைக் கூறியுள்ளார் என்று கருத முடியும்.

இந்த விடயத்தை எந்தச் சந்தர்ப்பத்தில் சிதம்பரம் பகிரங்கப்படுத்தினார் என்பதையும் பார்க்கவேண்டியது அவசியம்.

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ச கடந்த வாரம் புதுடில்லி சென்று சில முக்கிய சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார்.

இந்தியக் கடற்படைத் தளபதி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித ஆகியோருடன் மிக மிக முக்கிய பேச்சுவார்த்தைகளை கோதபாய நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், எத்தகைய பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன என்பதை இருதரப்பும் வெளியிட மறுத்து வருகின்றன.

இதற்குச் சில நாட்களுக்கு முன்னர் இந்தியக் கடற்படைத் தளபதி இலங்கை சென்றதும், மகிந்த ராஜபக்சவுடன் இரகசியப் பேச்சு நடத்தியதும் உற்றுக் கவனிக்க வேண்டியவை.

பொதுநலவாய மாநாட்டுக்கு மன்மோகன் சிங் செல்லாததால் மனமுடைந்து போயிருக்கும் இலங்கை அரசு அதனைத் தாம் பெரிதுபடுத்தாதது போல நடித்துக் கொண்டிருக்கும் வேளையில், அமைச்சர் சிதம்பரத்தின் இனப்படுகொலைக் கூற்று அதற்குப் பரம ஆத்திரத்தை உண்டு பண்ணியுள்ளது.

இதன் எதிரொலியாக சில முக்கிய அமைச்சர்கள் சிதம்பரத்தின் மீது பாய்ந்து கடித்துக் குதறாத குறையாக, அறிக்கைகள் வாயிலாகத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

வட மாகாண முதலமைச்சரின் அழைப்பை ஏற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் வட தமிழீழத்துக்குச் செல்லவிருப்பதாகக் கூறி இலங்கை அரசுக்கு மேலும் சூடேற்றியுள்ளார் சிதம்பரம்.

இவருக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் உருவாகியிருக்கும் மோதல் தொடர்வதற்கான சாத்தியம் நிறையவே காணப்படுகின்றது.

மகிந்த அரசு எதிர்கொண்டுள்ள மற்றொரு புதிய சவாலாக பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் 17 உள்ளூர் ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டு அமைந்துள்ளது.

பிரான்ஸின் ஏ.சி.எப்.(அக்ஷன் பாம்) நிறுவனத்தின் ஊழியர்கள் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி கொல்லப்பட்டனர்.

17 ஊழியர்கள்ளையும் முழங்காலில் நிற்கவிட்டு படையினரே சுட்டுக்கொன்றதாக அந்த நிறுவனம் இப்போது தெரிவித்துள்ளது.

"நிரூபிக்க முடியுமா? சாட்சியங்கள் உண்டா? ஏழு ஆண்டுகளாக இதனை ஏன் தெரிவிக்கவில்லை?" என்று இலங்கை அரசு முட்டாள்தனமான கேள்விகளை எழுப்பியுள்ளது.

இதற்கென ஜனாதிபதி விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது. இதில் சாட்சியமளிக்க முன்வந்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்க அரசாங்கம் மறுத்தது.

விசாரணையைக் கண்காணிக்கச் சென்ற சர்வதேசக் குழு விரக்தியடைந்து ஏமாற்றத்துடன் திரும்பியது.

நல்லிணக்க ஆணைக்குழு முன்பாகவும் இவ்விடயம் மீளெடுக்கப்பட்டது. ஆனால், குற்றவாளிகள் எவரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

ஏழு வருடங்கள் இதுதான் நடந்தது. இதனையே ஒரு கேள்வி ஆக்கியுள்ள இலங்கை அரசுக்கு பிரான்ஸ் நிறுவனம் அரியதொரு பதிலை கொடுத்துள்ளது.

"சர்வதேச விசாரணை வந்தால் சாட்சிகளை முன்னிறுத்துவோம். ஆதாரங்களைப் பகிரங்கப்படுத்தி நிரூபிப்போம்" என்பதே அந்த நிறுவனத்தின் பதில்.

ஆக, மூதூர்ப் படுகொலைகளுக்கும் சர்வதேச விசாரணை தேவை என்பது இதனூடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தருணத்தில் மூன்று மேற்கு நாடுகளின் அண்மைய அறிவிப்புகளைக் கவனிக்க வேண்டும்.

இலங்கை அரசு உள்ளக விசாரணை நடத்தும் விடயத்தில் அக்கறை செலுத்தாவிட்டால், சர்வதேசம் பொறுமை இழக்கும். அப்படியான நிலைமை ஏற்படுமானால், சர்வதேச விசாரணை தவிர்க்க முடியாதது" என்று அமெரிக்கா மீண்டும் எச்சரித்துள்ளது.

அதன் இராஜாங்கத் திணைக்களத்தின் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அதிகாரி தேசாய் பிஸ்வால் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை விசாரணை குறித்த பிரித்தானியாவின் காலக்கெடுவில் மாற்றமில்லை. மார்ச் மாதம் ஜெனிவாவில் சுயாதீன சர்வதேச விசாரணையை பிரித்தானிய அரசு முன்னெடுக்கும" என்று பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹேக் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இன்று அங்கு போர் இல்லை. ஆனாலும், அங்கே எந்த முன்னேற்றமும் இல்லை" என்று குறிப்பிட்டுள்ள கனடிய மனித உரிமைகள் விவகார நாடாளுமன்ற செயலாளர் தீபக் ஒபராய், இலங்கை அரசின் மீதான சர்வதேச விசாரணையின் முக்கியத்துவம் அதிகரித்துச் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கில் இருந்து கிளம்பும் அத்தனை கோரிக்கைகளையும் முழுமையாக நிராகரிக்க வேண்டும் என்ற பாதையில் பயணித்துப் பழகிய மகிந்த அரசு, அதன் காரணத்தால் புதிய பிரச்சினைகளை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது.

பழகிப்போன இலங்கையின் வழமையான எதேச்சாதிகார மறுப்புப் போக்கு என்பது, தவிர்க்க முடியாத புதிய சவால்களை உருவாக்கி வருகின்றது.

இதுவே தொடர்கதையாகும் சாத்தியம் அதிகமாகக் காணப்படுகின்றது.

-பனங்காட்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2013-13.01.2014



## மேடம்

**அச்சுவினி, பரணி,**
**கார்த்திகை 1 ஆம் பாதம்**

**தன்னம்பிக்கையோடு பணியாற்றி தக்கவிதத்தில் புகழ் குவிக்கும் மேட இராசி நேயர்களே! சுபகாரியப் பேச்சுக்கள், நல்ல முடிவிற்கு வரும்!**

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உலா வரும் கிரக நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கின்றன. உற்சாகத்தோடு பணிபுரியப் போகிறீர்கள். உள்ளத்தில் அமைதி பிறக்கும். உடன் இருப்பவர்கள் உங்கள் பணிக்கு ஒத்துழைப்புச் செய்வர். கடன் சுமையைக் குறைக்கும் ஸ்தானத்திற்கு அதிபதியானவர் வலிமை இழப்பதால் கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும். வள்ளல்கள் வாயில் தேடி வந்து உதவிக்கரம் நீட்டுவர்.

தனாதிபதி சுக்ரன் தக்கவிதத்தில் 10 ஆம் இடத்தில் பலம் பெறுவதால் பக்கபலமாக இருப்பவர்களின் மூலம் பணவரவு வந்துகொண்டே இருக்கும். எக்காலத்திலும் இல்லாத அளவு சேமிப்பு உயர்கிறதே என்று ஆச்சரியப்படுவீர்கள். மக்கள் செல்வங்களுக்கு மாலையிட்டுப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் நிறைவேறும். தக்க விதத்தில் திருமணங்கள் நடைபெற தானாகவே ஒரு சிலருக்கு வரன்கள் தேடிவரும்.

என்னயிருந்தாலும் 24 ஆம் திகதிக்கு மேல் சுக்ரன் வக்ரம் பெறுகிறார். 2,7 க்கு அதிபதி வக்ரம் பெறும்பொழுது இருப்புக் கொஞ்சம் குறையலாம். பொறுப்புக்கள் கொஞ்சம் கூடலாம். விருப்பங்களை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். திருப்பங்கள் வராதா என்று ஏங்கிய உங்களுக்கு வியாழனின் வக்ரம் மாபெரும் மாற்றங்களை வழங்கப் போகிறது.

வைகுண்ட ஏகாதசியன்று விஷ்ணு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இம்மாதம் வரும் அனுமன் ஜெயந்தியன்று அனுமனுக்கு வெற்றிலை மாலை அணிவித்து வெற்றிகள் குவிய வழிவகுத்துக்கொள்ளுங்கள்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

மகர இராசியில் ஜனவரி 2 ஆம் திகதியன்று புதன் சஞ்சரிக்கப் போகிறார். தனாதிபதியுடன் 6 க்கு அதிபதி இணைவதால் உத்தியோகம், தொழிலில் உயர்வு கிடைக்கும். ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். அந்நிய இனத்தவரால் வளர்ச்சியும் எண்ணிய காரியங்களில் வெற்றியும் உண்டு.

இளைய சகோதரம் இதுவரை ஒத்துவராது இருந்திருக்கலாம். இனி அந்த நிலை மாறும். குரு வக்ரமடைவது யோகம்தான். குடும்ப சுமை குறையும். கொடுக்கல்- வாங்கல்களில் இருந்த சிக்கல்கள் விலகும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாமா? என்ற எண்ணம் குடும்பத்தினருக்கு மேலோங்கும். பிள்ளைகளின் திருமணப் பேச்சுக்கள் முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின் றன. விலகிச் சென்ற வரன்கூட விரும்பி வந்து சேரலாம். வைகுண்ட ஏகாதசியன்று விஷ் ணுவை வழிபட்டால் செய்யும் காரியங்கள் சிறப்பாக வெற்றியடையும்.

**வளர்ச்சியைக் கூட்டும் வக்ர குரு!**

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு இப்பொழுது வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அந்த வக்ர இயக்கம் 2014 மார்ச் மாதம் 2 ஆவது வாரம் வரை நீடிக்கிறது. இக்காலத்தில் எண்ணற்ற மாற்றங்கள் வந்து சேரலாம். பலத்தோடு பார்த்த குரு இப்பொழுது வக்ரமாகித் தன் பார்வையைச் செலுத்துகிறார். பிறக்கும் பொழுது வக்ர இயக்கத்தில் இருந்தவர்களுக்கு இப்பொழுது யோக பலன்கள் ஏற்படும். எனவே, உங்கள் சுயஜாதகத்தை ஒருமுறை புரட்டிப் பாருங்கள்.


குருவின் பார்வை பதியும் இடங்கள் உங்கள் இராசிக்கு 7,9,11 ஆகிய இடங்களாகும். 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. எனவே, தந்தை வழி உறவில் சற்று விரிசல் ஏற்படலாம். இருந்தாலும் குரு தன் வீட்டைத் தானே பார்ப்பதால் பிரச்சினைகளின் முடிவு நல்லதாகவே அமையும். அதேநேரத்தில் விரயாதிபதி வக்ரம் பெறுவது யோகம்தான். இதன் பார்வை பலனால் கல்யாண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

பிள்ளைகள் படித்துவிட்டு வேலைக்கு செல்லவில்லையே என்ற கவலை இனி அகலும். கைநிறைய சம்பாதிக்கும் உத்தியோகம் கிடைக்காவிட்டாலும் கடன் சுமையைக் குறைக்கும் விதத்திலாவது சம்பளம் கிடைக்கும். 9 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும். இடர்பாடுகள் அனைத்தும் இருக்குமிடம் தெரியாமல் மறையும். பங்காளிப் பகை மாறும். லாபஸ்தானத்தை குரு பார்ப்பதால் விரயத்திற்கு ஏற்ற லாபம் வந்து கொண்டேயிருக்கும். வீண் விரயம் ஏற்படாமலிருக்க சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது.

குறிப்பாக பிள்ளைகளுக்குத் தேவையான கணினி, மடிக்கணினி மற்றும் வீட்டிற்குத் தேவையான மின்சாதன்பொருட்களை வாங்குவதில் பணத்தை விரயம் செய்தால் வக்ர வியாழன் நன்மைகளை உங்களுக்கு வழங்கும். ஆடை மற்றும் ஆபரணங்கள் வாங்குவதிலும் ஆர்வம் கூடும் நேரமிது.

## சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வந்து மகிழ்ச்சியளிக்கும்

# சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள்,**
**ரோகிணி, மிருகசீரிடம்**
**1,2 ஆம் பாதங்கள்**

**களைப்பை மறந்து உழைப்பையே மூலதனமாக்கி முன்னேற்றம் காணும் இடப இராசி நேயர்களே! நினைத்தது நிறைவேறும்!**

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உச்ச சந்திரன் உங்கள் இராசியிலேயே உலா வந்து மாதம் தொடங்குவதால் வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். வீட்டு முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் வியாழனின் வக்ர இயக்கத்தால் விரைவில் நடைபெறும். சுற்றத்தார்கள் போற்றுமளவு முன்னேற்றத்தைக் காணப்போகிறீர்கள்.

சூடிக் கொடுத்த சுடர்கொடியாம் ஆண்டாளுக்கு உகந்த இந்த மார்கழி மாதத்தில் அனுமன் ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி போன்ற வைபவங்கள் வருகின்றன. தனாதிபதி வலிமை இழந்திருக்கும் இந்த நேரத்தில் விஷ்ணுவையும் அனுமனையும் வழிபாடு செய்வதால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். ரொக்கத்தால் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும்.

அதே நேரத்தில் குருவும், புதனும் பரிவர்த்தனை பெற்று சஞ்சரிக்கிறார்கள். அஷ்டமாதிபதியும் வலிமை இழந்து பரிவர்த்தனை பெற்றுச் சஞ்சரிக்கிறார்கள். இதனால் இழப்புக்களை ஈடு செய்யும் வாய்ப்பும் உருவாகலாம். சென்ற மாதத்தில் செய்த முயற்சி இப்பொழுது நடைபெறும். குறிப்பாக பதவி இழப்புக்கள் ஏற்பட்டவர்களுக்கு மீண்டும் பதவி வாய்ப்பு கிடைப்பதற்கான சூழ்நிலை உருவாகும்.

தொழிலில் இழப்பு ஏற்பட்டவர்களுக்கு அதை ஈடுசெய்ய வேறு புதிய பாதை புலப்படும். இதுபோல் எதிர்பாராத விதமாக நல்ல சம்பவங்கள் நடைபெறும் விதத்தில் கிரக நிலைகள் இருக்கின்றன. தாய்வழி உறவினர்களின் ஆதரவு பெருகும். தனித்து இயங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய், நொடிகள் அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. அரசு வழி உதவிகள் கிடைத்து ஆச்சரியப்படுவீர்கள். 6 ஆம் இடத்து சனியின் ஆதிக்கம் உச்சம் பெற்றிருப்பதால் அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். உத்தியோக உயர்வு உண்டு.

**மகர புதனின் சஞ்சாரம்!**

இராசிநாதன் சுக்ரனோடு தனாதிபதி புதன் இணைகிறார். தன பஞ்சமாதிபதி இராசிநாதனோடு சேரும்பொழுது தனத்திற்கு பஞ்சம் ஏற்படாது. தக்கவிதத்தில் பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். வழிமாறிச் சென்றவர்கள் மீண்டும் உங்கள் வழிக்கு ஒத்துவருவர். முன்னோர் வழிச்சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். வாகனம் வாங்க வேண்டுமென்ற நீண்டநாள் ஆசை நிறைவேறும் நேரமிது.

**வழிபாடு, வளர்ச்சியைக் கூட்டும் நாட்கள்!**

இம்மாதம் புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜப்பெருமானை வழிபாடு செய்து நலம் காணுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் தாய் வழி ஆதரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன்-மனைவி இடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அரசு வழி உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். ஆடை, ஆபரண சேர்க்கைக்கு மாதத்தின் மையப்பகுதியில் வாய்ப்பு கிட்டும். மாதக் கடைசியில் ஆன்மீகப் பயணங்களை மேற்கொள்வீர்கள். அனுமன் வழிபாடு உங்களுக்குரிய தடை கற்களை படிக்கற்களாக மாற்றிக் காட்டும். செலவும் வரவும் சமமாகும் விதத்திலேயே கிரக சஞ்சாரம் உள்ளது.

**வளர்ச்சியைக் கூட்டும் வக்ர குரு!**

குருப்பெயர்ச்சி பலன்களை நாம் அறிந்து கொண்டு செயற்படுவது போல குரு வக்ரமடையும் பொழுது ஏற்படும் மாற்றங்களையும் நாம் அறிந்து செயற்பட்டால் வெற்றி கிடைக்கும். அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது தன ஸ்தானத்தில் லாபாதிபதியாக விளங்கும் குரு வக்ரம் பெறுகிறார். அதே நேரத்தில் குரு உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியாகவும் விளங்குகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக இராசிநாதன் சுக்ரனுக்கு குரு பகைக் கிரகமாக கருதப்படுவதால் குரு வக்ரம் பெறும் இந்த நேரம்தான் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நேரமாகும்.

கூட்டாளிகள் உங்களுக்கு கூடுதல் லாபத்தைக் கொண்டுவந்து சேர்ப்பர். தீட்டிய திட்டங்கள் யாவும் வெற்றி பெறும். தொடர்ந்து 2014 மார்ச் இரண்டாவது வாரம் வரை அந்த வக்ர குரு இயக்கம் நீடிக்கிறது. குருவின் பார்வை 6,8,12 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் புனிதமடைகிறது. அதனால் ஆச்சரியப்படத்தக்க பலன்களை அள்ளி வழங்கப் போகிறது. எதிரிகள் விலகுவர். தொழில் நிலையத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

உத்தியோகத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இனி மகிழ்ச்சியடையும் விதத்தில் உதிரி வருமானங்கள் பெருகும். மருத்துவச் செலவுகள் குறையும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அமைப்புக்கள் கைகூடி வரும். உங்களைப் பிரிந்து சென்ற உறவினர்கள் பிரியம் காட்டத் தொடங்குவர். 10 ஆம் இடத்தைப் பார்க்கும் குரு முத்தான தகவல்களை முன்னேற்றத்திற்கு அறிகுறியாக வழங்கும். பொருளாதாரத்தில் நிறைவும் பொறுமையோடு காத்திருப்பவர்களுக்கு பெருமையும் வந்து சேரும். தொழில் முயற்சிக்கு அரசு வழி ஆதரவு கிடைக்கும்.

## நினைத்தது நிறைவேறி இன்ப வெள்ளத்தில் திளைப்பீர்கள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இலங்கையில் சிறுவர் உரிமையும் சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும்

(சென்றவாரத் தொடர்ச்சி)....

**உறுப்புரை 39:-**
**புனர்வாழ்வு, பராமரிப்பு**

ஆயுதமேந்திய சண்டைகள், சித்திரவதை, புறக்கணிப்பு, துன்புறுத்தல், சுரண்டல் ஆகியவற்றுக்கு இலக்கான பிள்ளைகள் குணமடைவதற்கான சிகிச்சை பெறுவதையும சமுதாயத்தில் மீண்டும் இணைந்து கொள்வதையும் உறுதிப்படுத்தல் அரசின் கடமையாகும்.



**உறுப்புரை 40:- பால்ய நீதி பரிபாலனம்**

பிள்ளைகள் குற்றம் இழைத்தவர்களாக குற்றம் சாட்டப்பட்டால் சட்ட மற்றும் ஏனைய உதவி பெறும் உரிமை

சட்ட மற்றும் ஏனைய உதவி பெறும் உரிமை உண்டு

அவர்களுக்கு உண்டு.

**உறுப்புரை 41:-நடைமுறையிலுள்ள நியமங்களை மதித்தல்**

சிறுவர் உரிமைகள் தொடர் பான தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வரையப்பட்ட நியமங்கள் இந்தச் சமவாயத்தில் உள்ளவற்றிலும் உயர்ந்தனவாக விளங்கும் பட்சத்தில், உயர்ந்த நியமமே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

**உறுப்புரை 42:-அமுலாக்கல்**

இந்தச் சமவாயத்திற் சொல்லப்பட்டுள்ள உரிமைகளை வயது வந்தோருக்கும் சிறுவர்களுக்கும் பரவலாக அறியச் செய்தல் அரசாங்கத்தின கடமையாகும்.

சமவாயத்தில் எல்லாமாக 54 உறுபபுரைகள் உள்ளன. 42 தொடக்கம் 45 வரையான உறுப்புரைகள், இச் சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றத்தை 5 வருடங்களுக்கு ஒரு முறை ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கையிடும் பொறுப்புப் பற்றியன. 46 தொடக்கம் 54 வரையான உறுப்புரைகள் அரசுகள் சமவாயத்திற்கு தம்மை அர்ப்பணிக்கும் விடயத்தில் பின்பற்ற வேண்டிய நடை

18 வயதிற்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்துவது குற்றம்

முறையை விளக்குகின்றன.

**சிறுவர் தொழிலாளர்கள்**

1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டத்தின்படியும், திருத்தப்பட்ட 1984 ஆம ஆண்டின் 32ஆம் இலக் கச் சட்டத்தின்படியும் 18 வயதிற்குட்பப ட்ட இளம் சிறுவர்களை



வேலைக்க மர் த்துவது குற்றமாகக் கருதப்படுகிறது.

சிறுவர் தொழிலாளர்கள் உருவாவதற்கான காரணங்களை ஆராயும் போது சிறுவர் தொழிலாளர்களுடன் தொடர்புடைய முதன்மையானதும் மிக முக்கியமானதுமான காரணி வறுமையாகும். சிறுவர் தொழிலாளர்களின் தோற்றத்தி ற்கு அச் சிறுவர்க ளின சமூகப் பொரு ளாதாரப் பின்ன ணியும்,



அவர்கள் வாழும் சூழலுமே காரணமாக அமை கின்றன. அத்தோடு மலையக மக்க ளைப் பொறுத தவரை அவர்க ளின் கீழ்மட்ட உழைப்பு அவர்களை வறுமை நிலைக்கு இட்டுச்செல்கின்றது. இதன் காரணமாக பெருந் தொகையான சிறுவர்கள் வீடுகளிலும், கட்டட நிர்மா ணப் பணிகளிலும், கடைகளிலும், கல்லுடைக்கும் நிலையங்களிலும் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். இவ்வாறு சிறுவர்கள் வேலைக்கமர்த் தப்படுவதனால் அவர்களின் கல்வி சம்பந்தமான உரிமைகள், பொழுது போக்குகளில் ஈடுபடுவ தற்கான உரிமைகள் போன்ற பல உரிமைகள் மீறப்படுகின்றன.

கல்வி கற்பதோடு விளையாடிக் கொண்டிருக்க வேண்டிய இச் சிறுவர்கள் தொழில்களில் ஈடுபடுத்தப்படும் போது அவர்களின் உடல், உள வள ர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதன்காரணமாக அவர்கள் ஊன முற்றவர்களாக அல்லது மனவ ளர்ச்சி குன்றி யவர்களாக மாற்ற மடைகின் றனர்.

இவ்வாறான வர்கள் தொடர் ந்து



வாழ்ந்தா லும் அது குடும்பத்துக் கும் சமூகத்திற்கும் சுமையாக அமையலாம். இவைகாரணமாக சிறுவர் தொழிற் செயற்பாடுகள் நேரடியா கவோ அல்லது மறைமுகமாகவோ அப்பிள்ளைகளின் வாழ்க்கையில் தாழ்வான சமநிலையைத் தோற்று விக்கும். இதன் காரணமாக கல்வி யறிவற்ற உடல், உளரீதியாக பல வீனமானதோர் எதிர்காலச் சமு தாயம் தோன்ற வாய்ப்பேற்படும்.

சிறுவர் தொழிலாளர் பிரச்சினைகளிற்கும் அதனோடு தொடர்புபட்ட வறுமைப் பிரச்சினைக்கும் மிக முக்கியமான இன்னொரு காரணியாக அமைவது போதைப்பொருள் பாவனையாகும். குறிப்பாக மலையகத்திலுள்ள அநேகமானோர் போதைப பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். இதன் காரணமாக அவர்களின் வருமானத்தில் மூன்றிலொரு பங்கு மதுவிற்குச் செலவாகின்றது. இது போன்ற நடவடிக்கைகளினால் வருமானப் பற்றாக்குறை ஏற்படுவதால் சிறுவர்களை வேலைக்கமர்த்த வேண்டிய நிர்ப்பந்த நிலை தோன்று கின்றது. இதனால் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஏனைய பிரதேசங்க



ளோடு ஒப்பிடும் போது மலையகத்தில் பாடசாலைக்கு செல்லவேண்டிய சிறுவர்களை வேலைக்கு அனுப்புதல் அதிகமாகக் காணப்படுகின்றது.

பெற்றோர்களால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாமைக்கான இன்னொரு முக்கிய காரணம்

12 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றம்

போதிய பாடசாலைகள் அண்மையில் இல்லாமையும், தூர இடங்களுக்கு அனுப்புவதற்கான செலவைத் தாங்க முடியாமையுமாகும். குறிப்பாக மலையகத் தோட்டப்புறப் பிள்ளைகளினால் பாடசாலைக்கு செல்வதற்கான ஏற்ற நிலைமைகள் சரியாக இருப்பதில்லை. இதனால் அவர்கள் உரிய நேரத்தில் உரிய கல்வித்தகைமையை அடைய முடியாதுள்ளது. இந்நிலைமைகள் மாற்றப்படவேண்டிய அவசரமும் அவசியமும் உடனடித் தேவைகளாக உள்ளன. அத்தோடு பெற்றோரும் தம் பிள்ளைகளின் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடந்து கொள்ளவேண்டிய தேவையுள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் சட்டத்திற்கமைவாக 14 வயதுக்குக் குறைந்த எந்தச் சிறுவர்களையும் வேலைக்கமர்த்த முடியாது. இந்த வயதெல்லையானது நாட்டுக்கு நாடு சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் 12 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். 12 தொடக்கம் 14 வரையான சிறுவர்களை பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் 2 மணித்தியாலங்கள் சிறிய வேலையில் ஈடுபடுத்தலாம். 14 தொடக்கம் 16 வயதுக் குட்பட்டவர்களை கடுமையான வேலைகளில் ஈடுபடுத்த முடியாது. மேலே குறிப்பிட்ட வரையறைகளை மீறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கெதிராகச் சட்டங்கள் பல இருந்தாலும் அவை பொதுவாகச் செயலிழந்தன வாகவே காணப்படுகின்றன.

**கல்வியும் சிறுவர் உரிமையும்**

கல்வி பற்றிய வரைவிலக்கணங்கள மனிதர்களின் சிறந்த வாழ்க்கைக்கு



மிக அத்தியாவசியமான ஒன்றாகக் கல்வி காணப்படுகின்றது. இக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி உலகின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள அறி

### கல்வி என்பது ஓர் ஆய்வு

ஞர்கள் காலத்திற்குக் காலம் பல சிந்தனைக் கருத்துக்களைக் கூறியுள்ளனர். அறிஞர்களால் கூறப்பட்ட வரை விலக்கணங்கள் முழுவதையும் ஆராய்ந்து பார்க்கும் போது கல்வி என்பது ஓர் ஆய்வு என்ற முடிவுக்கு வரலாம். ஒருவன் தன்னையும் தான் வாழும் சூழலையும் அறிந்துகொள்ளத் துணை நிற்பது கல்வி ஆகும். தான் வாழும் சமூகத்தையும் அதன் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் ஆராய்ந்து உணரவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் கல்வி பயன்படுகின்றது. சமுதாயம் காண விளைகின்ற சான்றோனை உருவாக்கிச் சிறந்த ஒரு குடிமகனை நாட்டுக்கு அளிக்க உதவுவதே கல்வியின் பயனாகும்.

**இலங்கையில் கல்வி**

கல்வியைப் பெறுவதற்கு சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்

எல்லோருக்கும் கல்வி என்பது இன்று பரவலாகப் பேசப்படும் ஒரு விடயமாகவுள்ளது. எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி, எல்லோருக்கும் இடைநிலைக் கல்வி என்ற நிலைகளினூடாக இக் குறிக்கோளை அடைவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையில் எழுத்தறி வின்மையை முற்றாக இல்லா தொழிக்கும்நோக்கில் எல்லோருக்கும் எல்லா மட்டங்களிலும் கல் வியைப் பெறுவதற்கு சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென நாட்டின் அரசியலமைப்பின் 27ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது.



இலங்கையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 500 ஐத் தாண்டியுள்ளது. இதில் 20.3% உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளாகும். மொத் தப் பாடசாலைகளில் 40% ஆனவை 1 முதல் 5 வரையான வகுப்புக்களை உடையவை. இவற்றில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இலங்கையில் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 80 ஆயிரத்தை அண்மித்துள்ளது. மாணவர்களின் எண்ணிக்கை 42 இலட்சத்தை தாண்டிவிட்டது. அண்ணளவாக 7 இலட்சம் மாணவர்கள் பாடசா லையை எட்டிப்பார்ப்பதில்லை. பாடசாலை செல்வோரில் 1 முதல் 5ஆம் வகுப்புவரை ஏறக்குறைய 19 இலட்சம் பேர் கல்வி கற்கின்றனர். 6 முதல் 11 வரையான வகுப்புகளில் ஏறக்குறைய 12 இலட்சம் மாணவர்களே கல்வியைத் தொடர்கின்றனர். 12 தொடக்கம் 13ஆம் வகுப்புவரை ஏறக்கு றைய 2 இலட்சம் மாணவர்கள் கல்வியைத் தொடர்கின்றனர். 97% மாணவர்களுக்கு உயர்க ல்வி மறுக்கப்படுகின்ற நிலையில் எமது நாட்டின் கல்விக் கொள்கை இருப்பது இவற்றிலிருந்து புலனாகின்றது.

எமது சமூக பொருளாதார வாழ்வுடன் தொடர்பற்ற கல்வி வகுப்பறைகளில் திணிக்கப்படும் போது மாணவர்கள் திணறுகின்றார்கள்.

இந்தத் திணிப்பு அதிகாரம், அடக்குமுறை, பணிவு என்ற வழியில் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. மாணவனில் இயல்பாகக் காணப்படும் அறிவதில் உள்ள ஆர்வத்திற்குப் புறம்பாக பலவந்தப்படுத்தி மூளையில் புகுத்த முயற்சிக்கும் போது ஏற்படும் பாதிப்பு தவிர்க்க முடியாதது.

இக் கல்வி முறையினாலும் கூட பெருந்தொகை யான சிறுவர்கள் இலங்கையில் இடை விலகுகின் றனர்.

(தொடரும்)

திருமதி G.செல்வலட்சுமி
BSc.(Hons.), PGDE(Merit)
ஆசிரியர் யா/வேலணை மத்திய கல்லூரி.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 98

ஒரு சிறுவன் அல்லது சிறுமி தன் சொந்த வீட்டிலோ நாட்டிலோ வாழ்வது பாதுகாப்பற்றது என்பதால் அவ்விடத்தை விட்டு அகன்று அநாதையானால் விசேட பாதுகாப்பும் உதவியும் பெறும் உரிமை அச்சிறுவன் அல்லது சிறுமிக்கு உண்டு என்பது எத்தனையாம் உறுப்புரை

புதிர் 98 இற்கான விடைகளை 23.12.2013இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.அ.குகன்
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை [illegible]
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 97 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

செல்வி சோபிதா பசுபதிநாதன்
149, கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

**புதிர் 97 க்கான கேள்வியும் விடையும்:**

ஒரு பாடசாலையில் ஆசிரியர்களுக்கும் ஆண் மாணவர்களுக்கும் பெண்மாணவர்களுக்கும் இடையிலான விகிதம் 2:17:18 ஆகும். மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 665 எனின் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது? 38

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 98

சரியான விடை:-.....................................
முழுப்பெயர்:-.....................................
முகவரி:-.....................................
தொ.பே. இல:.....................................
கையொப்பம்:.....................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்காக யாரும் போராடமாட்டார்கள் அதனை அனுபவம் மூலம் நாம் உணர்ந்துள்ளோம்

## அருட்தந்தை ஹென்ஸ் போவர்

(கிளிநொச்சி)

**எங்களுக்காக யாரும் போராடமாட்டார்கள் என்பதை நாம் அனுபவங்கள் மூலமாக உணர்ந்திருக்கின்றோம். எனவே நாங்கள் ஒன்று பட்ட சக்தியாக மனிதவுரிமைகளினை பேண போராடுகின்ற போது தான் வலிமை மிகு நாடுகளின் செயல்கள் எமக்கானவையாக மாறும் என அருட்தந்தை மரியாம்பிள்ளை ஹென்ஸ் போவர் தெரிவித்தார்.**



சர்வதேச மனிதவுரிமைகள் தினம் அண்மையில் கிளிநொச்சியில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் மக்கள் அமைப்பின் தலைவர் சிங்கராசா ஜீவநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருநதினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமைகளைப் பேணுவதிலும் அதனை உத்தரவாதப்படுத்துவதிலும் உலகில சமநிலை காணப்படாமையே எமது இன்றைய நிலைக்கு காரணமாகும். உலகின் வலிமை மிக்க தேசங்களின் நிகழ்ச்சி நிரல் தனித் தன்மை வாய்ந்ததாக இருந்தாலும் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வாழுகின்ற நாங்கள் எங்களுக்காக நாங்களே போராடுவதன் மூலமே அவர்களின் நிகழ்ச்சி நிரலினை எம தாக்க முடியும்.

எங்களுக்காக யாரும் போராடமாட்டார்கள் என்பதை நாம் அனுபவங்கள் மூலமாக உணர்ந்திருக்கிறோம். எனவே நாங்கள் ஒன்றுபட்ட சக்தியாக மனித உரிமைகளை பேண போராடுகின்ற போது வலிமைமிகு நாடுகளின் செயல்கள் எமக்கானவையாக மாறும்.

அத்தகைய காலம் ஒன்றில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என கிளிநொச்சியில் நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றிய அருட்தந்தை மரியாம்பிள்ளை ஹென்ஸ் போவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண மனித உரிமைகள் செயற்பாட்டு இயக்குநராகப் பணியாற்றிய வேளை கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாரின் (கிளிபாதர்) திருவுருப்படத்திற்கு கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மலர்மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அருட்தந்தை மரியாம்பிள்ளை ஹென்ஸ் போவர் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து தலைமையுரை நிகழ்த்தப்பட்டது.

அறிமுகவுரையினை ஆசிரியர் சத்தியானந்தம் நிகழ்த்த தமிழர்களும் மனித உரிமைகளும் எனும் தலைப்பில் சுயாதீன ஊடகவியலாளர் எஸ்.நிலாந்தனும், பயங்கரவாத தடைச்சட்டமும் மனித உரிமைகள் என்பது குறித்து சட்டத்தரணி க.தயாபரனும் சட்ட ஏற்பாடுகளும் அதன் மட்டுப்பாடுகளும் குறித்து சட்ட மற்றும் சமூக நீதிக்கான நிறுவனத்தைச் சேர்ந்த சட்டத்தரணி கு. ஐங்கரனும் சிறப்புரைகளை ஆற்றினார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக உருத்திரபுரம் ஆரோபணம் இளைஞர் இல்ல இயக்குநர் அருட்தந்தை ஹென்ஸ் போவர், சிறப்பு விருந்தினராக புனித திரேசா பெண்கள் கல்லூரி முதல்வர் திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை அதிபரும் சமூக சேவையாளரும் .இ.இராஜேந்திரமும் கலந்து கொண்டனர்.

நிறைவாக கிளிநொச்சி மாவட்ட காணாமல் போனோரின் உறவினர்களின் சங்கத்தினரும் மனித உரிமை ஆர்வலர்களும் இணைந்து மகஜர் ஒன்றை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஸ்ரீநீவாசனிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அதிகளவு இலங்கை படைப் புலனாய்வாளர்கள் நிகழ்வுகளைச் சூழ நின்று அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)




## பேருந்து சாரதிக்கு விளக்கமறியல்



பனிச்சங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 19 பேருக்கு காயம் ஏற்படுவதற்கு காரணமான பஸ் சாரதி சுரேஸ்குமார் என்பவர் கடந்த 10ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜராக்கப்பட்ட வேளை, சாரதியை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இவ் பஸ் விபத்தில் பஸ் முற்றாக சேதமடைந் துள்ளதுடன் மூவர் கவலைக் கிடமான முறையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மோட்டார் சைக்கிள் விபத்து

### இருவர் படுகாயம்

(கனகபுரம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இருவர் சறுக்கி விழுந்து படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இயக்கச்சி சந்தியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, முல்லைத்தீவு அளம்பிலில் இருந்து ஆழியவளை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை இயக்கச்சி சந்தியில் திருப்ப முயன்றவேளை சறுக்கி விழுந்ததில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.




இச்சம்பவத்தில் அளம்பிலைச் சேர்ந்த காங்கேசன் (வயது 32),காந்தரூபன் (வயது 28) ஆகிய இருவருமே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ம-259)

## உதவி பிரதேச செயலர் நியமனம்




கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உதவி பிரதேச செயலராக சிவகாமி இராசதுரை கடந்த 8 ஆம் திகதி நியமனம் பெற்றுள்ளார்.

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யா/ வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவர். (ம-254)







வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மத்தியஸ்தசபை முதன் முறையாக அமைக்கப்பட்டு அங்கத்தவர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மங்கள விளக்கேற்றுதையும் புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உரையாற்றுவதையும் அங்கத்தவரொருவருக்கு நியமனக்கடிதத்தினை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டம், குருமன்காடு செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக் கூட்டமும் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி நாவலடி சி.க.வ.கூ. சங்கத்தின் 27 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் அமரர் ஈ.வி.இன் பரிசில் வழங்கலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் இச் சங்கத் தலைவர் கொ. குணசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட சி. கூவ. கூ.ச. சமாசத் தலைவர் செ.இலகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக கூ.அ.உத்தியோகத்தர் அ.தயாளன், இமை .மேற்கு கிராம அலுவலர் மா.சிவனேசன், வட தெ/மே பிரதேச சபை உறுப்பினர் க.இரத்தினம், கரவெட்டி பிராந்திய சபை செயலாளர் சி.தவச்செல்வம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வின் போது இவ்வாண்டில் ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படவுள்ளது. (அ-2)

# சாரதி சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சாரதி சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக மாவட்ட அடிப்படையில் நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை வடமாகாண சபை பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஆர்.எஸ்.துரைராஜா அறிவித்துள்ளார்.

குறித்த நேர்முகத் தேர்வு இல. 695, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் அலுவலகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை, மறுநாள் வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களில் நடைபெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நேர்முகத் தேர்விற்கு தோற்றவுள்ள விண்ணப்பதாரிகள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (புகைப்பட பிரதியுடன்), தேசிய அடையாள அட்டை (புகைப்பட பிரதியுடன்) கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால், அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் எட்டாம் வகுப்பு சித்தி அல்லது ஒன்பதாம் ஆண்டில் சித்தி பெற்றிருத்தலை உறுதிப்படுத்தும் பாடசாலை விடுகைப் பத்திரம் (புகைப்பட பிரதியுடன்), தற்போது அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் எனின் திணைக்களத் தலைவரின் சேவைச் சான்றிதழ், கிராம சேவை உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட நற்சான்றிதழ், வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் (புகைப்பட பிரதியுடன்), மூன்று வருடகால சாரதி அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ், இரவிலும் பகலிலும் வாகனத்தை செலுத்தக் கூடிய நல்ல உடல் ஆரோக்கியமுடையவராகவும் நல்ல கண்பார்வையுடையவராகவும் இருப்பதை உறுதிப்படுத்தும் அரச வைத்தியரின் மருத்துவச் சான்றிதழ் , 2013.04.12 ஆம் திகதிக்கு முன்னர் ஆறு வருட காலப் பகுதியில் ஆகக் குறைந்தது 3 வருடங்களாயினும் வடமாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதி அல்லது கிராம சேவையாளரின் வதிவிடச் சான்றிதழ் பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன் இருபக்கம் கொண்ட ஆவணங்களின் நிழல் பிரதிகள் என்பனவற்றுடன் நேர்முக தேர்விற்கு சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர் விபரங்கள் வருமாறு,

### யாழ்ப்பாணம்

இராசையா விநாயகமூர்த்தி, அச்சலிங்கம் திருக்குமாரன், சரணவணபவான் பிரதீபன், கனகலிங்கம் கஜேந்திரன் ,அரியம் கஜரதன் ,இராசதுரை வசந்தன், செந்திநாதன் செல்வராசன், கனகரத்தினம் பிரதீபன், சுப்பிரமணியம் சுரேந்திரா, சிவப்பிரகாசம் சிகாதரன், சிவபாதம் சிவதீபன், பொன்னம்பலம் மனோகரன், வடிவேல் கோகுலதாஸ் ,சிவகணேசன், குசாந்தன் ,சுப்பிரமணியம் ஆறுமுகசாமி, டேவிட் ஜேசுதன், தியாகராஜா ஜீவகரன், கனகசபாபதி சிவபரன், நாகன் தனராஜலிங்கம் ,செலவராசா மனோரூபன் ,கந்தசாமி சுதர்சன், கோபாலகிருஸ்ணன் செல்வகுமார், சின்னத்தம்பி தவலதன், செல்வராசா கிரேஸ்குமார், எட்முண்ட்வேட் சிவராசா சயந்தன், சிவராசா சுதர்சன், இன்பராசா கார்த்திக் ,திருச்செல்வம் துஷாந், மகேந்திரன் பிரபாகரன், கனகரத்தினம் ஜதீஸ்குமார் ,திருநாவுக்கரசு ஜெயநிமலன் ,கனகராசா அபராஜிதன், சுப்பிரமணியம் சுரேஸ் , கபிரேஜல் நிக்சன், இராசையா தயாராசா ,சோதிவடிவேல் ஜசீதன் , ஜயாத்துரை நிரஞ்சன் ,மகேந்திரன் முகந்தன், நடராஜா விஜயரூபன், இரட்ணசிங்கம் சுஜீவன், கந்தையா தனேந்திரன் ,சிவலிங்கம் சசிகாந்த் ,சுப்பையா மகிழ்நாதன், குமாரசாமி வசந்தராஜ், பத்மநாதன் நாதபரன், இராஜேந்திரன் ஜோதீன், வீரசிங்கம் சசிகுமார், கந்தசாமி சுதாகரன் ,பத்மநாதன் பகீர் , ஜெகசோதி ஜெகராஜ் மணிவண்ணன் கஜந்தன், மகாதேவன் முரளீதரன், நடராஜா சுசீதரன், குகதாஸ் ஐயர் நிசங்க சர்மா, நாகநாதன் ஆதவன் ,இராஜகுலசிங்கம் சிவசெல்வன், குமாரசாமி ஜெயகாந்தன் , செல்வரத்தினம் நீலவர்ணன், குணசிங்கம் சரவணன், திருநாவுக்கரசு செந்தூரன், கிருஸ்ணன் கிரிதரன், றொக் அருளானந்தம் டினேஸ்ராஜ் ,சண்முகசுந்தரம் தயாமோகன, இராசப்பா தயாபரன் , அன்ரன் டிக்சன் ,செல்வரட்ணசிங்கம் விமலேந்திரன் ,அந்தோனிப்பிள்ளை லூயிஸ் கோலின் சாள்ஸ் ,சுந்தரம்பிள்ளை காண்டீபன், தில்லையம்பலம் ரங்கநாதன், ஸ்ரீராம் குகராசா, திருவருள்ச்செல்வம் நிரோசன், பாலசிங்கம் மயூரதன், ஆரோக்கியநாதன் அன்ரன், சதீஸ்குமார் ஞானப்பிரகாசம் சொரூபன் ,கண்ணியசீலன் உமாசங்கர், பரமசிங்கம் அம்பிகைகுமார், பொன்னுச்சாமி ரதீஸ்வரன், இராசையா லோகரஞ்சன் , சண்முகநாதன் ஜெயானந்தராசா,

### கிளிநொச்சி

குணசேகரம் மதிவண்ணன், உதாமசிங்கம் உமாசங்கர், சுந்தரலிங்கம் துசியந்தன் ,சித்திரவேல் சிறிதரன் ,கோபாலாசாமி கமல்ராஜ், சிவயோகேஸ்வரன் யோகேந்திரன், பாலகிருக்ஷ்ணன் கலையன்பன்,அரியரத்தினம் பிரதாபன் , அரியரட்ணம் இராஜமோான் நேசரட்ணம் ,சுப்பிரமணியம் கஜேந்திரன் ,கணேசமூர்த்தி கேசகன் , மகேஸ்வரன் தேவானந்த், பரமணானந்தசிவம் சிறிவரதன் ,தர்மராசா கணநாதன், பன்னீர்செல்வம் பாலரூபன், சுந்தரலிங்கம் அஜந்தன், கனகசபை கலைச்செல்வன், அமிர்தலிங்கம் உதயகுமார் , சேனாதிராசா அமரேஸ் ,ஜெகநாதன் ரமேஸ்.

### முல்லைத்தீவு

தவராஜா அமலன் , முஹம்மது சலீம் நலீர் ,தர்மலிங்கம் கிருஸ்ணகுமார், ஈழக்கோன் பத்திராகே பிரதீப் குமார ஜெயரத்னா, சடாச்சரம் ஜெகதீஸ்வரன் , கனகரத்தினம் சிறிஜீவராசரத்தினம் ,பத்திநாதன் சதம்பரநாதன், அம்பலத்தரசு பிறேமகுமார், பாலசுப்பிரமண்ணியம் கௌரீகரன் ,முஹம்மது அலி முஹம்மது முஜீபார் , முஸ்தப்பா சைபுலலா , சிவநேசன் தர்சன் ,யோகராஜா சாரங்கன், விநாயகமூர்த்தி ரசிகரன், குலசேகரம் சுதர்சன், எஸ்.ஏ. ஜானக பிரதீப் குமார, தஸ்லீம் முஹம்மது கூஷஹீ, இராசையா தயாபரன், இராமசாமி துஸாந்தன்.

### வவுனியா

மகேந்திரராஜா சிவமோகன், மகேஸ்வரன் மதனீஸ்வரன், செல்வராசா வனதீபன் , பாஸ்கரன் அனுசன் , இரட்ணபூபாலசிங்கம் குலேந்திரன் , சிவசோதி சிவநாதன், ஜினதாசகே சுரங்க சேனரத் பண்டாரா, நாகராசா பிரியதர்சன், மயில்வாகனம் டினேஸ்,

### மன்னார்

அபசுபியன் ஜபிரி, ஞானபிரகாஸம்துரம் வஸ்தியான் துரம், முஹமமது இரட்ணம் முஹம்மது அதீக் நிகோலான் கிலேரேன்ஸ், நிலாமுதீன் ஹிஜாஸ், ஆறுமுகம் றெனோல்ட், அப்துல் அஜீஸ் முஹம்மது ரிஜாஸ் ,மோகன் பஜனன் ,ஜோன் பொஸ்கோ லம்பேட் யேசு செல்வம் லம்பேர்ற் ,நடராசா சிவராசன், சாகுல்ஹமீட் முஹம்மது கவதான் , ஜேசுதாசன் சஞ்ஜீவன், பாலசுப்பிரமணியம் சிவநேசன், ஹாஜா முஹைதீன் முஹ ம்மது முபாஸ். (அ-2)

# பரீட்சை அனுமதி அட்டையில் பரீட்சை திகதியில் தவறு

## பரீட்சார்த்திகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

அரசகருமமொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மொழித் தேர்ச்சி மட்டப் பரீட்சைக்கான பரீட்சை அனுமதி அட்டையில் காணப்பட்ட தவறுகளால் பரீட்சைக்கு சென்ற பரீட்சார்த்திகள் மீளத் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

பரீட்சார்த்திகளிடையே ஏமாற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்திய குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழித் தேர்ச்சி மட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் முன்னதாக வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்ட அனுமதி அட்டையின் முன்பக்கத்தில் பரீட்சை திகதியாக இம்மாதம் 23 ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்த போதும் மறுபக்கத்தில் கடந்த 10 ஆம் திகதியே பரீட்சை திகதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் குழப்பமடைந்த பரீட்சார்த்திகள் பரீட்சை ஆயத்தங்களோடு கடந்த 10 ஆம் திகதி பரீட்சை மண்டபமாக அறிவிக்கப்பட்டிருந்த யாழ்.பொதுசன நூலகத்திற்கு சென்றுள்ளனர்.

எனினும் அங்கு பரீட்சைக்கான ஆயத்தங்கள் எவையும் செய்யப்பட்டிராததையடுத்து அதிர்ச்சியடைந்த பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான திகதி 23 ஆம் திகதியே என்பதை தெரிந்து கொண்டு ஏமாற்றத்துடனே திரும்பிச் சென்றுள்ளனர்.

குறித்த அனுமதி அட்டையின் முன்பக்கத்தில் திகதி மாற்றம் கையெழுத்திலேயே காணப்பட்டதாக பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-5)

# இளைஞர் பாராளுமன்றில் ஐந்தாவது அமர்வுகள்

(மானிப்பாய்)

இளைஞர் பாராளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வுகள் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் மகரகமவில் அமைந்துள்ள இளைஞர் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளன.

இவ் அமர்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை மையமாகக் கொண்டு விவாதிக்கப்படவுள்ளது.

இவ் அமர்வுகளின் பிரதம விருந்தினராக இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் விவகார அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும கலந்து கொள்ளவுள்ளார்.

இரு நாட்கள் இடம்பெறவுள்ள இவ் அமர்வின் முதல் நாளின் சிறப்பு விருந்தினராக திறைசேரி செயலாளர் டீ.பி.ஜயசுந்தரவும் இரண்டாம் நாள் நிகழ்வின் விருந்தினராக தேசிய மொழி மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேச நாணயக்காரவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னைய அமர்வுகளில் தொடர்ச்சியாக பங்கேற்காதவர்கள் இளைஞர் பாராளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே, சகல உறுப்பினர்களையும் அமர்வுகளில் தவறாது பங்குபற்றுமாறும் 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்பாக ஒவ்வொருவரினதும் வருகையினையும் மகரகம ஸ்ரீலங்கா யூத் மத்தியஸ்தானத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். (அ-9-23)

# ஆளும் எதிர்க்கட்சியினர் சபையில் கருத்து மோதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவுக்கும் இடையில் கடுமையான விவாதங்கள் இடம்பெற்றன.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகத்துறைக்கான நிதி ஒதுக்கீடு விவாதத்தின் போதே இந்த விவாதம் இடம் பெற்றது.

தமது உரையை ஆரம்பித்த ரஞ்சன் ராமநாயக்க. சுய குற்றச் சாட்டு ஒன்றை ஏற்றுக்கொண்டே உரையாற்றுவதாக தெரிவித்தார்.

அதாவது ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் போது பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களே அந்த சுய குற்றச்சாட்டு என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் காலத்தில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். எனவே, தமது ஆட்சியிலும் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றனர் என்று தற்போதைய அரசாங்கம் நியாயப்படுத்துவதை அவர் கண்டித்தார்.

இதன்போது அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அவுஸ்திரேலியாவில் தாம் வீழ்ந்து விபத்துக்குள்ளான ஹோட்டல் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப் போவதாக வெளியிட்ட கருத்து தொடர்பாக ரஞ்சன் ராமநாயக்க கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அந்த வழக்குப் பற்றி கேட்பதற்கு ரஞ்சன் ராமநாயக்க நீதிபதியல்ல என்று குறிப்பிட்டார்.

அதேநேரம் ஊடகவியலாளர் தாக்கப்படுவது குறித்து தமக்கு எதுவும் செய்யமுடியாது. இளநீரை வாங்கிக்கொண்டு அவர்களை வைத்தியசாலையில் சென்று பார்க்க மாத்திரமே தமக்கு முடியும் என்று அமைச்சர் முன்னர் குறிப்பிட்ட கருத்தை ராமநாயக்க கூறிய போது அமைச்சர் அதனை மறுத்தார்.

தாம் அவ்வாறு சொல்லவில்லை. அது பிழையாக செய்தியாக்கப்பட்டது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத்தூண்டும்!
- தானோபஸ் -

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அழுத கண்ணீரும் ஆனந்தக் கண்ணீரும்

இலங்கையில் இனயுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாயினும் இந்த நாட்டில் ஒவ்வொரு பிரஜைகளும் மனத்தளவில் யுத்தம் புரிந்து கொண்டே இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

அந்த வகையில் இப்போது இந்த நாட்டில் சமயப் போரில் மதத்தலைவர்களும் மதவாதிகளும் கடுமையாக ஈடுபட்டுள்ளனர் என்ற செய்தி பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தாலும் அதுவே உண்மை.

இலங்கை பௌத்த நாடு என்று ஆட்சித் தரப்பு பிரகடனப்படுத்திக் கொண்டு நாட்டில் உள்ள அரச மரங்களைத் தேடி அலைந்து திரிகின்றது.

அதே நேரம் கிறிஸ்தவ மிசனறிகள் இப்போதும் வீடு வீடாகச் சென்று மதமாற்றத்தைப் பரப்பி வருகின்றன.

இஸ்லாமியர்கள் இன்று வரை வெள்ளிக் கிழமையில் அரைநேரப் பாடசாலை என்ற நடைமுறையை கட்டாயமாக்கி வைத்துள்ளனர்.

ஆனால் இந்து சமயமோ களவுபோன இந்து தெய்வ விக்கிரகங்களை மீட்க முடியாமல் இரத்தக் கண்ணீர் விடுகின்றது.

இத்தகைய நிலைமைகளுக்குக் காரணம் இந்து சமயத்தில் துறவற சபை இல்லாமையே ஆகும். பௌத்தமதம் பிரிவேனாப் பாடசாலைகளை அமைத்து சிறுவயதிலேயே துறவிகளை உருவாக்க வழி செய்துள்ளது.

பிரிவேனாப் பாடசாலை மாணவர்களுக்கு காவி உடை, இலவச சீருடையாக வழங்கப்படுகின்றது என்றால் பௌத்த மதத்தைக் காக்க அவர்கள் எந்தளவு தூரம் திட்டம் தீட்டி செயற்படுகிறார்கள் என்பதை புரிந்து கொள்வதில் சிரமம் இருக்க முடியாது.

அதேபோல் கத்தோலிக்க மதம் பற்றி நாம் சொல்ல வேண்டிய தேவையே இல்லை. வத்திக்கானை தலைமையகமாகக் கொண்டு இரு பாலாரையும் உள்ளடக்கிய துறவற சபையை உலகம் முழுவதிலும் வலுப்படுத்தி திருச்சிலுவையைக் காத்துவருகின்றது.

இஸ்லாமிய சமயத்தை நாம் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்வவேண்டிய அவசியமே இல்லை.

அவர்கள் இஸ்லாமிய மதச் சடங்குகளை சட்டங்களாக மாற்றி அதுவே தங்கள் மார்க்கம் என்று உயிரையும் கொடுக்கிறார்கள்.

இவற்றோடு இந்து சமயத்தை ஒப்பிடும் போது கன்னத்தின் ஓரங்கள் ஈரமாகிக் கொள்கின்றன. இந்து சமயத்திற்கு மட்டும் ஏன் இந்தக் கொடுமை? எங்களுக்கும்; பிரிவேனாப் பாடசாலை போல, குருத்துவக் கல்லூரி போல இருந்தால், இந்து சமயமும் வீரத்துறவிகளைப் பெற்று இன்புற்றிருக்கும். அட! குடும்பமாவதே பெரும் புண்ணியம் என்ற எங்கள் மோட்டுச் சிந்தனையில் அர்த்தம் உள்ள இந்து மதத்தை நாமே அழித்து, பிறமதம் சேர்ந்து துறவியாகிப் போதனை செய்யப்போகும் எதிர்காலத்தை ஒருதடவை நினைத்துக் கலங்கியவேளை,

எங்கள் மண்ணில் எழுச்சி பெற்ற சிவபூமிப் பாடசாலை மாணவர்கள் படைத்த சாதனை கண்டு ஆனந்தக் கண்ணீர் கொட்டி அகம் மகிழ்ந்து கொண்டோம்.

ஆம், அவுஸ்ரேலியாவின் நியூகாஸ்ரன் சர்வதேச மைதானத்தில் எங்கள் சிவபூமிப் பாடசாலையைச் சேர்ந்த மாற்றுவலுவுடைய மூன்று மாணவர்கள் சாதனை படைத்தனர் என்ற போது, அட! துறவற சபைகள் செய்யமுடியாததை தனியொரு வீரத்துறவி செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் செய்து முடித்தார் என்பதிலும் அவரின் பணிக்கு நல்ல உள்ளங்கள் பக்கபலமாய் இருந்தன என்ற உண்மையிலும் உள்ளம் பூரிக்கின்றது.

ஆனாலும் கலாநிதி ஆறுதிருமுருகனுக்குப் பின்னர் யார்? என்ற கேள்விக்கு ஏக்கமே பதிலாகாமல் இருக்க, ஆறுதிருமுருகனின் பெரும் பணி இந்து சமயத்திற்கு துறவற சபையை ஆரம்பிப்பதாகும்.

பிரிவேனாக்கள் போல, குருத்துவக் கல்லூரிகள் போல, இந்து சமயத்திற்கும் துறவிகளைத் தரும் கல்லூரிகள் தேவை.

இதன் மூலமே வீரத்துறவி விவேகானந்தர் போன்ற உத்தமர்களை நாமும் உருவாக்கமுடியும்.

# மின் இணைப்பு பெறுவதற்கு கடனுதவி வழங்கப்படும்

(கொழும்பு)

அடுத்த வருட இறுதிக்குள் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் துரிதமாக மின்சார வசதி வழங்கும் திட்டத்தையொட்டி புதிய மின் இணைப்பு வழங்குவதில் காணப்படும் சகல கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டிருப்பதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் அயகம மற்றும் கலவான பகுதிகளில் புதிய மின்சாரத் திட்டங்களை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதுவரை பிரதான வீதி வரை மாத்திரமே மின்சார வயர்கள் பொருத்தப்பட்டன.

ஆனால் வீட்டிற்கு அருகுவரை மின்சார வயர்களை இட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், கிராமிய பகுதிகளுக்கு மின்சார வயர்கள் இடுகையில், அப்பகுதியிலுள்ள வீடுகளின் தொகை எதிர்வரும் காலங்களில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. வீதியின் முடிவு வரையில் மின்சார கம்பங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மின் இணைப்பு பெறுவதில் நிதி நெருக்கடி உள்ளவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா வரை கடனுதவி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அதனை 60 தவணைகளில் திருப்பி வழங்க அவகாசம் வழங் கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2)

## ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி



**இந்துநெறி காப்போம்**
**இந்துவாக வாழ்வோம்**

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை ஆயிரக்கணக்கில் எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமது சமயத்தினையும் சமய விழுமியங்களையும் எம்மக்களை யும் காத்திட அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்து மந்திரம் முதலீடு செய்யுமாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

திருவெம்பாவையை முன்னிட்டு, காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்தும் தெய்வீக கலையரங்கு நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5.30 இற்கு காரைநகர் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவினை கலாநிதி ஆறு.திருமுருகன் **உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்** எனும் பொருளில் ஆற்றவுள்ளார்.

அத்தோடு கலாமன்ற மாணவர்களின் மிருதங்க இசை, யாழ் விழிப்புலனற்றோர் சங்க சாகித்திய இசைக் குழுவின் பக்திப் பாமாலையும் **இன்று எமக்குப் பெரிதும் தேவையானது போதியளவு பணமா! புரிந்து கொள்ளும் மனமா!** என்ற தலைப்பிலான பட்டிமன்றமும் ஓய்வுநிலை நீதிபதி மு. திருநாவுக்கரசு தலைமையில் இடம் பெறவுள்ளது. (அ-9)

# உள்ளூராட்சி விழா

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி விழாவும் விருந்தினர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச சபைமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

பிரதேசசபைத்தவிசாளர்பொ.வியாகேசு தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ஈ. சரவணபவன், வடமாகாண விவசாய அமைச்சர்பொ.ஐங்கரநேசன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடமாகாண மீன்பிடி போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வட க்கு மாகாண சபை உறுப்பினர்கள், விசேட விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன், வடமாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-60)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

**மரணத்திற்குப் பின் வருவது எது?**

நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள்: ஒருவர் மரணிக்கும் வரை அவருடைய உறவினர், செல்வம், செயல்கள் ஆகிய மூன்று காரியங்கள் பின் தொடர்ந்து செல்கின்றன. அவர் மரணித்ததும் உறவினரும் செல்வமும் திரும்பி விடுகின்றன. பின்பு அவரது செயல் மட்டும் தங்கி விடுகிறது.

அறிவிப்பவர்: ஹஜ்ரத் அனஸ் இப்னுமாலிக் (ரலி) நூல்: முஸ்லிம்




உள்ளத்திலே இறைவனைக் காண்பது வழிபாட்டின் மிக உயர்ந்த நிலையாகும். அந்த நிலையை அடைவதற்கு இறைவன் மீது உறுதியான அடைக்கலமாகும் மனம் வேண்டும். கோயிலுக்குப் போகாமலே வழிபாடு செய்யும் மனப்பக்குவம் எல்லோரிடமும் ஏற்படாது. ஆனலதைப்பெற எல்லோரும் முயற்சி செய்யலாம்.

மனத்தை ஒரு நிலைப்படுத்தி வழிபாடு செய்யும் முறைமையை அப்பர் பாடலொன்று விளக்கியுள்ளது. மூவாழ்வார்கள் மூவரும் சேர்ந்து இத்தகைய வழிபாட்டு முறைமையைப் பாடல்களால் பதிவு செய்துள்ள னர். அதனை அப்பர் ஒரு பாடலிலே அமைத்துள்ளார்.

உடம்பு என்கின்ற மனையகத்திலே உள்ளத்தையே தகனியாக்குகிறார். அத்தகனியிலேஉணர்வெனும்நெய்யை நிறைய ஊற்றுகிறார். அதிலே உயிரெனும் திரியை முறுக்கி இடுகிறார். அந்தத் திரியினை ஞானமெனும் எரியினால் கொளுத்துகிறார்.

அவ்வாறு கொளுத்திய விளக்கையே நன்கு உற்று நோக்கிக் கொண்டிருந்தால் கடம்ப மரத்தடியிலே இருக்கும் காளையான முருகனின் தந்தையான எம் சிவனின் கழல்கள் அணிந்த திருவடிகளை நேரிலே காணலாம் என்கிறார்.

அப்பருடைய விளக்கு மனையிலே நாம் ஏற்றும் அகல் விளக்கைப் போன்றது. உலக நிலையிலே நாம் வாழும் வீட்டின் இருளை அகற்றும் விளக்கையே ஒத்திருந்தாலும் அதனை ஏற்றுவதற்கு நிறைந்த புலனடக்கம் தேவை. உள்ளம் ஒரு நிலைப்பட்டால் அது கைகூடும்.

வீட்டிலே இருள் பரவும் போது அதை அகற்ற அகல்விளக்கை ஏற்ற நாம் செயற்படுவது போல உள்ளம் இருளும்போது அதை ஞான விளக்கு ஏற்றியே தெளிவுபடுத்த வேண்டும்.

இன்னும் சிவனை நினைக்கும் போது முருகனையும் சேர்த்து நினைக்க வைக்கிறார். கடம்பமர் காளை என முருகனை அவர் நினைக்கிறார். தேவாரப் பாடல்களில் முருகன் பற்றிய குறிப்பு அருகியே காணப்படுகிறது.

சிவனைப் பற்றி எண்ணும்போது உலகிலுள்ள எல்லோருக்குமே அவர் தந்தை ஆனவர். எனவே சிவனைத் தந்தையாகக் காண்கிறார். அதனால் தாதை எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிவனின் கழலடிகள் அப்பர் கண்களிலே தெளிவாகத் தெரிகின்றன. திருவையாற்றிலே கண்டேனவர் திருப்பாதம் எனப் பாடியுள்ளார். வீரக்கழல் அணிந்த திருவடி. அதையே காணும் உயர்ந்த பக்தி நிலை மனம் ஒன்றுபட்டு உணர்வு முழுவதும் இறை எண்ணமே பரவ வீற்றிருக்கும் பரவச நிலை.

அதுவே பேரின்ப நிலையாகும். அப்பர் மனித நிலையிலேயே இறைவனைக் காண எல்லோரையும் பயிற்ற எண்ணுகிறார். உலக வாழ்வியல் நிலையில் நின்று இறைவன் திருக்கோலத்தைக் காண எல்லோரும் முயற்சி செய்யலாம். திருவடியையே காண வேண்டும் என்ற இலக்கு மெய்யன்பருடைய ஆசையாகும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை தந்தை வடிவிலே கண்டு காலடியிலே விழுந்து வணங்கவேண்டும். அது மனிதநிலையிலே கைகூடும். வழிபாட்டில் விளக்கு மிகவும் இன்றியமையாதது.

வழிபாட்டு நடைமுறைகளின் தொடக்கத்தில் விளக்கை முதலில் ஏற்றுவது இன்றுவரை மரபாகவுளது. அதனுடைய தெளி வான விளக்கமாக இப்பாடல் அமைகி றது.

உடம்பெனு மனையகத்துவுள் ளமே தகனியாக
மடம்படுமுணர் நெய்யட்டி யுயி ரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானந் தீயாலெரி கொளவிருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக



(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் புனித மைக்கல் விளையாட்டுக் கழகம் நடாத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 5 பேர் 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு மாவட்ட ரீதியில் அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர் ம.நிசாந்தன் அறிவுறுத்தியுள்ளார். 077 - 1725 432 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள் G. Matheisan

# ஆசிய பசுபிக் ஒலிம்பிக் போட்டி; சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு



ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டி நாடு திரும்பிய கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள் மூவருக்குமான பாராட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

வீரர்கள் பலாலி வீதி கோண்டாவில் சந்தியிலிருந்து கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை வரை மேளவாத்தியங்கள், மேலைத்தேய இசையுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவின் நியூ காஸ்ரன் சர்வதேச மைதானத்தில் இடம்பெற்ற விசேட ஆசிய பசுபிக் ஒலிம்பிக் போட்டியில் கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலையைச் சேர்ந்த எஸ்.துஷ்யந்தன், எஸ்.அனுஷன், ராஜன் பிளக்னோ ஆகிய மூன்று வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதில் 200மீற்றர் ஓட்டப் போட்டியில் எஸ்.அனுஷன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

எனினும் பலராலும் எதிர்பார்க்கப்பட்ட 2011ஆம் ஆண்டு கிறீஸ் நாட்டில் எதேன்சில் இடம்பெற்ற விசேட ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற எஸ்.துஷ்யந்தன் 100மீற்றர் ஓட்டப் போட்டியில் இறுதிக்கோட்டிற்கு அண்மையில் தவறி வீழ்ந்தமையால் பதக்கத்தினை வெல்ல முடியாது போய் விட்டது.

இவர்களுக்கான பயிற்சிகளை வட மாகாண ஒலிம்பிக் குழுவின் இணைப்பாளர் இளம்பிறையன் மற்றும் ராதை அருளானந்தம் ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (23)

# மைலோ வெற்றிக்கிண்ண காலிறுதிப் போட்டிகள்



நெஸ்ரில் நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெற்றுவரும் "மைலோ கிண்ண" காற்பந்தாட்டப் போட்டிகள் யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக ஆரம்பமாகின.


நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில், நாவாந்துறை சென்.மேரிஷ் அணி மற்றும் வதிரி டைமன்ஸ் ஆகிய அணிகள் மோதி கொண்டன.

போட்டி நேரம் முடியும் வரை யும் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்கள் பெற்றிருந்தன. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டு, சமநிலை தவிர்ப்பு உதையில், சென்.மேரிஷ் அணி 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, குருநகர் பாடும் மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணியினை யும், பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வல்வை அணியினையும் வெற்றி கொண்டன.

# வடமாகாண அமைச்சுக்கிடையிலான கரம் சுற்றுப்போட்டி

## உள்ளூராட்சி, ஆளுநர் அணி சம்பியன்



வடமாகாண அமைச்சு அணிகளுக்கிடையிலான கரம் போட்டிகளில் உள்ளூராட்சி, ஆளுநர் செயலக கொத்தணி அணிகள் சம்பியனாகின.

வடமாகாண அமைச்சுக்களின் அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தற்போது யாழ்.மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

உள்ளகப் போட்டிகள், மைதான போட்டிகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய மேற்படி சுற்றுப்போட்டியில் கரம் போட்டிகள் முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்று வந்தன.

ஆண்களுக்கான கரம் இறுதிப்போட்டியில் கல்வி அமைச்சு அணியும் உள்ளூராட்சி அணியும் மோதின. இதில் உள்ளூராட்சி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான இறுதிப்போட்டியில் ஆளுநர் செயலக கொத்தணி அணியும் சுகாதார அணியும் மோதின. இதில் ஆளுநர் செயலக கொத்தணி அணி 2: 1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

# ஸ்ரீசாந்துக்கு நேற்று டும் டும் டும்



பிரபல கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்துக்கு நேற்று குருவாயூரில் கோலாகலமாக திருமணம் நடைபெற்றது.

கேரள மாநிலத்தை சேர்ந்த கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த், இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளராக இருந்தார்.

நடந்து முடிந்த ஐபிஎல் போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக எழுந்த புகாரில் கைதாகி, தற்போது ஜாமீனில் விடுதலையாகி உள்ளார்.

இவரும், ராஜஸ்தான் ராஜ குடும்பத்தை சேர்ந்த நயன் என்ற புவனேஸ்வரி குமாரி(வயது 23) என்பவரும் நீண்ட நாட்களாக காதலித்து வந்தனர்.

இவர்களது காதலுக்கு பெற்றோர்கள் பச்சை கொடி காட்டவே, பிரசித்தி பெற்ற குருவாயூர் கிருஷ்ணன் கோவிலில் நேற்று திருமணம் நடைபெற்றது.

இத்திருமண வைபவத்தில் ஸ்ரீசாந்தின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

மணமகள் ராஜஸ்தான் ராஜ குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால், நேற்று மாலை கொச்சியில் உள்ள லீராயல் மெரிடியன் ஹொட்டலில் ராஜஸ்தான் ராஜ குடும்ப பாரம்பரிய முறைப்படி திருமண விழா நடத்தப்பட்டது.

இதிலும் முக்கிய குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்றனர்.

# சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் முதல் சுற்றில் சாய்னா தோல்வி

சுப்பர் சீரிஸ் பட்மிண்டனில் முதல் ஆட்டத்தில சாய்னா தோல்வி அடைந்துள்ளார்.

மொத்தம் ரூ.3 கோடி பரிசுத் தொகைக்கான சுப்பர் சீரிஸ் இறுதி சுற்று பட்மிண்டன் போட்டி மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் தொடங்கியது.

பெண்கள் பிரிவில் பங்கேற்றுள்ள முன்னணி 8 வீராங்கனைகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். 'ஏ' பிரிவில் ஷிசியான் வாங் (சீனா), போர்ன்டிப் (தாய்லாந்து), ஜி ஹியுன் சங் (தென்கொரியா), ஜூ யுங் தைய் (சீனத்தைபே), 'பி' பிரிவில் சாய்னா நேவால் (இந்தியா), லீ சூய் ருய் (சீனா), மினட்சு மிதானி (ஜப்பான்), யோன் ஜீ பாவ் (தென்கொரியா) ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

ஒவ்வொருவரும் தங்கள் பிரிவிலுள்ள மற்ற வீராங்கனைகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை



பிடிக்கும் வீராங்கனைகள் அரை இறுதிக்கு முன்னேறுவார்கள்.

உலக தரவரிசையில் 6 ஆவது இடம் வகிக்கும் சாய்னா நேவால், தனது முதலாவது ஆட்டத்தில் 13 ஆம் நிலை வீராங்கனை ஜப்பானின் மினட்சு மிதானியை எதிர் கொண்டார். இருவரும் 'நீயா-நானா' என்று மல்லுக்கட்டியதால் ஆட்டத்தில் அனல் பறந்தது. முதல் இரு செட்டுகளை இருவரும் தலா ஒன்று வீதம் கைப்பற்றிய நிலையில், கடைசி செட்டும் கடுமையாக இருந்தது.

இதில் ஒரு கட்டத்தில் சாய்னா 10:7 என்று முன்னிலை வகித்தார். இதன் பின்னர் 18:18, 19:19 என்று சமநிலை வந்தது. இறுதியில் கடைசி இரு கேம்களை தனதாக்கிய மினட்சு, சாய்னாவின் சவாலை முடிவுக்கு கொண்டு வந்தார். 68 நிமிடங்கள் நீடித்த திரிலிங்கான இந்த மோதலில் சாய்னா 21:19, 22:24, 19:21 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

இதே பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் ஒலிம்பிக் சம்பியனும், நம்பர் வன் வீராங்கனையுமான சூய்ருய் 21:9, 21:7 என்ற நேர் செட்டில் யோன் ஜீ பாவ்வை-பந்தாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்ரிடியின் அதிரடியில் பாகிஸ்தான் வெற்றி

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட இருபது-20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது.

9 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டை இழந்த அவ்வணி, 13.4 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களுடன் தடுமாறியது. ஆனால் அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன இருவரும் இறுதி நேரத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.





துடுப்பாட்டத்தில் அஞ்சலோ மத்தியூஸ் 34 பந்துகளில் 50 ஓட்டங்களையும், லஹிரு திரிமன்ன 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும், டினேஷ் சந்திமால் 22 பந்துகளில் 22 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 22 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சொஹைல் தன்வீர், சயீட் அஜ்மல் இருவரும் தலா 2 விக் கெட்டுக்களையும், ஷகிட் அப்ரிடி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

146 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

12 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டை இழந்த அவ்வணி, 2வது விக்கெட்டுக்காக 57 ஓட்டங்களைப் பகிர்ந்தது. ஆனால் அதன் பின்னர் விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டு, 16.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களுடன் அவ்வணி தடுமாறியிருந்தது. எனினும், ஷகிட் அப்ரிடி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அவ்வணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

துடுப்பாட்டத்தில் ஷகிட் அப்ரிடி 20 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும், ஷர்ஜீல் கான 31 பந்துகளில் 34 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 27 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லசித் மலிங்க 3 விக்கெட்டுக்களையும், சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மென்டிஸ், திஸர பெரேரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஷகிட் அப்ரிடி தெரிவானார்.

## முதிரைக் குற்றிகள் கடத்திய இருவர் கைது

கருங்கல்லுக்குள் மறைத்து கொண்டுவரப்பட்ட சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான முதிரைக்குற்றிகளை கோப்பாய் பொலிஸார் பறிமுதல் செய்ததோடு இருவரை கைதும் செய்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து கடத்தப்பட்ட மேற்படி முதிரைக் குற்றிகள் யாழ்.நல்லூர் நாயன்மார் கட்டுப்பகுதியில் வைத்து நேற்று பிற்பகல் 4மணியளவில் கோப்பாய் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

டிப்பர் வாகனத்தில் கருங்கற்களுக்கிடையில் மறைத்து கொண்டு வரப்பட்ட முதிரைக்குற்றிகள் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்படி இருநபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட இருவரும் இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

# எல்லைமீறும் தமிழக மீனவர் பிரச்சினை நேரடியாக தலையிட ஜெயா வலியுறுத்தல்



இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் மூலமாக கண்டன அறிக்கையும், இலங்கை ஜனாதிபதிக்கு பிரதமர் நேரடியாக தொடர்பு கொண்டு கடும் கண்டனத்தையும் உடனடியாக தெரிவிக்க வேண்டும் என்று தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழக மீனவர்களின் நிலை குறித்தும், இலங்கை கடற்படையினர் செய்து வரும் அட்டூழியம் குறித்தும், உங்களுக்கு பல முறை வலியுறுத்தி கடிதங்களை எழுதியுள்ளேன்.

தமிழக அப்பாவி மீனவர்களை இலங்கை கடற்படையினரிடம் இருந்து பாதுகாக்கவும், தமிழக மீனவர்களுக்கு இந்திய கடல் எல்லையில் இருக்கும் மீன்பிடி உரிமையை நிலைநாட்டவும் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளேன்.

ஆனால், மத்திய அரசு இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மௌன சாட்சியாகவே இருந்து விட்டதால், இலங்கை கடற்படையினரின் அத்துமீறல்கள் எல்லை அடங்காமல் போய்விட்டது.

இதற்கு உதாரணமாக கடந்த புதன்கிழமை, 47 படகுகளில் சென்ற தமிழக மீனவர்கள் 325 பேரை இலங்கை கடற்படையினர் சிறைபிடிக்க முயன்றுள்ளனர். தமிழக மீனவர்களை சுட்டுக் கொன்றுவிடுவதாகவும் ஆயுதம் ஏந்திய இலங்கை கடற்படையினர் மிரட்டியுள்ளனர்.

இந்த நிலையில், 15 படகுகளில் சென்ற 110 மீனவர்களை பிடித்துக் கொண்ட இலங்கை கடற்படை, 32 படகுகளில் சென்ற 215 மீனவர்களை திருப்பி அனுப்பியுள்ளது. கைது செய்யப்பட்ட 110 தமிழக மீனவர்களும் திருகோணமலை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தகவல் கடலோர காவல் படை மூலமாக தமிழக அரசுக்கு தெரிவிக்கப்பட்டதும் மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன். ஆனால், அதற்குள், 8 படகுகளில் சென்ற புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த 30 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வந்துள்ளன.

இது மிகவும் கண்டிக்கத்தக்க, மிக மோசமான நடவடிக்கையாகும். இது போர் நடவடிக்கையை ஒத்த செயலாகும். இதனால், இந்தியாவின் மரியாதை மிகவும் மோசமாக்கப்படுகிறது. தங்களது வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் மத்திய அரசு காப்பாற்றும் என்ற நம்பிக்கையே தமிழக மீனவர்களிடம் துளியும் இல்லாமல் போய்விட்டது.

எனவே, இனியும், இதுபோனற தொடக் கூடாது என்ற கொள்கையை நாம் தொடர முடியாது. இனியாவது மத்திய அரசு விழித்துக் கொண்டு தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை வெளியுறவு அமைச்சகத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் மூலமாக கண்டன அறிக்கையும், இலங்கை அதிபருக்கு பிரதமர் நேரடியாக தொடர்பு கொண்டு கடும் கண்டனத்தையும் உடனடியாக தெரிவிக்க வேண்டும். இந்த விவகாரத்தில் பிரதமர் நேரடியாக தலையிட்டு எந்த விதாமதமும் இன்றி நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இலங்கை கடற்படையினரின் இதுபோன்ற நடவடிக்கை மீண்டும் நிகழாத வண்ணம் தடுத்து, தமிழக மீனவர்களை காப்பதில் உரிய பணியை செய்திட வேண்டும்.

கடந்த 24மணிநேரத்தில்இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டுள்ள 22 படகுகளையும், 140 மீனவரகளையும் உடனடியாக விடுவிக்கவும், ஏற்கெனவே சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# டில்லி விமான நிலையத்தில் பாரிய விபத்து ஒன்று தவிர்ப்பு

## ராகுல் காந்தி தெய்வாதீனமாக தப்பினார்

டில்லி விமானநிலையத்தில் இரண்டு விமானங்கள் மோதி மிகப் பெரிய விபத்து ஏற்படுவது கடைசி நிமிடத்தில் தவிர்க்கப்பட்டது. இதனால் அதிர்ஷ்டவசமாக ராகுல் காந்தி உயிர் தப்பினார்.

இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி தன் தாயாரின் தொகுதியான ரேபரேலிக்கு ஆய்வு நடத்துவதற்காக சென்றிருந்தார். ஆய்வு முடிந்து செசன்னா வகை சொகுசு தனி விமானத்தில் டில்லிக்கு திரும்பினார்.

ராகுலின் தனி விமானம் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை நெருங்கியதும், அந்த விமானம் தரை இறங்க விமான கட்டுப்பாட்டு அறையில் இருந்து அனுமதி கொடுக்கப்பட்டது. இதையடுத்து ராகுல் காந்தியின் விமான பைலட், அந்த விமானத்தை தரை இறக்க முயன்றார்.

அந்த சமயத்தில் அதே ஓடு பாதையில் இந்திய விமானப்படை விமானம் புறப்படுவதற்காக நகர்ந்து கொண்டிருந்தது. அந்த ராணுவ விமானம் மிகவும் மெதுவாக அந்த ஓடு பாதையில் சென்று கொண்டிருந்தது.

அதற்குள் ராகுல் விமானம் தரை இறங்க நெருங்கி விட்டது. வேகம் காரணமாக ராகுலின் விமானம் இந்திய விமானப்படை விமானம் மீது மோதி விடும் அபாயம் ஏற்பட்டது.

ஒரே ஓடு பாதையில் ராகுல் விமானமும், இராணுவ விமானமும் இருப்பதை கண்டதும், விமான கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். உடனே அவர்கள் ராகுல் விமானத்தின் பைலட்டை தொடர்பு கொண்டு, விமானத்தை தரை இறக்க வேண்டாம். மீண்டும் விமானத்தை மேலே கொண்டு செல்லுங்கள் என்று கூறினார்கள்.

ஆபத்தை உணர்ந்த ராகுல் விமான பைலட் மிகவும் வேகமாக செயல்பட்டு, அந்த விமானத்தை மேலே கிளப்பினார். இதனால் விமானங்கள் மோதி மிகப் பெரிய விபத்து ஏற்படுவது கடைசி நிமிடத்தில் தவிர்க்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக ராகுல் உயிர் தப்பினார்.

ராகுல் வந்த விமானம் விபத்தில் சிக்க இருந்ததை அறிந்த உயர் அதிகாரிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். இது பற்றி முழு விசாரணை நடத்த விமான போக்குவரத்து துறை உத்தரவிட்டுள்ளது.

இந்திய விமானப் படைக்கு சொந்தமான விமானம் புறப்பட்டுச் செல்ல அனுமதியளித்த கட்டுப்பாட்டு அறை ஊழியர்கள், அந்த விமானம் வேகமாக புறப்பட்டு சென்று விடும் என்று நினைத்து, அதே ஓடு பாதையில் ராகுல் வந்த விமானத்தை தரை இறக்க அனுமதி கொடுத்து விட்டதாக கூறப்படுகிறது.

அதன்பிறகு இராணுவ விமானம் ஏன் மெதுவாக சென்றது என்று தெரியவில்லை. அது பற்றிய அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள். (எ-11)

## காதலியின் தாயிடம் அடிவாங்கிய பொலிஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் காதல் விவகாரம் காரணமாக அடிவாங்கிய சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மாம்பழம் சந்தி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருடன் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பழகி வந்துள்ளார்.

இவர்கள் இருவரின் தொடர்பு குறித்த பெண்ணின் வீட்டிற்கு தெரியவந்ததையடுத்து, குறித்த பெண்ணின் தாயார் பொலிஸ் உத்தியோகத்தரிடம் தனது மகளைப் போன்று பேசி வீட்டிற்கு அழைத்துள்ளார்.

தன்னுடன் பழகும் பெண் அழைத்தாக நம்பிய பொலிஸ் உத்தியோகத்தர், பெண்ணின் வீட்டிற்கு சென்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த குறித்த பெண்ணின் சகோதரன் மற்றும் தாயார் இணைந்து பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியுள்ளனர்.

இந்த தாக்குதலிலிருந்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தப்பியோடி யாழ். பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளதாக தெரியவருகிறது. (எ-4,11)




# சிதம்பர தரிசனம்

## பாமணக்கும் தமிழாலே பாடித் தொழுகின்றேன்

ஆனைத்தோல் புலித்தோலால் அங்கம் மறைத்தானை
வானை அளந்தானை வண்டமிழைக் காப்பானை
வில்லடியும் கல்லடியும் சொல்லடியும் விருப்பமுடன்
நல்லடியாய்ப் பெற்றானை நச்சரவம் பூண்டானை
நிலவுத் தலையானை நீள்முடிகள் கலையானை
கலைகள் வளர்ப்பானைக் காரைச் சிதம்பரனை
சோம சுந்தரனைச் சுகமூட்டும் தூயவனைப்
பாமணக்கும் தமிழாலே பாடித் தொழுகின்றேன்.

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

(ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று (2013-12-13) 5-ம் நாள் திருவெம்பாவைத் திருநாள்)

(சி-5731)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நலனில் அக்கறை...

மனித உரிமைகள் பற்றி நன்கு உணர்ந்த சமூக சமுதாய அமைப்புகளின் செயற்பாடுகள் பற்றி நன்றாய் அறிந்த, படித்த, பண்புள்ள மனிதத்துவ கலாசார மிக்க ஒருவர் ஆளுநராக உடனே நியமிக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் நாளும் இறுதி நாளுமான நேற்றைய வாசிப்பில் வரவு செலவுத் திட்ட ஏற்புரையின் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் (நேற்று) 2014ஆம் ஆண்டுக்கான எமது பாதீடு (பட்ஜெட்) விவாதம் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது.

எமது சகோதர உறுப்பினர்கள் ஆட்சி செய்யும் கட்சி எதிர்க்கட்சி என்று பேதம் பார்க்காமல், தமிழ் பேசும் உறுப்பினர்கள் சிங்களம் பேசும் உறுப்பினர்கள் என்று பேதம் பார்க்காமல் தமிழர்கள் முஸ்லிம்கள் என்று பேதம் பாக்காமல் எமது விவாதத்தை ஒரு சுமுகமான முடிவுக்கு கொண்டு வர தம்மாலான உதவிகளை செய்துள்ளார்கள்.

ஆங்காங்கே நடைபெறும், நடைபெற்றுள்ள தவறான நடவடிக்கைகள் பற்றி பேசினார்கள். வருங்காலம் நன்றாக அமைய நாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பேசினார்கள். பண நெருக்கடியினால் எமக்கு எதையுமே செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தை வெளிப்படுத்தினார்கள்.

இராணுவ பிரசன்னம் எமக்கு ஏற்படுத்தியிருக்கும் அவலங்கள், நட்டங்கள் பற்றி அங்கலாய்த்தார்கள். காணிகள் பறிபோவதைப் பற்றி கண்டித்தார்கள். வினைத்திறன் அற்ற உள்ளூராட்சி சபைகள் பற்றியும் வேறு எமது செயற் கூடங்கள் பற்றியும் மன வருத்தம் தெரிவித்தார்கள்.

இலஞ்சம், ஊழல் மலிந்து வரும் நிலைபற்றி கவலைப்பட்டுக் கூறினார்கள். நடந்து முடிந்த போரினால் ஏற்பட்டுள்ள பாரிய சமூகச் சீர்கேடு பற்றி குறிப்பிட்டார்கள். வட மாகாணத்தில் என்றுமே இல்லாதவாறு இளைஞர் யுவதிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் கலாசார ஒழுக்க சமூக சீரழிவு பற்றியும் நீதி நெறி அறமாகியன அப்பட்டமாக வழுகிச் செல்வதை பற்றியும் குறிப்பிட்டார்கள். காணாமல் போனோர் கைதாகி பல வருடங்கள் சிறையில் வாழும் எம்மவர் பற்றி பேசினார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் என் நோக்கு தூரநோக்காகவே இருந்து வருகிறது. 13ஆவது திருத்தச்சட்டம் எமக்குப் போதுமானதல்ல என்பதையும் அதன் குறைபாடுகளை எடுத்தியம்பியும் எமக்குரிய நியாயமான அதிகாரங்களை வெகுவிரைவில் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியே என்முன் நிற்கிறது.

இருக்கும் சட்டதிட்டங்களை குறை கூறும் அதேநேரம் இருப்பதை எவ்வாறு செயறதிறன் நோக்கி அழைத்துச் செல்லலாம் என்ற கேள்வியும் என் மனதில் பூதாகாரமாக மேலோங்கியுள்ளது.

இனி வருங்காலங்களில் பல சிக்கல்களை நாங்கள் எதிர்நோக்கப் போகின்றோம். அவற்றுக்கு முகம் கொடுப்பது எப்படி என்ற கேள்வியும் எழாமல் இல்லை. அதாவது வெறுமனே சட்டதிட்டங்களை குறைகூறிவிட்டு நாங்கள் எங்கள் பதவிகளை பாதுகாத்துக் கொண்டு வாளாதிருக்கலாம். ஆனால் நாங்கள் எவரும் அதறகாக இங்கு வரவில்லை.

எமது வாக்காளர் பெருமக்களுக்கு போதுமான நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கவும் வட மாகாண மக்கள் என்ற முறையில் எமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கவும் என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணமே எம் ஒவ்வொருவர்மனதிலும்மேலோங்கி நிற்கின்றது என்பதை நான் உணர்கிறேன்.

மாகாண சபைகளுக்கு அரசியல் யாப்பில் வழங்கியிருக்கும் அதிகாரங்கள் இப்போதும் கொழும்பிலிருந்தே பிரயோகிக்கப்படுகின்றன. அவற்றை அடையாளம் கண்டு மாகாண சபைகளுக்கே கையளிக்க வழியமைக்கலாம். தற்போது கொழும்பிலிருந்து கொண்டு மாகாண சபையினர் தம் மக்களுக்கென இயற்றும் நடவடிக்கைகளை கொச்சப்படுத்தப்படக் கூடியதாக இருக்கின்றது. இந் நிலை மக்கள் நலன் கருதி, அதிகாரப் பகிர்வை மனதில் கொண்டு மாற்றியமைக்கப்படலாம்.

தற்போது மாகாண சபைகள் தமக்குத் தேவையான அபிவிருத்தித்திட்டங்களை தாமே தயாரிக்க முடியாமல் இருக்கின்றன. ஏன் என்றால் உரிய அலுவலர்களை நிர்ணயிக்கும், நியமிக்கும் அதிகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் தற்போதுள்ளது.

மேலும் நிதிவழங்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மக்கள நலனை மனதில் கொண்ட மனித உரிமைகள் பற்றி நன்றாய் உணர்ந்த சமூக சமுதாய அமைப்புகளின் செயற்பாடுகளின் நடைமுறைப்பற்றி நன்றாய் அறிந்த படித்த பண்புள்ள மனிதத்துவ கலாசாரமிக்க ஒருவர் ஆளுநராக உடனே நியமிக்கப்பட வேண்டும் என்று கருதுகின்றேன்.

வடமாகாண இராணுவத்தளபதியாய் இருந்து தற்போது தொடர்ந்து அதிகாரத்திலிருக்கும் ஆளுநரை எந்தவிதத்திலும் தாக்காது இந்த வேண்டுதலை விடுக்கின்றேன. பனையின் கீழ் இருந்து பால் குடித்தாலும் அதனை கள் என்றே பார்வையாளர்கள் கணக்கெடுப்பார்கள். இராணுவ மேலதிகாரி ஒருவர் சிவில் பதவி வகித்தால் மக்களின் பார்வை அது போலத்தான் இருக்கும்.

இந்த மூன்று நாட்களும் இந்த விவாதத்தை செவ்வனே நடத்த உதவி புரிந்த எமது தலைமைச் செயலாளர் உள்ளடங்கிய எமது செயலாளர்கள் அனைவருக்கும் முதற்கண் எமது நன்றிகள் உரித்தாகுக.

தலைமைச் செயலாளருடன் எமக்கிருப்பது தனிப்பட்ட முரண்பாடு அல்ல. சட்ட ரீதியாக நாங்கள் கொண்டிருக்கும் முரண்பட்ட நோக்குகளே. அவற்றைப் போக்க மத்திய அரசாங்கம் முன்வர வேண்டும் என்றார். (எ-4)

# இந்திய மீனவர்களுக்கு பரிசோதனை

(திருகோணமலை)

முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யபபட்ட இந்திய மீனவர்கள் 111 பேரும் நேற்று வியாழக்கிழமை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பொது வைத்திய சாலையில் சட்ட வைத்திய அதிகாரி, வைத்தியர் அ.சுஞ்சயன் இவர்களுக்கு வைத்திய பரிசோதனை மேற்கொண்டார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் 15 படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய மீனவர்கள் 111 பேரை கடற்படையினர் கைதுசெய்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள 111 பேரும் திருகோணமலை கடற்படைத்தளத்திற்கு படகுகளுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை அழைத்துவரப்பட்டனர். (எ-11)

# நகர மத்தியிலுள்ள கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விக்டோரியா வீதியிலுள்ள பலசரக்கு கடை ஒன்றில் நேற்று அதிகாலை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஒருதொகுதி பணம் மற்றும் பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான கிற்காட் அட்டைகள் என்பன களவு போயுள்ளன. கடையின் முன்புறத்தில உள்ள கதவினை உடைத்து திருடர்கள் தமது கைவரிசையினைக் காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரண்டாம் வாயிலின் முன்பாகவுள்ள பலசரக்கு கடையிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்களும் ஆயுததாரிகளின் மிரட்டலுடன் கூடிய கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# நேற்றும்...

மீளாய்வு ஸ்தாபனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பதிவு ஆகியவற்றை 2014ஆம் ஆண்டு ஸ்தாபிப்பதற்கான மீளாய்வு பிரேரணை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் சபையில் முன்வைகக்கப்பட்டது.

இதனை வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் வழிமொழிந்தார்.

தொடர்ந்து சபை உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை வடக்கு மாகாண சபையில் இதுவரையிலும் 21 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# உணவுப்...

சாலைகள் போன்றவற்றுக்கு இந்த இலட்சினை விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த இலட்சினையை பெற்றுக் கொள்வதற்கு அதற்குரிய சட்ட திட்டங்களை குறித்த நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-11)

# வடக்குமாகா...

திற்கும் மேலாக இடம்பெற்ற போதும் உள்ளே பேசிய விடயங்கள் உறுதியாகத் தெரியவரவில்லை.

இருந்த போதும் நாட்டின் தற்போதைய நெருக்கடிகள், நில அபகரிப்புக்கள், மாகாணசபையை கொண்டு செல்வதில் உள்ள நெருக்கடிகள் போன்ற பல விடயங்களும் பேசப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-11)

# எதிர்ப்பின்றி நிறை...

கீட்டு பிரேரணையும் நேற்றைய தினம் விவசாயம் மீன்பிடி அமைச்சர்களிற்கான பிரேரணையும் நிறைவேற்றப்பட்டன.

இந் நிலையில் இறுதியும் மூன்றாவது நாளான நேற்றைதின்ம் கடந்த 3 நாட்களிலும் இடம்பெற்ற வரவு செலவுத்திட்டம் தொடர்பான ஏற்புரையினை நேற்றையதினம் ஆற்றியிருந்தனர்.

இதன்போது ஒரு சில சிறு மாற்றங்களினை மட்டும் ஏற்படுத்தி முதலமைச்சர் தனது ஏற்புரையினை ஆற்றியிருந்தார்.

இதன்பின்னர் முதலமைச் சரினால் முன்மொழியப்பட்ட ஒட்டு மொத்த வரவு செலவுத்திட்ட அங்கீகாரத்தினையும் சபை உறுப்பினர் தவநாதன் வழிமொழித்தார்.

இவ் வழி மொழிதலினையடுத்து 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக எதிர்ப்பின்றி அங்கீகரிக்கப்படுகின்றது என அவைத்தலைவர்சீ.வீ.கேசிவ ஞானம் உத்தியோபூர்வமாக அறிவித்தார். (எ-4)

வங்கிசார் ஊழியர்களுக்காக CBF கற்கைநெறிகள் தனியாக கற்பித்து கொடுக்கப்படும். (4831)
தொடர்புகளுக்கு: 077 358 6563

தேவை
கட்டிட நிர்மாணத் துறையில் பல வெற்றிடங்கள். கொழும்பை அண்மித்த பல பிரதேசங்களிலும் யாழ்/உடையார்கட்டு/ கண்டி/ திருகோணமலை/ மட்டக்களப்பு பிரதேசங்களில் மேசன், தச்சு, சட்டறிங் (1000 - 1500/- வரை) கையுதவியாளர்கள் (800 - 1200 /- வரை) தினமும் கைச்செலவு, தங்குமிட வசதி உண்டு. விபரங்களுக்கு அழைக்கவும்
077 556 1883
(சி-5739)

# பொதுமக்கள் பகுதி...

வுக்கு சமர்ப்பித்துள்ளார். அந்த அறிகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் போர்ப் பகுதிகளைப் பொறுத்தவரை அங்குள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் உடல் ரீதியான தன்னாதிக்கம், அவர்களது இனப்பெருக்கத்துக்கான உரிமை ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், காணிகளுக்கான உரிமை பாதுகாக்கப்படுவதுடன், உரிய விகிதத்தில், தேசிய பாதுகாப்புக்கான இராணுவ கரிசனைகளும், பொதுமக்களின் நடமாடுவதற்கான, வாழ்வதற்கான இடத்தை தேர்வு செய்வதற்கான உரிமையும் சமநிலையில் பேணப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் விபரங்களில் வெளிப்படைத்தன்மை பேணப்படுவதுடன், பொதுமக்கள் செயற்படும் இடங்களில் இருந்து இராணுவம் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும்.

கடந்த 30 வருட போரினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கான ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

போருக்குப் பின்னர் நிவாரண நடவடிக்கைகளில் இருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாறுகின்ற காலப்பகுதியில், இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளை அரசாங்கமும், வளர்ச்சிக்கான செயற்பாட்டாளர்களும் மேற்கொள்ள வேண்டும் என்றும் சாலோகா பெயானி தெரிவித்துள்ளார்.

போரில் இடம்பெயர்ந்த அகதிகளை மீளக்குடியமர்த்த அரசாங்கம் கணிசமான நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும், கணிசமான தொகையினர் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையிலேயே தொடர்வதாகவும், இருப்பிடங்களுக்கு திரும்பிய பலர் மோசமான நிலையில் இன்னமும் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# பிரதமரை...

யிட்டிருக்க வேண்டும் என்றும் சோபித தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை.

எனவே, போதைப் பொருள் கடத்தலுடன் அவருக்கும் தொடர்பு இருக்கின்றமை புலனாகியுள்ளது.

பிரதமரை கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் என்று பொலிஸ் மா அதிபரிடம் கோரி நிற்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# வடக்கு மாகாண சபை...

அரசியலமைப்புக்கு எதிரானது.

வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு நான் ஒப்புதல் வழங்கியிருந்தேன். அத்துடன், அரசியலமைப்புக்கு இணங்கவே மாகாணசபையால் அதிகார சபைகளை உருவாக்க முடியும் என்ற குறிப்பையும் அவர்களுக்கு அனுப்பியிருந்தேன்.

அவர்கள் வீடமைப்பு திணைக்களம் மற்றும் போக்குவரத்து திணைக்களம் என்பனவற்றை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

அரசியலமைப்பின் படியும், உறுப்பினர்களுக்கான தேசிய கொள்கைப்படியும் செயற்படும்படி அவர்கள் எதிர்பார்க்கப்படுவதாக அவர்களுக்குகூறிக்கொள்ள வேண்டியுள்ளது.

வடக்கு மாகாணசபை திணைக்களங்களை உருவாக்க முயற்சிக்கும் போது அரசியலமைப்பு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

சில நிர்வாக அலகுகள், கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு ஜனாதிபதியின், மாகாண ஆளுநரின், மாகாண முதல்வரின் அனுமதி தேவை.

அவர்களால் மட்டுமே, போக்குவரத்து, வீடமைப்பு அதிகார சபைகளை உருவாக்க முடியும் என்று கூறியுள்ளேன்.

அவர்களின் வரவு செலவுத்திட்ட விவாதம் முழுவதும் வடக்கு மாகாணசபைக்கு ஒரு சிவிலியன் ஆளுநர் தேவை என்பதை மையப்படுத்தியதாகவே இருந்தது.

ஒரு இராணுவ பின்னணி கொண்ட ஆளுநர் தேவையில்லை என்கின்றனர். இராணுவ அல்லது சிவில் ஆளுநர் எவராயினும் அரசியலமைப்புபடியே செயற்படமுடியும்.

அவர்கள் சொல்வதற்கு ஆமாம் என்று தலையாட்டக் கூடிய, மாகாண சபை பற்றிய எந்த அறிவுமில்லாத ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டால் தான் அவர்கள் மகிழ்ச்சி கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.